# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

## DIRECTORATE OF DISTANCE & CONTINUING EDUCATION
TIRUNELVELI 627012, TAMIL NADU

# B.Litt. - III YEAR

## DJL33 - நாட்டுப்புறவியல்
(From the academic year 2016-17)

**M**ost **S**tudent friendly **U**niversity - Strive to Study and Learn to Excel

For more information visit: *http://www.msuniv.ac.in*

# DJL33 - நாட்டுப்புறவியல்

## பாடத்திட்டம்

அலகு 1 நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம் - சில வரையறைகள்

அலகு 2 நாட்டுப்புறவியல் வகைமைகள்

1. வாய்மொழி வழக்காறுகள்
2. வாய்மொழி சாரா வழக்காறுகள்
3. சமூக பழக்க வழக்கங்கள்
4. நிகழ்த்து காலைகள்
5. பொருள் சார் பண்பாடு

அலகு 3 வாய்மொழி வழக்காறு

1. வாய்மொழிப் பாடல்கள்
2. வாய்மொழிக் கதைகள்
3. பழமொழி
4. விடுகதை

அலகு 4 சமூக பழக்கவழக்கங்கள்

1. உணவு
2. உடை
3. அணிகலன்கள்

அலகு 5 நிகழ்த்து கலைகள்

1. வில்லுப்பாட்டு

2.கணியான் கூத்து

3. களியல் ஆட்டம்
4. தோல்பாவை நிழற்கூத்து

**பாட நூல்கள் :**

1. “நாட்டார் வழக்காற்றியல் :

சில அடிப்படைகள் - தே. லூர்து

2. “நாட்டுப்புற இயல் ஆய்வு”

- டாக்டர் சு. சக்திவேல்

**பார்வை நூல்கள் :**

1. நாட்டுப்புறக் கலைகள் :

- டாக்டர் ஆறு. இராமநாதன்

2. ‘‘தமிழில் கதைப்பாடல்கள்’’

- முனைவர் அ.கா. பெருமாள்

3. ‘‘தமிழர் பழக்க வழக்கங்களும் - நம்பிக்கைகளும்’’

- முனைவர் கா. காந்தி

4. ‘‘நாட்டார் வழக்காற்றியல் அரசியல்’’

- ஆ. சிவசுப்பிரமணியன்

# நாட்டுப்புறவியல்

## அலகு -1

### நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம் - சில வரையறைகள்

**முன்னுரை:**

நாட்டுப்புற மக்களே ஒரு நாட்டின் உண்மையான நாகரிகம், பண்பாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றைக் காட்டும் வாழ்கையினை உடையவராவர். மனித இனம் தோன்றிய அன்றே நாட்டுப்புற இலக்கியங்களும், நாட்டுப்புற கலைகளும் தோன்றிவிட்டன எனக் கருதலாம். கிராமமாக இருந்தாலும் நகரமாகயிருந்தாலும் அங்கங்கு வாழும் ஒரு குழு அல்லது பிரிவினரால் வெளிப்படுத்தப்பெறும் தொன்றுதொட்ட வாய்மொழி வழக்குடைய கலைஇலக்கிய வாழ்க்கைக் கூறுகளை ஆராயும் இயல், நாட்டுப்புறவியல் என்றும் நாட்டார் வழக்காற்றியல் என்றும் வழங்கப் பெறுகின்றன.

**நாட்டுப்புறவியல் என்றால் என்ன?**

நாட்டுப்புற மக்களின் பழக்கவழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுப்புறவியலாகும். ஒரு நாட்டின் வாழ்வையும், வரலாற்றையும், குறையையும் நிறையையும் தெளிவாகக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், பழமையான எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டும் கண்ணாடியாகும், நாட்டுப்புற மக்களது உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாட்டுப்புறப்பாடல்களிலே காணலாம். இவைகள் ஏட்டில் ஏறாவிடினும் எழுத்திலே வாராவிடினும் பாட்டிலே இடம் பெறாவிடினும் நம் நெஞ்சிலிருந்து மட்டும் நீங்காது நிற்கும்.

**நாட்டுப்புறவியல் அல்லது நாட்டார் வழக்காற்றியல் என்ற கலைச் சொற்கள் எவ்வாறு தோன்றியது?**

நாட்டுப்புற வழக்குகள் பற்றி அறிவியல் அடிப்படையில் ஆராயும் இயல் நாட்டுப்புறவியலாகும். ‘நாட்டுப்புறவியல்’ என்று கல்விப் புலங்களில் பயன்படுத்தும் சொல்லுக்கு மாற்றாகவே நாட்டார் வழக்காற்றியல் என்ற சொல் இங்குப் பயன்படுத்தப்படுகிறது. ‘Folk Lore’ என்ற சொல் உருவாவதற்கு முன் இத்துறை பற்றி பல சொற்கள் வழக்கில் இருந்தன.

நாட்டுப்புற இயலை நாட்டுப்புற மக்களின் மரபுபட்ட படைப்புகள் (Traditional Creations) என்பர். பொது மக்களைச் சார்ந்த மரபு முறைகள் (Popular antiquities) என்ற பெயரிலும், மக்கள் இலக்கியம் (Popular Literature) என்ற பெயரிலும், பொதுப் புராணவியல் (Common mythology) என்ற பெயரினும், எஞ்சியது (Remains) என்ற பெயரிலும் வழங்கி வந்தது. 19-ஆம் நூற்றாண்டினரான ஆங்கிலேய அறிஞர் வில்லியம் ஜான் தாமஸ் 'Popular Antiquities' என்ற இலத்தீன் பதத்திற்கு மாற்றீடாக 1846 ல் 'Folk Lore' என்ற தொடரை உருவாக்கினார். விவசாய வகுப்பினரின் மரபுகளிலும் பழங்காலப் பண்பாடுகளிலும் எஞ்சி நிலைத்து நிற்கும் அறிவுபூர்வமான எச்சங்களைக் குறிப்பிட அப்பதத்தை உருவாக்கினார் "அம்புரோஸ் மெர்ட்டன்" என்ற புனைப் பெயரில் 'அதேனியம்' (Athenaeum) என்ற இதழுக்கு அவர் ஒரு மடல் எழுதினார். மனிதனின் பழக்கங்கள், வழக்கங்கள், சடங்கு முறைகள், மூடநம்பிக்கைகள், பழ மொழிகள், கதைப்பாடல்கள், பழங்கால வழக்காறுகள் முதலியவற்றை அத்தொடர் குறிப்பதாக அவர் கூறினார். பல்வேறு வழக்காறுகளையும் இக்கூற்று எண்ணிச் சொல்வதால் இதனை எண்ணிக்கை வரையறை (enumerative definition) என்பர். அதாவது பழங்காலப் பண்பாட்டு எச்சங்களே (Cultural Survivals) நாட்டார் வழக்காறுகள் என்று அவர் கருதினார். ஆனால் இன்று அத்தொடர் பல்வேறு மக்களிடையே பல்வேறுபட்ட பொருண்மைகளைப் பெற்று விட்டது. இருப்பினும் தாமஸ் முன்மொழிந்த அத்தொடர் பல்வேறு நாட்டினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனைத்துலக அறிவியல் கலைச்சொல்லாகிவிட்டது.

**'Folk Lore' - அகராதிப் பொருள்**

Folk Lore என்னும் இரு சொற்களைக் கொண்டு Folk Lore என்ற தொடர் உருவாக்கப்பட்டது முதலில் இச்சொற்களுக்கான அகராதிப் பொருள்ளைக் காணலாம்.

**Folk :** இச் சொல்லுக்கு அகராதிகள் மக்கள் (People) நாடு (nation) இனம் (race) என்ற பொருள்களையே தருகின்றன. சாதாரணமாகப் பன்மையில் கையாளும் போது ஒரு குறிப்பிட்ட குழு அல்லது பிரிவைச் சேர்ந்த மக்கள் (People of a particular group of class) என்று கூறப்படுகிறது.

**Lore:** இச் சொல்லுக்கு அகராதி கற்றல் அறிவு சிறப்பாகப் பழங்காலத்திலிருந்து வழிவழியாக வழங்கி வருகிறது அல்லது ஒரு பிரிவு மக்களின் உடைமை என்று பொருள் கூறுகின்றது.

அகராதி அடிப்படையில் நோக்கினால் 'Folk, Lore' என்ற சொற்கள், மக்களுடைய அல்லது நாட்டினுடைய அல்லது ஒரு இனத்தினுடைய, கற்றல் மற்றும் அறிவு சிறப்பாகப் பழங்காலத்திலிருந்து வழிவழியாக வழங்கி வருவது என்ற பொருளைத் தருகின்றன.

Folk Lore என்பது Folk, Lore என்ற இரு சொற்கள் இணைந்ததாகும் 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் Folk என்ற சொல் விவசாய மக்களைக் குறித்து, பின்னர் படிப்பறிவில்லாத நாட்டு மக்களைக் குறித்தது. பொதுவான தொழில், மொழி, சமயம் முதலியவற்றைப் பின் பற்றும் குழுவை குழடம என்பா, பொதுவாக கிராமப்புற, படிப்பறிவில்லாத மக்களைக் குறிக்கும். Lore என்பதற்கு "மரபுச் செய்தித் தொகுதி" என்றும் "வழக்காறு" என்றும் பொருள் கொள்ளலாம். Folk Lore என்பது நாட்டுப்புற மக்களின் அறிவு எனப் பொருள்படும். நாட்டுப்புற வழக்காற்றை குழடம டுழசந என்றும் நாட்டுப்புற வழக்காற்றை ஆராயும் ஆய்வை 'Folk Loristics என்றும் கூறலாம். எல்லா ஐரோப்பிய மொழிகளிலும் இச் சொல்லின் ஆதிக்கத்தைக்காணலாம். ஜெர்மன் மொழியில் **die folklore** என்றும் பிரெஞ்சு மொழியில் Lefolklore என்றும் இத்தாலி மொழியில் ஸ்பான்ஷ் மொழியில் ilfolklore என்றும் ரஷ்ய மொழியில் 'Folk lore' என்றும் வழங்கி வருவதைக் காணலாம்.

வில்லியம்- பாஸ்கம் என்ற மானிடவியல் பேரறிஞர் 'Verbal art' என்ற சொல்லை உருவாக்கினார். 'Verbal art' வாய்மொழிக்கலை என்றும், Non-verbal art வாய்மொழி சாராக் கலை என்றும் உருவாக்கினார். ஆனால் இச்சொல் நீண்ட நாட்கள் வழக்கில் 'இல்லை. Folk lore' என்ற சொல்லே நிலைத்து வழக்கில் பயின்று வருகின்றது. தமிழில் 'நாட்டார் வழக்காற்றியல், நாட்டுப்புறவியல், 'நாட்டுப்பண்பாட்டியல்' என வழங்கப்பட்டாலும் 'நாட்டுப்புற வியல் என்பதே பெருவழக்காக நிற்கின்றது.

**சிலவரையறைகள்:**

மரியாலீச் என்பவர் வெளியிட்ட நாட்டார் வழக்காற்றியல் அகராதியில் இருபத்தோரு வரையறைகள் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை நாம் அறிந்து கொள்ளுதல் சாலச் சிறந்தது.

“நாகரிகம் வாய்ந்த மக்களின் மரபுவழி வந்த படைப்புகளும், நாகரிகமற்ற பழங்குடி ˙ (Primitive) மக்களின் மரபு வழிப்படைப்புகளும் நாட்டார் வழக்காற்றியலாகும். இவை ஒலிகளையும் சொற்களையும் ஒருவித ஓசையமைப்புக்கு உட்படுத்தி அமைக்கப்பட்டவையாகும். மேலும் மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், நிகழ்த்துதல்கள், (Performances) நடனம், நாடகங்கள் முதலியவையும் இதற்குள் அடங்கும். நாட்டார் வழக்காற்றியல் நாட்டார் பற்றிய ஓர் அறிவியல் அல்ல. ஆனால் மரபு சார்ந்த நாட்டார் தம் அறிவியல், மரபு சார்ந்த நாட்டார் தம் பாடல் பற்றிய அறிவியல்” என்கிறார் ஜோனாஸ் பாலிஸ்

வில்லியம்பாஸ்கம் என்ற மானிடவியலர் கருத்து வருமாறு, “மானிடவியலில் நாட்டார் வழக்காற்றியல் என்ற தொடர், புராண மரபுக்கதைகள், பழமரபுக் கதைகள், (legends) நாட்டார் கதைகள், பழமொழிகள், விடுகதைகள், பாடல்கள். (Verses) கலைத்திறம் வாய்ந்த, வாய்வழியாகப் பரப்பப்படும் சில வடிவங்களையும் உள்ளடங்கிய பொருளை உணர்த்துகிறது. ஆதலின் வாய்மொழிக்கலையே (Verbal art) நாட்டார் வழக்காற்றியல் என்று வரையறுக்கலாம். நாட்டார் வழக்காற்றியலர் என்று சொல்லப்படும் ஒரு முக்கியக் குழுவினர் கலைகள், கைத்தொழில்கள், உடைகள், வீட்டுவகைகள், வழக்கங்கள், நம்பிக்கைகள், சமையற்கலை முதலியவற்றில் ஆர்வமிக்கவராக இருப்பதை மானிடவியலர் உணர்ந்தனர். ஆனால் உலகின் பல்வேறு பட்ட முதுபழங்குடி மக்கள் பற்றிய அவர்தம் கல்வியில் (துறையில்) மேற்குறிப்பிட்ட பல்வேறு வகைகளையும் புழக்கப் பொருள்களால் அறியும் பண்பாட்டில் (material Culture) வரையுருவக் கலைகள் குழைத்து செய்யப்படும் சிற்பம் (Graphic arts) மட்பாண்டம் முதலிய கலைகளையும் தொழில்நுட்பவியல், பொருளியல், சமுதாய, அரசியல் அமைப்புகள், சமயம் என்ற பகுதிகளில் அடக்கிப் “பண்பாடு” என்ற பொது

பகுதியில் சேர்த்து ஆய்வு செய்யப்பட்டதையும் அறிந்தனர். இருப்பினும் பண்பாட்டின் ஒரு முக்கியப் பகுதி மேற்குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் அடங்காமையை உணர்ந்தனர். அதனை நாட்டார் வழக்காற்றியல் என்று தனியாக வகைப்படுத்தினர். நாட்டார் வழக்காற்றியலின் எல்லா வடிவங்களும் எழுதப்பட்ட இலக்கியத்துடன் கண்டிப்பாகத் தொடர்புடையது என்று வரையறுக்கப்பட்டது ஆனால் கல்வி அறிவுள்ள ஒரு சமூகத்திலும் கூட நாட்டார் வழக்காற்றியல் எழுதப்படாமலேயே திகழும். மேலும் எழுத்து வடிவம் என்பதை அறியாத சமூகத்திலும் அது நிலை பெற்றிருக்கும். இலக்கியத்தைப் போல் நாட்டார் வழக்காற்றியலும் இசை, நடனம், வரையுருவக்கலை குழைமக்கலை (Graphic & plastic) முதலியவற்றுடன் தொடர்புடைய ஒன்றாகும், ஆனால் வெளிப்படுத்தும் முறையில் வேறுபட்டதாகும்” என்று அவர் கூறுகிறார்.

“நாட்டார் வழக்காற்றியல் (Folk lore) என்ற சொல் ஒரு நூற்றாண்டுப் பழமை வாய்ந்தது எனினும் அதன் பொருள் குறித்து அறிஞரிடையே சரியான கருத்தொருமைப்பாடு ஏற்படவில்லை. நாட்டார் வழக்காற்றியலில் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட ஒரு பொதுக்கருத்து, அது மரபு சார்ந்தது என்பதாகும், அதாவது ஒருவனிடமிருந்து மற்றொருவனுக்கு கர்ண பரம்பரையாகச் சொல்லப்பட்டு எழுத்துச் சான்றாக நிலைபெற்றிருப்பதை விட நினைவாற்றல், வழக்கம் முதலியவற்றால் பாதுகாக்கப்பட்ட ஒன்றாகும். நடனங்கள், பாடல்கள், கதைகள், பழமரபுக்கதைகள், மரபுச் சடங்குகள், (Tradition) நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள், உலகெங்கும் உள்ள மக்களின் பழமொழிகள் எல்லாம் நாட்டார் வழக்காற்றியலில் அடங்கும். வழக்கங்கள் பற்றிய செய்திகள், வழிவழிவந்த விவசாயக் குடும்பப் பழக்கங்கள், கட்டிட வகைகள், புழுங்கும் பொருள் வகைகள் (Utensils) சமுதாய அமைப்புகளின் மரபுவழி இயல்புகள் முதலியவையும் நாட்டார் வழக்காற்றியலுள் அடங்கும். ஆனால் மேற்குறிப்பிட்ட வற்றில் பிந்தியவை ஒரு பழங்குடி அல்லது கல்வியறிவற்ற ஒரு சமூகத்தினரிடையே காணப்பட்டால் அவற்றை நாட்டார் வழக்காற்றியலில் அடக்குவதைவிட இன ஒப்பியலில் (Ethnology) அடக்குவது நலம். பிந்திய இப்பாகுபாடு வசதிக்காக அமைக்கப்பட்டதே தவிர எல்லோராலும் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மேலே குறிப்பிடப்பட்டவையெல்லாம் அறிஞரால் நாட்டார் வழக்காற்றியல்

என்று கருதப்படுகிறது. ஏனெனில் அவையெல்லாம் உண்மையில் மரபு சார்ந்தவையாம்" என்று ஸ்டித்தாம்சன் குறிப்பிடுகிறார்.

மேலும் பி.ஏ. போட்கின் என்ற அறிஞர், "எழுத்து வழக்கற்ற வாய்மொழி சார்ந்த பண்பாட்டில் (Oral Culture) எல்லாமே நாட்டார் வழக்காற்றியலாம்." என்கிறார்.

மேலே நாம் கண்ட நான்கு வரையறைகளும் ஒன்றிற்கொன்று மாறுபட்டவை. இருப்பினும் ஒரு சில கருத்துக்களில் ஒற்றுமை இருப்பதையும் நம்மால் உணர முடிகிறது. இதுவரை நாட்டார் வழக்காற்றியலை வரையறுக்க முயன்ற அனைவருமே அதன் புறப்பண்புகளை (External Criteria) அடிப்படையாகக் கொண்டே வரையறுக்க முயன்றுள்ளனர். இருபத்தோரு வரையறைகள் மட்டுமல்லாமல் இன்னும் பல வரையரைகள் காணப்டுகின்றன இந்த வரையறைகளெல்லாம் ஆறு வகையான அலகுகளைக் கொண்டே உருவாக்கப்படுகின்றன.

1. வாய்மொழியாகப் பரப்பப்படுவது.
2. மரபு வழிப்பட்டது.
3. ஆசிரியற்றது.
4. ஒரு வித வாய்ப்பாடுகளுக்குள் அடங்குவது
5. ஒரு குழுவினரால் (நாட்டாரால்) பகிர்ந்து கொள்ளப்படுவது
6. பல்வேறு வடிவங்களாகத் திரிபடைவது (Variants)

நாட்டார் வழக்காறுகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவன, மரபுவழிப்பட்டன., எழுத்திலன்றிக் கர்ணபரம்பரையாகக் சொல்லப்படுவன என்பர். "நாட்டார் வழக்காறுகள் மக்களின் வாய்வழியே பல தலை முறைகள் வாழ்ந்தனவாக இருக்க வேண்டும்" என்கிறார் ரிச்சர்ட். எம். டார்சன் . ஆனால் "நாட்டார் வழக்காறுகள் எல்லாம் வாய்மொழியாக வெளிப்படுத்தப்படுவன; எனினும் வாய்மொழிவழி வெளிப்படுத்தப்படுவனவெல்லாம் நாட்டார் வழக்காறுகள் அல்ல" என்கிறார் வில்லியம் பாஸ்கம்

## பயிற்சி வினாக்கள்

### I. ஒரு பக்க வினாக்கள்:

1. நாட்டுப்புறவியல் என்றால் என்ன?
2. நாட்டுப்புறவியல் அல்லது நாட்டார் வழக்காற்றியல் என்ற கலைச் சொற்கள் எவ்வாறு தோன்றியது?
3. Folk lore - அகராதிப் பொருள் - கூறுக.
4. நாட்டுப் புறவியல் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை எழுதுக.
5. நாட்டுப்புறவியலின் தோற்றம் குறித்து விளக்குக.

### II. கட்டுரை வினாக்கள்

1. நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம் விவரிக்க:
2. நாட்டுப்புறவியல் - சில வரையறைகள் குறித்து அறிஞர்களின் கருத்துக்களை விளக்குக.

## அலகு – 2 நாட்டுப்புறவியல் வகைமைகள்

**முன்னுரை :**

நாட்டார் வழக்காறுகளை வாய்மொழி வழக்காறுகள், வாய்மொழிசாரா வழக்காறுகள், சமூக பழக்கவழக்கங்கள், நிகழ்த்துகலைகள், பொருள்சார் பண்பாடு என ஐந்து வகையாகப் பகுப்பர். இவற்றுள் வாய்மொழி வழக்காறு என்பதில் நாட்டார்பாடல்கள், வாய்மொழிக்கதைகள், பழமொழிகள், விடுகதைகள், கதைப்பாடல்கள் ஆகியன அடங்கும். வாய்மொழிசாரா வழக்காறுகள் என்பதில் இசை, சைகை, நடனம், ஆடை, அணிகலன்கள், கோலம், விளையாட்டுகள், நிகழ்த்துக்கலைகள் ஆகியன அடங்கும். சமூகப் பழக்கவழக்கங்கள் என்பதில், நாட்டார்சமயம், மக்களிடையே இடம் பெற்றுள்ள நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், வழிபாட்டுமுறை என்பனவெல்லாம் அடங்கும். நிகழ்த்துகலைகள் என்பதில் நிகழ்த்தப் படும் நாட்டார் கலைகள் அடங்கும். பொருள்சார் பண்பாடு என்பதில் பொருள்களும் அவை சார்ந்த பண்பாடும் ஆகும்.

### வாய்மொழி வழக்காறுகள் :

**நாட்டுப்புறப்பாடல்கள் (நாட்டார் பாடல்கள்) :**

நாட்டுப்புறவியலில் நாட்டுப்புறப்பாடல்களைப் பற்றி அதிகமான நூல்களும், ஆய்வுகளும் வெளிவந்துள்ளன. சார்லஸ்கோவர் தென்னிந்திய நாட்டுப்புறப்பாடல்கள் என்றொரு நூலை வெளியிட்டுள்ளார். இந்தியாவிலேயே நாட்டுப்புறப்பாடல் குறித்து வெளிவந்த முதல் நூல் இதுவாகும். மு.அருணாசலம் அவர்களால் “காற்றிலே மிதந்த கவிதை” என்ற பெயரில் முதல் நாட்டுப்புறப்பாடல் தொகுதி வெளியானது. இவர் “தாலாட்டு இலக்கியம்” என்ற நூலில் தாலாட்டின் தோற்ற வளர்ச்சியை ஆராய்ந்துள்ளார்.

தமிழகத்திலுள்ள நாட்டுப்புறவியல் பேரறிஞர்களில் கி.வா. ஜெகந்நாதன் அவர்களுடைய ஆய்வு முன்னுரையுடன் தஞ்சை சரசுவதி மகால் “மலையருவி” என்ற பெயருடன் வெளியிட்டது. கி.வா. ஜெகந்நாதன் ஆயிரக்கணக்கான பாடல்களைக் கலைமகள் இதழில் வெளியிட்டுள்ளார். “நாடோடி இலக்கியம்” என்ற இவரது நூலில், நாட்டுப்புறப்பாடல்களை ஆய்வு செய்துள்ளார்.

த.ந.சுப்பிரமணியம் நாட்டுப்புறப்பாடல்களைத் தொகுத்து "காட்டு மல்லிகை" என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். தமிழண்ணல் தாலாட்டுப் பாடல்களைத் தொகுத்து "தாலாட்டு" எனும் நூலை வெளியிட்டுள்ளார்.

தமிழக நாட்டுப்புறவியலின் தந்தை எனக் கருதப்படும் நா.வானமாமலை அவர்கள் நாட்டுப்புறவியலை அறிவியல் முறையில் ஒரு துறையாக வளர்வதற்குப் பாடுபட்ட பேரறிஞராவார். "ஆராய்ச்சி" இதழ் மூலம் நாட்டுப்புறவியல் ஆய்வாளர்களை ஊக்குவித்தவர். "தமிழர் நாட்டுப் பாடல்கள்" என்ற நூலை இவர் வெளியிட்டுள்ளார்.

செ.அன்னகாமு அவர்கள் நாட்டுப்புறப்பாடல்களைத் தொகுத்து "ஏட்டில்எழுதாக் கவிதைகள்" என்ற பெயரில் வெளியிட்டுள்ள நூல் அறிஞர்கள் பலரின் பாராட்டைப் பெற்ற நூலாகும். ஆர்.அழகப்பன் "நாட்டுப்புறப்பாடல்கள் திறனாய்வு" என்ற நூலை எழுதியுள்ளார். இவர் "தாலாட்டுக்கள் ஐந்து" என்ற நூலும் எழுதியுள்ளார்.

தே.லூர்து அவர்கள் "நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள்" என்ற நூலை இயற்றியுள்ளார். இவரே நாட்டுபுறவியல் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து "நாட்டார்வழக்காற்றியல் ஆய்வு" என்ற பெயரில் பதிப்பித்துள்ளார்." நாட்டார்வழக்காற்றியல் களஆய்வு" என்ற இவரது நூல் சிறப்பாகப் பேசப்படுகிறது. தே. லூர்து அவர்கள் நாட்டார் வழக்காற்றியல் துறை வளர்ச்சிக்கு முழுமூச்சுடன் ஈடுபட்டுத் தன்னை அர்ப்பணித்து வருகிறார்.

அடுத்து, நாட்டுப்புறவியல் துறைக்கு தமது வாழ்வை அர்ப்பணித்து வருபவர் சு. சண்முகசுந்தரம் ஆவார். இவர் " தமிழக நாட்டுப்பாடல்கள்" தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள்" முதலிய நூல்களை இயற்றியுள்ளார். சரஸ்வதி வேணுகோபால் அவர்கள் தமது டாக்டர் பட்ட ஆய்வேட்டை "நாட்டுப்புறப்பாடல்கள் சமூக ஒப்பாய்வு" என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். களஆய்வில் சில அனுபவங்கள் என்றநூலும் வெளியிட்டுள்ளார், இன்னும் ஏராளமான அறிஞர்கள் நாட்டுப்புறப்பாடல்கள் குறித்து பல நூல்களை வெளியிட்டுள்ளனர்.

## 2. வாய்மொழிக்கதைகள் (நாட்டார் கதைகள்)

தமிழில் 1867ம் ஆண்டு வீரச்சாமி நாயக்கர் "மயில்ராவணன் கதை''யைப் பதிப்பித்தார். சி. மாணிக்க முதலியார், "கதாசிந்தாமணி"யை (மரியாதை ராமன் கதை) வெளியிட்டார். புஸ்பரத செட்டியார் நாட்டுப்புறக்கதைகளைச் சேகரித்து "வினோதரமஞ்சரி" என்ற பெயரில் வெளியிட்டுள்ளார். கஸ்தூரி அய்யங்கார் (1983) அனவரத விநாயகம் பிள்ளை (1953) எஸ்.லீலா (1971)ல் ஏ.எல்.நடராஜன் (1975) ஆகியோர் "பஞ்சதந்திரக்கதை" களை வெளியிட்டனர். வாணன். உலகிலுள்ள நாட்டுப்புறக்கதைகளைச் சேகரித்து "உலக நாடோடிக் கதைகள்" என்ற பெயரில் ஒரு நூல் வெளியிட்டார். ஆறு. இராமநாதன் அவர்களும், கே.எம். பக்தவச்சலம் அவர்களும் "தென்னாலிராமன் கதைகளை" வெளியிட்டனர். வி.கோவிந்தன் என்பவர், "பழங்காலக் கதைகள்" தமிழ்நாட்டு பழங்கதைகள்" என்ற நூல்களை வெளியிட்டுள்ளார். கி. ராஜநாராயணன் அவர்கள், "தமிழ்நாட்டு நாடோடிகள் கதைகள்" "தமிழ்நாட்டுக் கிராமியக் கதை" "வயது வந்தவர்களுக்கு மட்டும்" முதலான நூல்களை வெளியிட்டுள்ளார். நாட்டுப்புறக் கதைகளைப் பற்றி மேலும் பல அறிஞர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

## 3. பழமொழிகள்:

1842ஆம் ஆண்டு பெர்சிவல் என்பவர் முதன்முதலில் பழமொழிகளை வெளியிட்டார். வேணுகோபால் நாயுடு "பழமொழி புத்தகம்" என்ற நூலை வெளியிட்டார். ஜான் லாசரஸ் அவர்கள் ஆறாயிரம் பழமொழிகளைச் சேகரித்து நூலாக்கியுள்ளார். பார்த்தசாரதி பிள்ளை "பழமொழித்திரட்டு" என்ற பெயரில் நூல் வெளியிட்டுள்ளார். "தமிழகப்பழமொழிகள்," "வாழ்வியல் பழமொழிகள்" என்ற பெயர்களில் கே.எஸ். இலட்சுமணன் நூல்களை வெளியிட்டுள்ளார். இவரே உலகப் பழமொழிகளையும் தொகுத்துள்ளார். ரா.பி. சேதுப்பிள்ளை, எஸ்.கே. நாயர், மாரியப்பாபட், என். வெங்கட்ராமன் ஆகியோர் தென் திராவிடப் பழமொழிகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

பழமொழிகள் மூலம் தமிழ்ப்பண்பாட்டை ஆராய்ந்துள்ளார். செந்துரைமுத்து பூவை ஆறுமுகம் பகுத்தறிவுப் பழமொழிகளைத்

தேர்ந்தெடுத்து தொகுத்துள்ளார். தமிழ்வாணன் “தமிழ்ப்பழமொழிகள்” என்ற நூலை எழுதியுள்ளார். ந.வி.செயராமன் அவர்கள் விவசாயப் பழமொழிகளைச் சேகரித்து, வகைப்படுத்தி ஆராய்ந்துள்ளார். சாலை இளந்திரையன் சமுதாய நோக்கில் பழமொழிகளை ஆராய்ந்துள்ளார். வி. பெருமாள் என்பவர் தம் வாழ்நாளையே பழமொழிக்கு அர்ப்பணித்து பழமொழி குறித்த நூலும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

**4. விடுகதைகள்:**

தமிழ் விடுகதையைப் பற்றி “இருசொல் அலங்காரம்” என்ற பெயரில் 1877 ஆம் ஆண்டு அருணாசல முதலியார் நூல் வெளியிட்டுள்ளார். ‘இருசொல் அலங்காரமும் முச்சொல் அலங்காரமும்’ என்ற பெயரில் பெருமாள் நாடார் விடுகதைகளைச் சேகரித்து வெளியிட்டுள்ளார். “வினோத விடுகதை என்ற பெயரில் 1862ஆம் ஆண்டு முனுசாமி முதலியார் நூல் எழுதியுள்ளார். ராஜா முத்தையா அவர்கள் விடுகதைகளைச் சேகரித்து வகைப்படுத்தி ஆராய்ந்துள்ளார். ச.வே. சுப்பிரமணியம் 2,500 விடுகதைகளைச் சேகரித்து அகர வரிசையில் நிரல்படுத்தி எழுதியுள்ளார். விடுகதையைப் பற்றி ஆராய்ச்சி முன்னுரையொன்றும் எழுதி உள்ளார். ஆறு இராமநாதன் விடுகதைகளை அறிவியல் முறையில் நன்கு ஆராய்ந்து “தமிழில் புதிர்கள் ஓர் ஆய்வு என்றொரு நூலைப் படைத்துள்ளார்.

**5. கதைப்பாடல்கள் :**

தமிழகத்தில் அறநூறுக்கும் மேற்பட்ட கதைப் பாடல்கள் இருக்கின்றன என்கின்றனர். கதைப்பாடல்

ஆய்வை

1. சேகரிப்புப் பணி
2. வகைப்படுத்துதல்
3. ஆய்வு செய்தல் என மூன்றாகப் பகுத்துள்ளனர்.

குஜ்லிகடை பதிப்புக்கள், பவனாந்தம் பிள்ளை பதிப்புகள், வையாபுரிப்பிள்ளை பதிப்புகள், சென்னை அரசினரின் கீழ்த்திசை நூலக ஓலைச்சுவடி பதிப்புக்கள், தஞ்சை சரசுவதி மகால் பதிப்புக்கள், மதுரைப் பல்கலைக்கழகப் பதிப்புகள், தனிப்பட்டோர் பதிப்புகள் (ஆறுமுகப்பெருமாள் நாடார், தி.நடராசன்,

சண்முகசுந்தரம், வானமாமலை, சிவசுப்பிரமணியம், சு.சக்திவேல் ஆகியோர்) பதிப்புகளின் மூலமாகக் கதைப்பாடல்கள் வெளிவந்துள்ளன.

வள்ளியம்மன் கதை, சுடலைமாடசாமி கதை, இசக்கியம்மன் கதை, கண்ணகியம்மன் பாட்டு, பிச்சைக்காலன் கதை முதலானவற்றை ஆறுமுகப் பெருமாள் நாடார் பதிப்பித்துள்ளார்.

தி.நடராசன் என்பார் கட்டபொம்மு கும்மிப்பாடல், குருசாமி கதை, வன்னியடி மறவன் கதை, தம்பிமார் கதை, ஞான சவுனகிரி கதை, கன்னடியன் போர், அயோத்தி கதை போன்ற கதைப்பாடல்களை ஆராய்ச்சி முன்னுரையுடன் பதிப்பித்துள்ளார்.

நா. வானமாமலை என்பவர் கட்டபொம்மு கூத்து, கான்காசிபு சண்டை, காத்தவராயன் கதைப்பாடல், முத்தப்பட்டன் கதை, வீரபாண்டியன் கட்டபொம்மன் கதை ஆகிய ஐந்து கதைப்பாடல்களை மதுரைப் பல்கலைக்கழகத்திற்காக ஆராய்ச்சி முன்னுரையுடன் பதிப்பித்துள்ளார்.

மேலும் மு.அருணாசலம் கதைப்பாடலை ஆராய்ந்து ஆங்கிலத்தில் நூல் எழுதியுள்ளார்.இராமச்சந்திரன் செட்டியார் "இராமப்பையன் அம்மானையையும்", சக்திக்கனல் "அண்ணன்மார்சுவாமி கதை"-யையும் ஏ.என்.பெருமாள் "வெள்ளைக்காரன் கதைப்பாடலையும் ஆராய்ந்துள்ளனர்.

**2. வாய்மொழி சாரா வழக்காறுகள்:**

நாட்டார் வழக்காறுகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவன, மரபுவழிப்பட்டன, எழுத்திலன்றிக் கர்ண பரம்பரையாகச் சொல்லப்படுவன என்பர்.

"நாட்டார் வழக்காறுகள் மக்களின் வாய்வழியே பல தலைமுறைகள் வாழ்ந்தனவாக இருக்க வேண்டும்" என்கிறார். ரிச்சர்ட் எம். டார்சன் (1952) ஆனால் "நாட்டார் வழக்காறுகள் எல்லாம் வாய்மொழியாக வெளிப்படுத்தப்படுவன. எனினும் வாய்மொழிவழி வெளிப்படுத்தப்

படுவனவெல்லாம் நாட்டார் வழக்காறுகள் அல்ல” என்கிறார் வில்லியம் பாஸ்கம் (1953).

வாய்மொழி வழிப் பரப்பப்படுவன என்ற அளவுகோல் சிக்கலானது. நாட்டார் வழக்காறுகள் என்று டண்டிஸ் பட்டியலிட்டுக் காட்டிய பல வழக்காறுகள் தம்முடைய இயல்பில் வாய்மொழி சார்ந்தவையல்ல. நாட்டார் நம்பிக்கைகள், மூடநம்பிக்கைள், நாட்டார் வழக்கங்கள் விழாக்கள், நாட்டார் நடனங்கள், நாடகங்கள், சைகைகள், நாட்டார் விளையாட்டுக்கள் போன்றவை வாய்மொழி சாரா வழக்காறுகளாகும்.

பொருள்சார் மரபுகளுள் நாட்டார் கட்டிடக்கலை, கைவினைப் பொருள்கள், ஆடைகள், உணவுகள், போன்றவை வாய்மொழி சாரா வழக்காறுகளுள் அடங்கும் என்பர்.

**3. சமூக பழக்க வழக்கங்கள் :**

**சமயத்தின் தோற்றம்**

சமயத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றி விளக்க வந்த எட்வர்டு பர்னட்டைலர் (1832-1917) என்ற ஆங்கிலேய மானிடவியலரால் உருவாக்கப்பட்டது. ஆவியியக என்ற கொள்கை. அவருடைய காலக்கட்டத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த சார்லஸ் ராபர்ட் டார்வினின் படிமலர்ச்சிக்கொள்கைக்கும் ஹெர்பர்ட் ஸ்பென்சரின் கொள்கைக்கும் ஏற்ப இக் கொள்கை அமைந்திருந்தது. அவ்விருவரும் இயற்கையுலகும் சமூகவுலகும் எளிய வடிவங்களினின்றும் சிக்கலான வடிவங்களுக்கு வளர்ந்து சென்றன என்று கருதினர்.

சமயத்தின் தொடக்கால வடிவில் மனிதன் பல்வேறு ஆவிகளையும் கருத்தில் கொண்டிருந்தான் என்று டைலர் நினைத்தார். மனிதப் பண்பாட்டின் தொடக்கத்தில் நாத்திகம் தான் இருந்ததென்ற ஸ்பென்சரின் கருத்திற்கு மாறுப்பட்டவர் டைலர். இருப்பினும் இருவரும் படிமலர்ச்சிக் கருத்தாக்கத்தினரே.

இன்றைய ஆய்வில் ஆவியியம் சிறப்பிடம் பெறவில்லை. மூன்று காரணங்களுக்காகவே இன்று அது ஒதிக்கித்தள்ளப்படாமல் உள்ளது.

முதலாவதாக டைலரின் கோட்பாடு நூறு ஆண்டுகளாக ஆராய்ச்சியில் ஒரு தாக்கத்தைச் செய்துள்ளது. இன்றும் கூட அதோர் அதிகாரபூர்வமான கோட்டுபாடுபோல சில வட்டாரங்களில் கருதப்படுகிறது. இரண்டாவதாகச் சமயத்தைப் பற்றிய அறிவுப்பூர்வமான வரலாறு முழுவதிலும் தாக்கம் செலுத்திய கோட்பாட்டுக்கு அளிக்கப்பட்ட இருபதாம் நூற்றாண்டுப் பெயர்போல ஆவியியம் (Animism) காணப்படுகிறது. மூன்றாவதாக "ஆவியியம்" தோற்றம் பற்றிய 19 ஆம் நூற்றாண்டு ஆய்வுகளுடன் தொடர்புடையது. தோற்றம் பற்றிய படி மலர்ச்சி ஆய்வுகளெல்லாம் ஊகங்களேயொழிய உண்மைகளல்ல.

**நாட்டார் சமயம் (Folk Religion)**

இன்று தமிழகத்தில் வழக்கிலுள்ள பல்வேறு சமயங்களும் அச்சமயக் கடவுளர்களும் திடீரென்று உருவாகிவிடவில்லை. இவற்றிற்கும் ஒரு பரிணாம வளர்ச்சி நிலையுண்டு. இப்பரிணாம வளர்ச்சியின் உச்சநிலையில் தான் இன்று நாம் காணும் நிறுவன ரீதியான சமயங்களும் (Institutionalizes Religion) அச்சமயங்களில் இடம்பெறும் "எல்லாம் வல்ல" தெய்வங்களும் தோன்றியுள்ளன. அதே நேரத்தில் இப்பரிணாம வளர்ச்சிப் போக்கின் பல்வேறு கட்டங்களில் உருவான சமய நம்பிக்கைகளும், கடவுளர்களும் நம் வாழ்வில் இன்றும் இடம் பெற்றுள்ளமை கண்கூடான உண்மையாகும். இவையே நாட்டார் சமயமாகச் காட்சியளிக்கின்றன.

தமிழக நாட்டார் சமயநெறியானது இறந்தோர் வழிபாடு (ஆவிவழிபாடு) மரவழிபாடு, விலங்குவழிபாடு, புனிதப்பொருள் வழிபாடு, மனிதவிலங்குருவக் கற்பனை வழிபாடு எனப் பல்வேறு வழிபாடுகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் இறந்தோர் வழிபாடு தமிழகத்தின் நாட்டார் சமய வழிபாட்டில் முக்கிய இடம் வகிக்கிறது.

**2. நாட்டார் நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும்:**

"நாட்டுப்புற நம்பிக்கைகள்" என்றதொரு தொகுப்பைத் தமிழவன் என்ற எஸ். கார்லோஸ் 1976 இல் வெளியிட்டுள்ளார். இவரே முதன் முதலில் நாட்டார் நம்பிக்கைகளைத் தொகுத்து வெளியிட்டவர். இத்தொகுப்பில் தமிழர்களின் 1025 நம்பிக்கைகள் அடங்கியுள்ளன. கார்லோஸ் தொகுத்த

நாட்டுப்புற நம்பிக்கைகளை மு.சண்முகம்பிள்ளை அவர்களும், ஏ.இ.கிளாஸ் அவர்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வகைப்படுத்தியுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. தமிழரின் நம்பிக்கைகள் பற்றி மேலை நாட்டார் அறிந்து கொள்ள இந்நூல் பயன்படும். க. காந்தி அவர்கள் "தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்" என்ற நூலில் சங்க இலக்கியங்களில் காணப்படும் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் தொகுத்தும் வகுத்தும் நன்கு ஆராய்ந்துள்ளார். கா. சாந்தி அவர்கள் முதுநிலை டாக்டர் பட்ட ஆய்விற்கு"நாட்டுப்புற வழக்கங்கள்" குறித்து விரிவாக ஆராய்ந்துள்ளார். "சங்க கால நிமித்தங்கள்" பற்றி சுசீலா கோபாலகிருஷ்ணன் அவர்கள் நன்கு ஆராய்ந்துள்ளார். "தென்னிந்திய வழக்கங்கள்" பற்றி ஜெகதீச அய்யர் அவர்கள் ஆராய்ந்துள்ளார். கந்தகிரிதாசன் அவர்கள் "நிமித்தங்கள் பற்றி எழுதியுள்ளார்." தெர்ஸ்டன் அவர்கள் படைத்த மூன்று நூல்கள் மூலம் தென்னிந்திய பழங்குடி மற்றும் சாதியினரின் பழக்கவழக்கங்களைப் பற்றி நிறைய அறியலாம். பி.நாராயணன் என்பவர் "நாட்டுப்புற நம்பிக்கைகள்" எனும் பெயரில் நூல் எழுதியுள்ளார்.

**வழிபாட்டுமுறை :**

ஒயிட்ஹெட் அவர்களும் எல்மோர் அவர்களும் தென்னிந்தியாவில் நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடும் முறைகளைப்பற்றி நன்கு ஆராய்ந்துள்ளார். பி.எல்.சாமி என்பார் இலக்கியத்தில் தாய்தெய்வ வழிப்பாட்டைப் பற்றி நன்கு ஆராய்ந்துள்ளார். திருநெல்வேலி மாவட்டச் சிறுதெய்வங்களைப் பற்றி ஆராய்ந்துள்ளார். மு.அருணாசலம் அவர்களும் அ.மு.பரமசிவானந்தம் அவர்களும் தமிழ்நாட்டு விழாக்களைப் பற்றி எழுதியுள்ளனர்.

**நாட்டார் வழிபாடு:**

தமிழகமெங்கும் வாழும் மக்கள் ஒரே பண்பாட்டைச் சார்ந்தோரல்லர். ஒரு மொழி பேசினாலும் ஒரே தன்மையினர் அல்லர். சாதியாலும் பல்வேறு உட்குழுக்களாலும் வேறுபட்டோர். ஒரு குழுவைச் சார்ந்தோர் ஒரேயொரு தெய்வத்தை மட்டும் வழிபடுவோருமல்லர். ஒரு தெய்வம் தமிழகமெங்கும் ஒரே மாதிரியாக வழிபடுவதுமில்லை. சில தெய்வங்கள் சில இடங்களில் சிறப்பாக வழிப்படப்படும். சுடலைமாடனும் இசக்கியம்மனும்

தென்மாவட்டங்களில் வழிபடப்படுவன. ஐயனாரும் கருபண்ணசாமியும் மதுரை, முகவை மாவட்டங்களில் சிறப்பிடம் பெறுவன. திரௌபதி, அங்காளபரமேஸ்வரி, கூத்தாண்டவர் தமிழகத்தின் வடமாவட்டங்களில் பெரிதும் போற்றப்படுவன. இத்தகைய தெய்வங்கள் பற்றிய ஆய்வை நாட்டார் வழிபாடுகள் என்றே குறிப்பிடுகின்றனர்.

**வழிபாட்டின் செயல்பாடுகள்:**

நிகழ்த்துநர்களையும், குறிப்பிட்ட வழிபாட்டுச் சடங்குகளையும் ஆராய்ந்த பின்னர் சமயங்களின் செயல்பாடுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார் அந்தோணிவால்லஸ் "இயற்கையைக் கட்டுப்படுத்த, மக்களை நோய் வாய்ப்படுத்த, நோய்நீக்கி நலம்பெற, மானுட நடத்தைகளை ஒழுங்கமைக்க, உள நோய்களை நீக்க, சமூகத்திற்கு மறுமலர்ச்சியூட்ட வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

**பெருந்தெய்வ, சிறுதெய்வ வழிபாடுகள்:**

நாட்டுப்புற மக்கள் சிறு தெய்வங்களையும் பெருந்தெய்வங்களையும் வழிபட்டாலும், நாட்டுப்புறத் தெய்வங்களுக்கே உரிய வழிபாட்டு முறைகளில் பெரிதும் வேறுபாடு காணமுடிவதில்லை. எஸ்மன் (Eschmann) மலைவாழ் மக்களின் மதம் ஒரு பக்கமும், இந்து மதம் மறுமுனையுமாக இருப்பதாகக் கருதுவதோடு நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு இவ்விரு முனைகளுக்குள் அடங்குவதாகக் கூறுகிறார். நாட்டுப்புறத் தெய்வ வழிபாடும், இந்து மத வழிபாடும் இணையும் போது சில மாற்றங்கள் நிகழ்கின்றன. அது மட்டுமின்றி நாட்டுப்புறத் தெய்வவழிபாடு பற்பல படிகளைக் கொண்டது; அவற்றைப் பிரித்துக் காண்பது மிகவும் கடினமாக உள்ளது. மேலோட்டமாக பார்க்கும் போது ஒரு வழிபாடோ கொண்டாட்டமோ இந்து மதத்தைச் சார்ந்ததாகக் காணப்படினும் நுண்ணோக்கி ஆய்ந்தால் அந்த வழிபாடு இந்து மதத்தினின்றும் தனித்துவம் பெற்றதாகத் தெரிகிறது.

பொதுவாக தெய்வ வழிப்பாட்டினை இருவகையாகப் பகுத்துக் காணலாம். 1. பெருந்தெய்வவழிபாடு 2. சிறுதெய்வவழிபாடு. சிவன், திருமால், ராமர், கிருஷ்ணர், பார்வதி, சரஸ்வதி, லட்சுமி போன்ற தெய்வ வழிபாட்டினைப் பெருந்தெய்வ வழிபாடாகவும், மாரி, காளி, வீரன், பிடாரி, அய்யனார், முனீஸ்வரன் முதலிய தெய்வ வழிபாட்டினைச் சிறு தெய்வ

வழிபாடாகவும் பகுக்கலாம். இயற்கை வழிபாட்டில் ஆரம்பித்த வழிபாடு காலப்போக்கில் சிறு தெய்வ வழிபாடாக மலர்ந்தது. பின்னர் பெருந்தெய்வ வழிபாடு சிறு தெய்வ வழிபாடு என இருவகையான வழிபாடுகள் தோன்றின.

**4. நிகழ்த்து கலைகள் :**

நாட்டுப்புற நிகழ்த்துகலைகளைப் பற்றிய சிந்தனை தமிழகத்தில் அய்ம்பதுகளில் தோன்றியுள்ளது. வெ.இராமலிங்கம்பிள்ளை (1950) “கலைமகள்” இதழில் “தெருக்கூத்து தந்த தெய்வப்பிரசாதம்” என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையே தமிழக நாட்டுப்புற நிகழ்த்து கலைகளைப் பற்றிய முதல் பதிவாகக் காணப்படுகிறது. இதே காலக்கட்டத்தில் கிருஷ்ணசுவாமி மகாதிக்ராவ்சாகிபை (1950) பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்ட “பின்னல்கோலாட்டம்” என்ற நூல் நிகழ்த்துதல் பற்றி விவரமாக உள்ளது. வி.சி. கந்தையாவின் (1955) “மட்டக்களப்பு நாட்டுக்கூத்துகள்” நா.வானமாமலையின் (1959) “சின்னத்தம்பி வில்லுப்பாட்டு” முதலானவை பாடங்கள் பற்றியவையே. ஜே.திலகரி (1954) மொழிபெயர்த்து மஞ்சரியில் வெளிவந்த “பாவைக்கூத்து” நிகழ்த்துகலை பற்றிய கட்டுரையாகும். தமிழ் அறிஞர்களின் நிகழ்த்து கலைகளைப் பற்றி சிந்திப்பதற்கு கபில வாத்ஸ்யாயன், சச்சிதானந்த வாத்ஸ்யாயன் (1959) ஆகியோர் வெளியிட்ட “இந்திய கிராமிய நடனங்கள்” என்ற நூல் காரணமாக இருந்திருக்க வாய்ப்புண்டு. இந்நூல் “அப்பாஸ்” என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

**நிகழ்த்து கலை வகைகள்:**

நிகழ்த்து கலைகளைப் பல்வேறு ஆய்வாளர்கள் பல்வேறு முறைகளில் வகைப்படுத்தியுள்ளனர். அத்தகைய வகைப்பாடுகள் அவர்களின் தரவுகளையும் நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு மாறுபடுகின்றன.

பேராசிரியர் ஏ.என். பெருமாள் நிகழ்த்துகலைகளில் கலந்து கொள்ளும் கலைஞர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தனியார் கலை (Individual Art) குழுவினர் கலை (Group Art) என்றும், கலந்து கொள்ளும் கலைஞர்களின் பால் (Sex) அடிப்படையில் ஆடவர்கலை, மகளிர்கலை, ஆடவர் மகளிர்கலை என்றும், நிகழ்த்தப்படும் காலம், சூழல், நோக்கம்

ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சமூகம்சார் கலைகள் (Seciety based arts) சமயம் சார்கலைகள் (religion based art) என்றும் பலவாறாகப் பிரித்துக் கூறிவிட்டு, "கலைகளை வகைப்படுத்துவது சிக்கலானது" என்றும் கூறுகிறார்.

**நிகழ்த்து கலைகள்**

1. நாட்டுப்புற இசை நிகழ்ச்சிகள்
2. ஆட்டங்கள் என்று இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

முதலாவது பிரிவில் கருவி இசை நிகழ்ச்சிகளும் குரலிசை நிகழ்ச்சிகளும் மிகச் சுருக்கமாக விளக்கப்படுகின்றன. ஆட்டங்கள் என்னும் இரண்டாவது பிரிவில் விளக்கப்பட்டுள்ளன.

**1. கருவி இசை**

தமிழகத்தில் மரபுவழிப்பட்ட ஏராளமான இசைக்கருவிகள் பயன்பாட்டில் உள்ளன. நடக்கும் அல்லது நடக்கப்போகும் நிகழ்ச்சிகளை அறிவிப்பவையாகச் சில கருவிகள் பயன்படுகின்றன. மணநிகழ்ச்சி போன்ற வாழ்வியல் நிகழ்ச்சிகளில் வாசிக்கப்படும். மங்கல இசை அந்நிகழ்ச்சி நடக்கப்போவதை அறிவிப்பதோடு அந்நிகழ்ச்சியின் பல்வேறு நிலைகளில் துணையாகவும் செயல்படுகின்றது. கோயில் நிகழ்ச்சிகளில் வாசிக்கப்படும் இசைக்கருவிகளும் அத்தகைய பணிகளையே செய்கின்றன. இறப்பு நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. சில நேரங்களில் ஒரே இசைக்கருவி வழிபாட்டிலும் இறப்பிலும் பயன்படுத்தப்படுவதுண்டு. சான்றாகப் பறையைக் கூறலாம். ஆனால் இசைக்கப்படும் முறையால் நடப்பது வழிபாடா இறப்புச்சடங்கா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

**குரலிசை :**

குரலிசை நிகழ்ச்சிகள் பாரம்பரியமாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன. வில்லுப்பாட்டு, உடுக்கடிப்பாட்டு. பாரதம்படித்தல், இலாவணி, கதாகாலட்சேபம், கதைபடித்தல் என்ற பல நிலைகளில் குரலிசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படுகின்றன.

**2. ஆட்டங்கள் :**

ஆட்டங்கள் என்னும் இரண்டாவது பிரிவு பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.

**1.கருவி இசை ஆட்டங்கள் :**

கருவி இசைக்கேற்ப ஒருவரோ பலரோ ஒப்பனையுடன் ஆடும் ஆட்டங்கள் இவ்வகையில் அடக்கப்படுகின்றன. கரகாட்டம், காவடியாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மாடுஆட்டம், மயிலாட்டம், கரடிஆட்டம், வழியாட்டம், புலிவேடம், தப்பாட்டம், காளிதிருநடனம், கொக்கலிக்கட்டை ஆட்டம், வீரபத்ரசாமி ஆட்டம், தேவராட்டம், சேவையாட்டம் ஆகியவை இவ்வகையில் அடங்கும்.

**2.பாட்டு ஆட்டங்கள் :**

கருவி இசையோடு பாடல்கள் பாடிக்கொண்டு அல்லது பிறர் பாடும் பாடல்களுக்கேற்ப ஆடும் ஆட்டங்கள் இவ்வகையில் அடக்கப்படுகின்றன. குறவன் குறத்தி ஆட்டம், கும்மி, கோலாட்டம், ஒயிலாட்டம், பேயாட்டம், சாமியாட்டம், கருப்பாயி ஆட்டம், பாம்பு நடனம், கைச்சிலாம்பாட்டம், உறியடி, மயானக் கொள்ளை, கோணங்கி ஆட்டம் முதலானவை இவ்வகையில அடங்கும்.

**3. அரங்கக் கலைகள் :**

மரபு வழியாக வழங்கிவரும் ஏதேனும் ஒரு கதையை அடிப்படையாக வைத்து அக்கதைப்பாத்திரங்களாக வேடம் புனைந்து கொண்டு கருவி இசையின் துணையுடன் ஆடியும் பாடியும் பேசியும் நடித்தும் அரங்கத்தில் நிகழ்த்தக்கூடிய கலைகள் அரங்கக் கலைகள் என்னும் பிரிவில் அடக்கப்படுகின்றன. தெருக்கூத்து, கணியான்கூத்து, பகல்வேடம் முதலான கலைகள் அடக்கலாம். மனிதனால் ஆட்டுவிக்கப்படும் பாவைக்கூத்தும் இப்பிரிவில் அடக்க்படுகிறது.

**4. கதைகூறல் :**

பல்வேறு இசைக்கருவிகளின் துணையுடன் பாடலாகவும் வசனமாகவும் மக்கள் முன் கதை கூறும் பழக்கம் தமிழகத்தில் காணப்படுகிறது. வில்லுப்பாட்டு, உடுக்கை நிகழ்ச்சி, இலாவணி முதலானவை இவ்வகையில் அடங்கும்.

**5. போர்க்கலைகள் :**

ஒரு காலத்தில் போரிடுவதற்கெனப் பயன்படுத்தப்பட்டு வந்த போர்ப் பயிற்சிகள் இன்றைய நிலையில் பொழுபோக்கிற்கு என மக்கள் முன் நிகழ்த்தப்படும் போர்க்கலைகளாக மாறியுள்ளன. சிலம்பம், கத்திச்சண்டை, முதலானவை இப்பிரிவில் அடக்கப்படுகின்றன. மனிதர்களுக்குள்ள நடைபெறும் இத்தகைய சண்டைகளேயன்றி விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பயிற்சியளித்து மோதவிடும் கிடாய்ச்சண்டை, சேவல் சண்டை, முதலியவற்றையும் இவ்வகையில் அடக்கலாம்.

**6. வித்தைகள்:**

இன்றைய நிலையில் மக்களைக் கவருவதற்காக நாட்டுப்புற நிகழ்த்துகலைகள் பலவற்றிலும் வித்தைகள் இடம்பெறுகின்றன. ஆயினும் கண்கட்டு வித்தை, சாட்டை அடி, தொம்பாட்டம் முதலியவை வித்தைகள் காட்டுவதையே நோக்கமாக் கொண்ட கலைகள், பாம்பினை வைத்து வேடிக்கைக் காட்டுவதும், குரங்கினைப் பயிற்றுவித்து ஆடச் செய்வதையும் கூட இவ்வகையில் சேர்க்கலாம். இவ்வகையில் நிகழ்த்து கலைகள் வகைப்படுத்தப்பட்டன.

**5. பொருள்சார் பண்பாடு :**

மானுடச் சமூகங்கள் எல்லாம் தாம் வாழும் சுற்றுச்சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்ப வாழ்ந்தாக வேண்டும். இந்தப் படிமுறையில் சமூகங்கள் தத்தம் சொந்த நோக்கத்திற்கேற்ப இயற்கை உலகை வடிவமைக்கப் பல்வேறு தந்திரோபாயங்களையும் அணுகுமுறைகளையும் வளர்த்தெடுத்துள்ளன. இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும் கலைப்படைப்புகளாகவும் (artifacts) மாற்றிக் கொள்வதையே புழங்கு பொருள் சார் பண்பாடு (Material Culture) என்கிறோம்.

**1. கைவினைக் கலைகள் :**

நாட்டார் கைவினைக் கலைகள் என்றால் என்ன? என்பதே ஆய்வாளின் முதல் வினா கைவினைக் கலைகளின் முதன்மையான பண்புக்கூறு மரபுசார்ந்தது என்பது தான். நாட்டார் கைவினைக் கலைகள் என்பவை மரவுவழிக்கலைகளே மரபின் ஆற்றலை ஒருவன் கைவினைக் கலைகளில்

தெளிவாகக் காணலாம். அண்மைக்காலம் வரை கைவினைக் கலைகள் குறித்த உத்திகளும், தினுசுகளும் (Designs) பல தலைமுறைகளாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களால் வழிவழியாகச் செய்யப்பட்டு வந்தன. சில வேளைகளில் அவர்கள் திறமைவாய்ந்த ஒரு கலைஞரிடம் போய்ச சில ஆண்டுகள் கற்றுத் தேர்ந்து வந்தனர். கல்தச்சர்களும், மரத்தச்சர்களும் தங்கள் குழந்தைகளை அடுத்தவர்களிடம் விட்டுப் பயிற்றுவித்துள்ளனர். இன்று கற்சிற்ப வேலைகளும், மரச்சிற்பப் பணிகளும் குறைந்து வருவதாலும் புத்தம்புதிய எந்திரப்பட்டறைகளாலும் கைவினைக் கலைகள் நலிவுற்றன.

**கைவினைப்பொருள்களும் கலைப்படைப்புகளும் :**

பத்தமடைப்பாயும், தஞ்சாவூர்தட்டுகளும், நெட்டியால் செய்த மாதிரி வடிவங்களும், கண்ணாடியில் வறையப்படும் ஓவியங்களும், நம் வீட்டுக் கதவுகளும் நிலைப்படிகளும், மட்பாண்டங்களும் கலைப்படைப்பகளா? இவ்ற்றுள் சிலவற்றை கலைப்படைப்புகள் அல்ல என்றும் கூறலாம். தஞ்சைத் தட்டுகளும் நெட்டி கண்ணாடி வேலைப்பாடுகளும் கலைப்படைப்புகள் என்றும், பத்தமடைப்பாயும், கதவுகளும், நிலைப்படிகளும் மட்பாண்டங்களும் கலைப்படைப்புகளல்ல என்றும் கூறலாம். ஆனால் இவை ஒரே நேரத்தில் மகிழ்ச்சியை ஊட்டுகின்றன. சமூக பொருளாதாரம் சார்ந்த நடைமுறை நோக்கங்களுக்கும் செயல்களுக்கும் பயன்படுகின்றன. நடைமுறைப் பயன்பாட்டுக்கு முதன்மையளிப்பதாக இருந்தால் கைவினைப் பொருள் என்கிறோம். ஆனால் நடைமுறைப் பயன்பாட்டிற்கு உரியதாகி, கலைப்பண்புக்கூறுகளும் முனைப்பாகக் காணப்பட்டால் அவற்றைக் கைவினைக் கலைப்படைப்புகள் எனலாம்.

**2. மண்பாண்டக்கலை :**

ஆதிச்சநல்லூரில் புதைபொருள் ஆய்வில் கிடைத் முதுமக்கள் தாழிகளும், தமிழகமெங்கும் புதைபொருள் ஆய்வில் கிடைத்த மட்பாண்டங்களும் இதன் பழமைக்குச் சான்று பகரும். புறநானூற்றில் பல பாடல்களில் "முதுமக்கள் தாழி பற்றியும்" 'மட்கலங்கள்' பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. திருவள்ளுவர் "பசுமட்கலத்துள்நீர் பெய்திரீஇயற்று என்று உவமை கூறுகிறார்.

சங்கப் பாடல்களில் மண்பாண்டங்கள் செய்வோர் “கலம் செய்கோ” (புறம் 228,256) என்று சுட்டப்படுகிறனர். மண்பாண்டம் செய்வோரை மணிமேகலை “மண்ணீட்டாளர்” என்று குறிப்பிடுகிறது. சங்கப்புலவர்களுள் வெண்ணிக்குயத்தியாரும் ஒருவர். இன்று இவர்கள் வேட்கோவர், வேளார், குளாளர், குயவர் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றனர். பழங்காலத்தில் இவர்கள் நாட்டார் தம் அன்றாட வாழ்வில் முதன்மையான இடம் பெற்றிருந்தனர். தொழில்புரட்சியின் காரணமாக இன்றைய சமூக, பொருளாதார மாற்றங்கள் மக்களின் வாழ்விலும், அவர்களுக்குக் கலங்கள் செய்து தந்த வேட்கோவர் வாழ்வலும் பெரும்மாற்றங்கள் ஏற்படுத்தி விட்டன. தங்களின் வாழ்வோடு ஒட்டிய தம் தொழிலையே விட்டுச்செல்லும் அளவுக்கு இவர்தம் நிலை மாறிவிட்டது.

**3. பத்தமடைப்பாய் :**

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள “பத்தமடை”என்ற ஊரில் தயாரிக்கப்படும் கோரம்பாய்கள் புகழ்பெற்றவை. பத்தமடையில் வாழும் முஸ்லீம் சமயத்தினர் பாய் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பத்தமடையில் வாழும் முஸ்லீம்களுக்குப் பாய்முடையும் தொழில் பரம்பரையாக வருவதால் பாய்களின் தரங்கள், வண்ணங்கள் ஆகியவற்றை வழிவழியாக முன்னோரிடமிருந்து இளைய தலைமுறையினர் கற்றுக் கொள்கின்றனர்.

**4. நாட்டார் உணவு :**

நாட்டார் உணவு முறை வட்டார வேறுபாடுகளைக் கொண்டது. தொடர்ந்து மரபுவழியாக உண்ணப்பட்டு வரும் உணவுமுறைகளை நாட்டார் உணவு முறை எனலாம். அன்றாட, குடும்பம் சார்ந்த நாட்டார் உணவு முறை வட்டார மரபை அடிப்படையாகக் கொண்டது. அது வணிகமுறை சார்ந்த, நிறுவனமயமாக்கப்பட்ட விடுதி உணவினின்றும் வேறுபட்டது. அறிவியல் அடிப்படையிலான சத்துணவு முறையினின்றும் வேறுபட்டது. உணவுகளைத் தயாரித்தல், அவற்றைப் பாதுகாத்தல், அவற்றின் சமூக-உளவியல் செயல்பாடுகள் நாட்டார் பண்பாட்டில் அவற்றின் தாக்கங்கள் பற்றி நாட்டார் உணவு முறை ஆய்வுகள் அமைய வேண்டும். எவற்றை உண்ணலாம்? எப்படி எப்போது உண்ணலாம்? காலத்திற்கேற்ற உணவு, உணவு பரிமாறும் முறை, இனம் சார்ந்த வட்டார உணவுகள், சாதி சமயம் சார்ந்த உணவுவிலக்குகள்

(taboos) உணவுமுறை விதிகள், நம்பிக்கைகள், சமையலறைகள் (அடுப்பங்கடை) சமையல் பாண்டங்கள், உண்கலங்கள், போன்றவை பற்றிய ஆய்வுகள் நாட்டார் வாழ்வியலுள் அடங்கும்.

**பயிற்சி வினாக்கள் :**

**ஒருபக்க வினாக்கள் :**

1) பழமொழி குறித்து வெளிவந்த நூல்களை விளக்குக.
2) வாய்மொழி சாரா வழக்காறுகள் எவை?
3) 'நாட்டார் வழிபாடு' – சிறுகுறிப்பு வரைக.
4) கருவி இசை என்றால் என்ன?
5) நாட்டார் உணவுமுறை குறித்து எழுதுக.

**மூன்றுபக்க வினாக்கள் :**

1) வாய்மொழி வழக்காறுகள் குறித்து கட்டுரை ஒன்று வரைக.
2) நிகழ்த்து கலைகள் பற்றி விளக்குக.
3) பொருள்சார் பண்பாட்டினைக் கூறுக.

# அலகு 3

# வாய்மொழி வழக்காறுகள்

**முன்னுரை :**

நாட்டார் வழக்காற்று வகைமைகளுள் (genres) வாய்மொழி வழக்காறுகள் ஒரு பகுதியாகும். வாய்மொழி இலக்கியம், வாய்மொழி மரபு, சொல் சார்ந்த நாட்டார் வழக்காறு (verbal folklore) நாட்டார் இலக்கியம், வாய்மொழி நிகழ்த்துதல்கள் என்று பலவாறு வாய்மொழி வழக்காறுகள் குறிப்பிடப்படுகின்றன. வாய்மொழி வழக்காறுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தன்மை வாய்ந்த பண்புகள் உண்டு. நடையியல் கூறுகளும், வெளிப்பாட்டுக் கூறுகளும், சமூகவியல் கூறுகளும் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடும். இந்த வாய்மொழி வடிவங்களை வேறு பிரித்தறியப் பல்வேறு அளவுகோல்களைப் பயன்படுத்துவர். நடையியல் கூறுகள் அல்லது வடிவக் கூறுகள் ஒரு வகை. நீளம், வெளிப்பாட்டு வடிவம் (உரைநடை, கவிதை இரண்டும் கலந்தது) யாப்பு அமைப்பு (Prosody), மொழியியல் வெளிப்பாட்டுக்கூறு (அன்றாட வழக்கு அல்லது குறியீட்டு மொழி அல்லது இருண்மை வழக்கு) போன்ற பண்புகளில் வழக்காறுகள் வேறுபடும். உள்ளடக்கத்தின் அடிப்படையிலும், மெய்ப்பாடுகளின் (இன்பம், துன்பம், நகை) அடிப்படையிலும் அவை வேறுபடும். அதாவது வழக்காறுகளை அவற்றின் அடிக்கருத்துக்கள், சுவைப்புலப்படுத்தும் தலைவர்கள் போன்ற பண்புகளின் அடிப்படையில் வேறுபடுத்துவர். இந்த அடிப்படையில் வாய்மொழி வழக்காறுகள் பற்றிய கருத்துகள் பேசப்படும்.

**வாய்மொழி வழக்காற்று வகைமைகள் :**

தமிழக நாட்டார் வாய்மொழிப் பாடல்களைப் பல்வேறு பட்ட சூழல்களில் வைத்தே புரிந்து கொள்ள வேண்டும். இந்த வாய்மொழிப் பாடல்கள் நாட்டார் தம் வாழ்வின் பல்வேறு கணங்களில் வெளிப்படுத்தப்படுகின்றன. தமிழர் தம் வாழ்வின் எந்தக்கணங்களில் பாடல்கள் பாடப்படவில்லை என்று காண்பது அரிது. ஒரு குழந்தை பிறந்த போதும், அழும் போதும், தூங்கச் செல்லும் போதும், விளையாடும் போதும் பருவமடையும் சடங்குகளிலும், திருமணத்தின் போதும், தொழிற்களங்களிலும், இறப்பிலும் பாடல்கள் பாடப்படுகின்றன.

## 1. வாய்மொழிப் பாடல்கள் :

பெரும்பான்மையான வாய்மொழிப் பாடல்கள் இயற்கைச் சூழல்களிலேயே பாடப்படுகின்றன. ஆதலின் வாய்மொழிப் பாடல்களின் (வழக்காறுகள் எல்லாவற்றிற்கும்) இயற்கைச் சூழலுக்கும், பாடகருக்கும் சிறந்த முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

தெம்மாங்கு, திருமணப்பாடல், தாலாட்டு, கும்மிப்பாடல், கோலாட்டப்பாடல், விளையாட்டுப் பாடல், ஏற்றப்பாடல், அம்பாப்பாடல், நடுகைப்பாடல், களையெடுக்கும் பாடல் என்று எண்ணற்ற பாடல்கள் காணப்பட்டாலும் இங்கு நான்கு பாடல்கள் வழக்காறுகளின் இயல்புகள் சிறப்பாக விளக்கப்படுகின்றன. அவை பின் வருமாறு :

1. தாலாட்டுப் பாடல்கள்
2. தெம்மாங்குப் பாடல்கள்
3. திருமணப் பாடல்கள்
4. ஒப்பாரிப் பாடல்கள்

## 1. தாலாட்டுப் பாடல்கள்:

குழந்தைகளைத் தூங்கச் செய்ய தாய், பாட்டி, அத்தை போன்ற உறவினர் பாடும் பாட்டு தாலாட்டாகும். தாலாட்டு என்ற தொடரை தால் + ஆட்டு என்று பிரித்து ‘தால்’ என்றால் நாக்கு. அதனை ஆட்டிப்பாடுவதே தாலாட்டு என்று இலக்கியவாணர் குறிப்பிடுவர். ராராட்டு, ரோராட்டு, தாராட்டு என்றும், நாட்டாரால் குறிப்பிடப்படுகிறது. தாலாட்டுப் பாடுபவருக்கு நெடியதொரு பாடல் தெரிந்திருப்பினும் நீட்டிப்பாடும் திறம் இருப்பினும் குழந்தை தூங்கத் தொடங்கும் நேரத்தைப் பொறுத்தே, அதன் நீட்சி அமையும்.

உலகெங்குமுள்ள பல்வேறு மொழிகளில் தாலாட்டுப் பாடல்கள் பாடப்படுகின்றன. தாலாட்டுப்பாடல்களுக்கு முறையான தொடக்கம் உண்டு.

ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ என்றோ
ராராரோ ராரிரரோ ராராரோ ராரிரோ என்றோ
ரேரே ரேரரே ரேரே ரேரரே என்றோ

தாலாட்டின் தொடக்கம் பொருளற்ற ஒலிகளாக அமையும். ‘லூலூ’’ லல்லா லல்லே; ‘நின்னூனன்னு’ ‘போபோடு’ (bobo) ‘டூடூ’ (dodo) போன்ற ஒலிகள் ஆங்கிலம் போலிஷ், ருமானின், ∴பிரெஞ்சு, இத்தாலி போன்ற மொழிகளிலும் தாலாட்டின் தொடக்கத்தில் ஒலிக்கப்படுகின்றன. இந்த ஒலிகளை எழுப்பியவுடனேயே தாலாட்டுத் தொடங்கப் போகிறது என்பதை அடையாளம் கண்டு கொள்ளலாம்.

தாலாட்டுப் பாடல்களுக்குப் பொருளாக அமைவனவற்றை பா.ரா. சுப்பிரமணியன் தொகுத்துத் தருகிறார்.

1. குழந்தை
2. அதற்கு வேண்டிய சாதனங்கள்
3. உறவினர்கள்

இப்பொருள்களின் விரிவைப் பின்வருமாறு எடுத்துக்கலாம்.

1. குழந்தையை மையமாகக் கொண்ட பொருள்களின் விவரங்கள் :
    அ) குழந்தையின் அழகு ஆ) அருநமந்தத்தன்மை இவற்றைப் பாராட்டல்.
    ஆ) குழந்தையைப் பெற தாய் செய்த நோன்பு

2. சாதனங்களை மையமாகக் கொண்ட பொருளின் விவரங்கள் :
    அ) சாதனங்களின் அழகு, வேலைப்பாடு ஆகியவற்றைப் பாராட்டல்.
    ஆ) அச்சாதனங்களைச் செய்வதவர்களுக்கும், பரிசாக அளித்தவர்களுக்கும் நன்றி கூறுதல்.

3. உறவினர்களை மையமாகக் கொண்ட பொருளின் விவரங்கள் :
    உறவினர்களின் செயல் வீரத்தை செல்வ வளத்தைப் பாராட்டல்

இப்பொருட் தலைப்புகளும், அவற்றின் உட்கூறுகளும் தாலாட்டுப் பாடல்களுக்குரிய அடிப்படையான கருத்துக்களாகின்றன.

அழுகையை அடக்குவதற்கும், உறங்க வைப்பதுமே தாலாட்டின் முதற் செயல்பாடாகும். ஆதலின் தாய் அழுகைக்குரிய காரணம் கேட்பதாக ஓர் அடிக்கருத்துத் தாலாட்டில் வருவதைக் காணலாம்.

## அழுகைக்குக் காரணம்

''கண்ணே ஒன்னை யாரடிச்சார்
கண்மணியைத் தொட்டது யார்
பொன்னே ஒன்னை யாரடிச்சார்
பொன்மணியைத் தொட்டது யார்
ஆரடித்து நீயழுதாய்
அடிச்சாரைச் சொல்லியழு
ஆள் விலங்கு போட்டு வைப்போம்
தொட்டாரைச் சொல்லியழு
தோள்விலங்கு போட்டு வைப்போம்.

அத்தை அடிச்சாளோ
அல்லிமலர்ச் செண்டாலே
மாமன் அடிச்சானோ
மல்லிகைப்பூச் செண்டாலே

பாட்டி அடிச்சாளோ
பாலூட்டுங் கையாலே
நீட்டி அடிச்சாளோ
நெய்யூத்துங் கையாலே
ஆரடித்து நீயழுதாய்
ஏலம்பூ வாய் நோக''

காப்பியக் கதைமாந்தர்களை உருவகப்படுத்தி வருணிப்பது கவிஞர்களுக்கு கைவந்த கலை. ஆனால் வாய்மொழிப் பாடல்கள், இலக்கியங்களுக்கு முன்னோடி என்பதால் இவ்வுருவச் செழிப்பைத் தாலாட்டில் காணலாம்.

## இலக்கியச் செறிவு

''கரும்பே களிதேனோ கற்கண்டோ சர்க்கரையோ
சர்க்கரையோ முக்கொழுந்தோ சாதிமரிக் கொழுந்தோ
தேனோ திரவியமோ தெவிட்டாத மாங்கனியோ
மாங்கனியும் திம்பாக தேம்பொழிந்த வாயாலே''

என்று உருவகப்படுத்தி பாடிவரும் ஒரு தாய், தான் நோன்பிருந்ததைச் சொல்லிய பின் குழந்தையை உருவகப்படுத்துதல் காண்க.

## நோன்பு நோற்றல்

''அள்ளி மிளகு தின்னு
அறுபதுநாள் நோம்பிருந்து
கன்னி சிறையிலிருந்து கண்டெடுத்த குஞ்சரமோ

**உருவகம்**

மானத்து மீனோ
மேகத்து மின்னொளியோ
தாகத்தைத் தீர்க்க வந்த
தங்க இளநீரோ?
அஞ்சிலேயும் பிஞ்சோ
அரும்பிலேயும் வாசனையோ?
பூவிலேயும் பிஞ்சேரி
புனலிலேயும் வாசனையோ?

**பிள்ளை வரம் வேண்டி பாடும் தாய்**

இத்தாலாட்டைப் பாடுபவர் செ. வேதம் என்ற கத்தோலிக்க மதத்தவர். அவர் தில்லை, மாயவரம் சென்றதையும், மரம் சுத்தி வந்ததையும் குறிப்பிடுதல் காண்க.

''பிள்ளையில்லயின்னு
தில்லைவனம் போகயிலே
தில்லைவனம் கண்தெறந்து
பிள்ளைக்கலி தீத்ததாக
மஞ்சள் இல்லையின்னு
மாயவரம் போகையிலே
மாயவரம் கண்திறந்து
மைந்தன்கலி தீத்தாக
பிள்ளையில்லெயின்னு
பூமரத்தைக் காத்திருந்தோம்
பூத்தந்தா வாடுமின்னு
பிள்ளை தந்தா ராராட்ட

மைந்தனில்லென்னு
மாமரத்தைக் காத்திருந்தோம்
மாலைதந்தா வாடுமின்னு
மைந்தன் தந்தா ராராட்ட''

## உறவு மற்றும் பொருள் குறித்து இடம் பெறும் தாலாட்டுப் பாடல்

''பாலான் குடிலான் - நீ
பசித்து அழுதாய் என்று சொல்லி
பால் பசுவோ தேடி
பயணம் இட்டார் உங்கள் அப்பா
காடெல்லாம் சுத்திக்
காராம்பசு தேடி
மலைமேல் பசுமேய
ஆனிடையர் பத்திவர
பத்தி வந்த பால்பசுக்கு
பால் மடுவும் தங்க நிறம்
கொண்டுவந்த பால் பசுக்கு
கொம்பு ரெண்டும் தங்க நிறம்
வாங்கி வந்த பால் பசுக்கு
வால் எல்லாம் தங்க நிறம்
உட்கார்ந்து பால்கறக்க
முக்காலி பொன்னாலே
பிடித்திருந்து பால் கறக்க
பிடி செம்பும் பொன்னாலே
கன்று கட்டத்தும்பு
கடைகானும் பொன்னாலே
தென்கடலு மாணிக்கம்
தெட்டி உமிச்சொரிந்து
வடகடலு மாணிக்கம்
வாரி உமிச் சொரிந்து
தானிலே உள்ள பாலை
தளிகையிலே விட்டாச்சு

வடகடலை ஆராய்ந்து
வயிரநிறச் சங்கு எடுத்து
வாய்க்கு வயிரங்கட்டி
வாங்கி வாரான் அம்மான் என்று
தந்திவந்து பேசுது இப்போ – உங்கப்பா
தருமரோட மேசையிலே
சங்கு கொள்ளப்போன அம்மான்
சந்திரனோ இந்திரனோ''

இத்தாலாட்டுப் பாடலில் குழந்தையின் இயற்கை உணவான பாலிற்காகப் பசுவையும், அப்பாலைப் புகட்டுவதற்காகச் சங்கையும் தேடிக் கொணரும் 'பெருமுயற்சி' யை இப்பாடல் எடுத்துரைக்கிறது. தந்தை கொண்டு வந்த பசுவும், தாய் மாமன் கொண்டு வந்த சங்கும் பாராட்டைப் பெறுகின்றன.

**தாய்மாமன் பெருமை**

ஏறுறதும் தங்கரதம்
எறங்குறதும் வெள்ளிரதம்
போகுறதும் பொன்னுரதம் - எனக்குப்
பூசெ பண்ணும் ராச குலம்
தெருவெல்லாம் தேக்குமரம் - ஒன்னைச்
சேந்ததெல்லாம் ராசகுலம்
ராசகுல மாமனுக்கு
ஆசை மருமகனும்
வாசமெல்லாம் வன்னிமரம் - ஒன்
வம்சமெல்லாம் ராசகுலம்
ராசகுல மாமனுக்கு
ஆசையுள்ள ரத்தினமோ''

இப்பாடலில் தாய்மாமன் தமிழ் நாட்டாரிடையே தந்தைக்கடுத்த இடத்தைப் பெற்றவன். வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட சமூகங்களிலும் அவர்களுக்குத் தொழில்புரியும் மக்களிடையும் தாயின் சகோதரருக்கு முதன்மையான இடமுண்டு. தந்தையின் மறைவில் தாய்மாமனே குழந்தையின் வளர்ப்பில் முதலிடம் பெறுபவன். தாய்மாமனை அம்மான் என்று அழைப்பதே மரபு. அம்மான் என்பதற்கு ஆணொருவன் தாயாக இருந்து செயல்படுதல்

என்று பொருள். ஆப்பிரிக்க சமூகத்தில் தாய் மாமனை ‘Male Mother’ என்றே குறிப்பிடுகின்றனர்.

**2. தெம்மாங்குப் பாடல்கள் :**

**விளக்கம் :**

நாட்டார் தம் வாய்மொழிப் பாடல்களுள் தெம்மாங்குப் பாடல்கள் ஒரு வகையாகும். ‘‘தேன்பாங்கு என்பது அப்படித் தேய்ந்து மாறி வழங்குகிறதென்று சொல்வார்கள். தேன் எப்படி இனிக்கிறதோ அப்படி இனிக்கும் பான்மை அந்தப்பாட்டுக்கு உண்டாம்’’ என்கிறார் கி.வா. ஜகந்நாதன். இந்தத் தொடருக்கு வேறொருவாறு தென் + பாங்கு என்று பிரித்துத் தென்னாட்டு மக்களின் பாங்கினைப் புலப்படுத்துவதால் தெம்மாங்கு என்றும் விளக்கலாம்.

தெம்மாங்கு பத்து வகைச் சிந்துப்பாடல்களுள் ஒன்று. சமநிலைச் சிந்து, வியனிலைச் சிந்து, நொண்டிச் சிந்து, வழிநடைச் சிந்து, ஆனந்தக் களிப்பு, காவடிச் சிந்து, வளையல் சிந்து, தங்கச்சிந்து, குள்ளத் தாராச் சிந்து, தெம்மாங்கு சிந்து என்று சிந்து பத்து வகைப்படும். ஓரெதுகை பெற்ற இரண்டடிகள் அளவொத்து வருதல் சிந்து எனப்படும். இரண்டடிகள் மட்டுமின்றி நான்கடிகள் ஓரெதுகை பெற்று வருதலும் உண்டு. சிந்தின் உயிர் நாடி மோனைத் தொடையே. மோனையமைதி இல்லையேல் சிந்துக்கு உயிர்ப்பில்லை. ஒரு சிந்துப் பாட்டில் வரும் ஒவ்வொரு சிந்தும் கண்ணி எனப்படும் (புலவர் குழந்தை 1967)

‘‘வாழையடி உன் கூந்தல்
வயிரமடி பல்காவி
ஏழையடி நானுனக்கு
எரங்கலையோ ஒம்மனசு
நன்னான நானா நனநன்னா
தன்னான தானா தனைதானா தானா’’

காதல் சுவை கனியப்பாடுவதால் இதனை இன்ப ரசத் தெம்மாங்கு என்பர். மேற்குறிப்பிட்ட பாட்டு இரு சீரிரட்டை எதுகைத் தொடையால் அமைந்தது.

நன்னான என்பது தெம்மாங்குப் பாட்டில் எடுப்பாகும். எடுப்பு இல்லாமலும் சில பாடல்கள் அமையும்.

**தெம்மாங்கு பாடும் சூழல் :**

''தெம்மாங்குக்கு ஒரு மெட்டுத்தான் உண்டு; ஆனாலும் அதைப் பலவாறு தாளத்தை மாற்றிப் பாடுவதுண்டு. இப்பகுதியில் 206 கண்ணிகள் இருக்கின்றன. இந்தக் கண்ணிகளுக்கிடையே பொருள் தொடர்பு ஏதும் இல்லை. பலபல நிலையிலே உள்ள ஆண்களும், பெண்களும் பாடும் முறையிலே துண்டு துண்டாக அமைந்தவை இவை'' என்கிறார் கி.வா.ஜகந்நாதன்.

''மூக்குத்தித் தொங்கலிலே – குட்டி
முந்நூறு பச்சைக்கல்லு
ஆளைத்தான் பகட்டுதடி – குட்டி
அதிலே ஒரு பச்சைக்கல்லு
சந்தனம் உரசுங்கல்லு – குட்டி
தலைவாசலைக் காக்குங் கல்லு
மீன் உரசுங் கல்லுக்கடி – குட்டி
வீணாசைப் பட்டாயோடி''

இந்த இரண்டு கண்ணிகளுக்கிடையே பொருள் தொடர்பில்லை. ஒருவன் ஒருத்தியை விளித்து கல்லுகளைப் பற்றி மட்டுமே பாடுகிறான்.

தெம்மாங்குப் பாடல்களைப் பாடுதற்குக் குறிப்பிட்ட நேரம் குறிப்பிட்ட இயற்கைச் சூழல் என்று ஒன்றில்லை. தாலாட்டுப்பாடல் குழந்தையைத் தூங்கச் செய்யும் போதும், ஒப்பாரி யாரேனும் ஒருவரின் இறப்பின் போதும் பாடப்படும். ஆனால் தெம்மாங்குக்குக் காலமும், இடமுமில்லை. வண்டியோட்டும் போதும், வழிநடைப் பயணத்தின் போதும், நாற்று நடும் போதும், களையெடுக்கும் போதும் பாடப்படும். ஒருவரோ, இருவரோ ஆணும், பெண்ணுமாகவோ, குழுவினராகவோ இவற்றைப் பாடுவர்.

தெம்மாங்குப் பாடல்களில் பல. காதல் என்னும் அடிக்கருத்தைக் கொண்டு அமையும். பெண்ணை நோக்கி ஆணும், ஆணைப் பார்த்துப் பெண்ணும் விளிக்கும் விளிப்பாடல்களாகவே அமையும். பின்வரும் பாடல் காதலன் காதலியை நோக்கிப் பாடுவதாக அமைந்துள்ளது.

‘‘கட்டப்புள்ளே குட்டப்புள்ளே
கருவெமணி போட்ட புள்ளே
நாக்குச் செவந்த புள்ளே
நான்தாண்டி ஓம் புருசன்’’

**காதலி காதலனை எண்ணி ஏங்கிப்பாடுதல் :**

பிரிந்திருக்கும் காதலி காதலனை எண்ணி ஏங்கிப்பாடும் பாடலொன்றில் உவமைகள் அடுக்கடுக்காக வருகின்றன. சங்க இலக்கியத்தில் தலைவனைப் பிரிந்த தலைவி தன் நெஞ்சிற்குச் சொல்லிப் புலம்புதல் போலவே பின்வரும் பாட்டு அமைவது காண்க.

‘‘மதுரை மரிக்கொழுந்தே
மணலூரு தாழம்பூவே
சிவகங்கைப் பன்னீரே
சேருறது எந்தக்காலம்

கட்டிலுச் சட்டம் போல
கடைஞ்செடுத்த விட்டம் போல
உத்திரத் தூணுபோல
முத்து இருந்து வாடுறனே.

ஆசை மனம் கூசுதையா
அம்புருவிப் பாயுதையா
நேசமனம் நெஞ்சினிலே
நெருப்புத் தணலாகுதடா
ஏக்கம் பிடிக்குதையா
என்னுசுரு போகுதையா
தூக்கம் குறைஞ்சதையா
துரை மகனைக் காணாமல்

நிறை குடத்துத் தண்ணி போல
நிழலாடும் என் சதுரம்
குறை குடத்துத் தண்ணீராய்
குறைஞ்சதய்யா உன்னாலே''

பெரும்பான்மையான தெம்மாங்குப் பாடல்கள் ஆண், பெண் உரையாடலாகவே அமைகின்றன. இந்த உரையாடல் பண்பே தெம்மாங்கின் தனிச்சிறப்புக்கூறு எனலாம். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போன்று ஒரு பாடலைக் காண்போம்.

**காதலன் காதலியை ஓடி வருமாறு அழைத்தல் :**

காதலன், காதலியை வீட்டை விட்டு ஓடி வருமாறு அழைக்க அவள் அவனால் செய்ய இயலாத செயல்கள் பலவற்றைச் செய்யச் சொல்கிறாள். அவனும் அவ்வாறே சொல்கிறான்.

ஆண் : அஞ்சு ரூபா தாரேன்
அரக்கு போட்ட சேலை தாரேன் - உன்
ஆத்தாள் அறியாம நீ
வாக்கப்பட்டு வந்திரடி

பெண் : அஞ்சு ரூபா வேண்டாம்
அரக்குப் பட்டுச் சேலை வேண்டாம்
தட்டான் அறியாம – நீ
தாலி பண்ணி வந்திரடா

ஆண் : தட்டான் அறியாம
தாலி பண்ணி நானும் வந்தா
அடுப்பங்கட்டி இல்லாம – நீ
பருப்புச் சோறு பொங்கி வாடி

பெண் : அடுப்பங்கட்டி மூணில்லாம
பருப்புச் சோறு பொங்கி வந்தா
நாவுல பட்டிராம – நீ
நவட்டி முழுங்கிரணும்

இந்தப் பாடலில் அந்தாதி போல் செயல்கள் அடுத்தடுத்துத் தொடுத்து வரல் காண்க. தெம்மாங்குப் பாடல்களின் அடிக்கருத்து பெரும்பான்மையும் காதலே.

**திருமணப் பாடல்கள் :**

திருமணப் பாடல்கள் என்று சொல்லும் போது அவற்றை வாழ்த்துப் பாடல்கள் என்று குறிப்பிடுவர். ஆனால் அவற்றின் அடிக்கருத்துக்கள் எள்ளி நகையாடுபவையாகவும், ஏசல்களாகவும் அமையும். திருமணத்தின் போது மாப்பிள்ளை வீட்டிலோ மணப்பெண் வீட்டிலோ நடைபெறும் வரவேற்பின் போது இப்பாடல்கள் பாடப்பெறும். மாப்பிள்ளையின் தமக்கையோ (அக்காள்) தங்கையோ மாப்பிள்ளையை வாழ்த்தியும், தங்களின் நாத்தனாரைக் கேலி செய்தும் பாடுவர். பெண்ணின் உடன்பிறந்த பெண்டிரும் அவ்வாறே மாப்பிள்ளையை இழித்தும், பழித்தும் பாடுவது மரபு.

**திருமண அழைப்பு :**

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் திருமணத்திற்கு உற்றார், ஊரார், உறவு முறையாரைப் பாக்கு வைத்து அழைப்பது மரபு. பாக்கு வைத்தல் என்று சொன்னால் திருமணத்திற்கு அழைத்தல் என்றே பொருள். வெற்றிலை, பாக்கு வைத்து அழைக்காவிட்டால் மரியாதைக் குறைவு என்றே கருதப்பட்டது. தாய்மாமன், தாய்வழித்தாத்தா, அத்தை போன்றோருக்குப் பாக்கு வைக்கும் போது ஒண்ணே அரைக்கால் உருபாக்களையும் சேர்த்து வைத்து அழைப்பர். மணவாழ்த்துப் பாடல்களின் தொடக்கத்தில் யாருக்குத் திருமணம் என்பதும் பாக்கு வைத்தலும் சுட்டப்படுதல் காண்க.

‘‘கல்யாணம் கல்யாணம் எங்களண்ணென்
கர்ணருக்குக் கல்யாணம்
கல்யாணமென்று சொல்லிக்
கடலேறிப் பாக்கு வச்சு
சின்ன மடியுங் கொல்லி
சீமையெங்கும் பாக்கு வச்சு
வண்ண மடியுங் கொல்லி
வரிசையெங்கும் பாக்கு வச்சு
தெக்கித்தி மாமனுக்கு

தென்னிலையில் பாக்கு வச்சு
வடக்கித்தி மாமனுக்கு
வாழெலையில் பாக்கு வச்சு
உள்ளூரு மாமனுக்கு
ஒசந்தயெலையில் பாக்கு வச்சு''
என்று திருமண அழைப்புப் பேசப்படுகிறது.

**பெண் கேட்டுச் செல்லுதல் :**

மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டுக்குச் சென்று பெண் கேட்டு வந்த செய்தியைக் காண்க.

''பெண்ணென்று சொல்லிப்
புறப்பட்டார் எங்களண்ணா
தாரேன்னு சொல்லி
வரவழைச்சார் உங்களண்ணா
சரியின்னு சொல்லிச்
சம்மதிச்சார் எங்களண்ணா''

எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி மாப்பிள்ளை வீட்டார் பெண்ணை ஏற்றுக் கொண்டதாகப் பாடல் குறிப்பிடுவது காண்க.

**மணப்பெண்ணுக்குச் சீர்கொடுத்தல் :**

மணப்பெண்ணுக்குக் கொடுக்கும் பணம் அல்லது பொருளினைத் தமிழில் பரிச என்று சொல்லுவர். மணமகன் வீட்டார் பெண்ணுக்குப் புடவையும், பொருளும், பணமும், நகைகளும் கொடுத்துப் பெண்ணைப் பெற்றுக் கொள்ளும் நிலை முன்னர் இருந்தது. ''பணமும், பத்தா இருக்கணும், பொண்ணும் முத்தா இருக்கணும்'' என்ற பழமொழி இதனை உணர்த்தும். மணவாழ்த்துப் பாடலும் இதனை உணர்த்துவது காண்க.

''மதுரையில பட்டெடுத்தா மதிப்புக் கொறச்சலுன்னு
காரைக்குடி பட்டெடுத்தா கணமும் கொறயுமுன்னு
அள்ளிப் பணங்கொடுத்து சொல்லித் தறிப்பொட்டு
மார்புக்கும் தோளுக்கும் வைரமணி பதிச்சு வந்தோம்

பீலி விரலுக்கு மிஞ்சியும் கொண்டு வந்தோம்
மொட்டக்கைக்கு வளவியுங் கொண்டு வந்தோம்
அவ்வளவும் சேகரிச்சு வந்தோம் பந்தனுக்கு
காணாது காணாதுன்னு கதறினார் உங்களண்ணா
அஞ்சுபேர் கூடி அமருங்க என்றாக
பத்துப்பேர் கூடி பதறாதிய என்றாக''

**மாப்பிள்ளையை கேலி செய்யும் பாடல் :**

பெண்ணுக்குப் பணம் கொடுக்கும் வழக்கம் மாப்பிள்ளை வீட்டாரிடம் இருந்திருப்பதையும், பணம் கொடுத்த மாப்பிள்ளையை கேலி செய்வதாக ஒரு பெண் பாடிய பாடலில் வெளிப்படையாகக் காணப்படுவதைக் காணலாம்.

''பணத்தைக் கொடுத்தோமுன்னு
பதறாதீக அத்தானே – ஒங்க
பணமெல்லாம் கூடப் - பொன்னா(ள்)
பல்லுவெலெ யாகாது
துட்டெக் கொடுத்தோமின்னு
தொயராதீக அத்தானே – ஒங்க
துட்டெல்லாங்கூடி – எங்க
தூணுவெலெ யாகாது
காசு கொடுத்தோமுன்னு
கதறாதீக அத்தானே – ஒங்க
காசெல்லாங்கூடி – எங்க
கல்லுவெலெ (கதவு வெலெ) யாகாது''

**மண வாழ்த்து :**

திருமணத்தின் போது பெரியோர்கள் மணமக்களை வாழ்த்துவர். மணமக்கள் வாழ்வும், வளமும், நலமும் பொலிய வேண்டுமென வாழ்த்துவதை

''பிள்ளை பதினாறும் பெற்றுப்
பெருவாழ்வு வாழ்ந்திடுங்கள்
மக்கள் பதினாறும் பெற்று
மங்களமாய் வாழ்ந்திருங்கள்

ஆல்போல் தழைத்து
அருகுபோல் வேரூன்றி
நலமுடனே எந்நாளும்
ஞானமுடன் வாழ்ந்திடுவீர்!

அறிய முடிகிறது.

**ஒப்பாரிப் பாடல்கள் :**

பழமையான வாய்மொழி வழக்காறுகளுள் ஒப்பாரியும் ஒன்று. இறந்தவரை நினைத்து அவர் மேல் பாடப்படும் பாடலை ஒப்பாரி என்பர். இதனை 'ஒப்பு', 'பிலாக்கணம்' என்ற சொற்களாலும் குறிப்பிடுவர். இது பெண்களுக்கேயுரிய வழக்காறு. இதன் மூலம் பெண் ஆழ்ந்த துயரத்தை வெளியிடுகிறாள். உற்றாரும் உறவினரும் இறந்த வீட்டுக்குக் கேதம் (துட்டி) கேட்கச் செல்லும் போது பெண்டிர் இறந்தவரின் உறவினரைக் கட்டியழுது ஒப்பாரி வைப்பது தமிழ்நாட்டு மரபு. இறந்த வீட்டில் கட்டி அழும் போது தத்தம் வீட்டில் இறந்தோரை எண்ணிக் கொண்டு அழுதால் எளிதில் கண்ணீர் வந்து விடும் என்று கூறுகின்றனர் பெண்டிர்.

## தொல்காப்பியத்தில் ஒப்பாரி

''மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
ஆய்ந்த பூசல் மயக்கத்தானும்
தாமே ஏங்கிய தாங்கரும் பையுளும்
கணவனோடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதானந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலையும்
கழிந்தோர்தே எத்தழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையுறு நிலையும்''

என்னும் தொல்காப்பிய புறந்திணையியற் சூத்திரத்தால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே மகளிர் ஒப்பாரி பாடி அழும் வழக்கம் இருந்தது புலப்படும்.

அவலச்சுவையின் உச்சகட்டம் ஒப்பாரிப் பாடல்களாகும். சாவு நிகழ்ந்த வீட்டில் துயரச் சூழலும், அழுகையும் கலந்து ஒப்பாரி பாடப்படும் சூழல் கல்நெஞ்சையும் கலக்கிக் கசிந்து கண்ணீர் மல்கச் செய்து விடும்.

தாய் தந்தை, மகன் மகள், அண்ணன் தம்பி, அக்காள் தங்கை, பாட்டன் பாட்டி, மாமன் மாமி, தூரத்துச் சுற்றம் முதலிய ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஒப்பாரிப் பாடல்கள் உண்டு. இது குறித்துப் பா.ரா. சுப்பிரமணியன் பின்வருமாறு கூறுகிறார். ‘‘ஒரு பெண் சந்தர்ப்பத்திற்குத் தகுந்த சொற்களைத் தெரிந்தெடுத்துப் பாடவில்லையென்றால் அப்பொருத்தமின்மையைப் பற்றித் தம்முன் சுட்டிக் காட்டி முறுவலிப்பார்களாம்.

## ஒப்பாரி பாடும் முறை

ஒப்பாரிப் பாடல்களில் அதிகமாக மடக்காக வரும் சொற்களையே பயன்படுத்துகின்றனர். இறந்தவருக்கும், ஒப்பாரி பாடுகிறவருக்கும் உள்ள உறவைக் காட்டும் சொற்களே இம்மடக்குகள். வீரவநல்லூரைச் சார்ந்த காந்தம்மாள் ஒப்பாரிப் பாடல்களில் பயன்படுத்தப்படும் மடக்குச் சொற்களின் பட்டியல் ஒன்று தந்தார். உற்றார், உறவினர், நண்பர் இறந்தவரின் வீட்டிற்குப் பக்கத்தில் வந்தவுடனேயே குறிப்பிட்ட உறவு முறையை முதலில் கிளத்தி அழத் தொடங்குகின்றனர்.

கணவனுக்காக : ‘அதிகாரி’ ‘சீமை அதிகாரி’ ‘செல்வதி’ (செல்வ+அதிபதி) (என்னெத் தேடிய சீமானே; என்னெ ஆண்ட சீமானே’ கொழுந்தி முறை கொண்ட பண்களும் இத்தொடர்களைப் பயன்படுத்துகின்றனர்.

தாய்க்காக : ‘என்னைப்பெத்த அம்மா’ என்னப் பெத்தாள் (என்னைப் பெத்த ஆயர் என்னப் பெத்த ஆத்தா’ இறந்தவரின் தங்கை, தமக்கையின் மக்களும் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

தந்தைக்காக : ‘என்னப் பெத்த ஐயா’ என்னப் பெத்தார் (என்னப் பெத்த அப்பா)

மாமியாருக்காக : ‘என்னைத் தேடிய அம்மா’ அத்தே, ‘மாமியார் அம்மா’

மாமனாருக்காக : ‘என்னைத் தேடிய சீமை’ அதிகாரி, என்னைத் தேடிய செல்வதி

சகோதரிக்காக : 'எம்பெறவி அம்மா', 'எம்பெறவி ராசாத்தி', 'எம்பெறவி பாப்பாத்தி'

சகோரனுக்காக : எம்பெறவி ராசா, எம்பெறவி சீமை அதிகாரி, 'எம்பெறவி செல்வதி (எம் பெறப்பே அண்ணா, எம் பெறவித் தம்பி)

மேலே குறிப்பிட்ட மடக்குகளை அல்லது விளித்தொடர்களைச் சேர்த்து இன்னின்ன உறவினர்க்கு இன்னின்னவாறு பாடவேண்டும் என்பது போல் இன்னின்ன சூழல்களில் இவ்வாறு பாட வேண்டிய பாடல்களும் உள. இறந்தவுடன் பாடும் பாடல், உடலை எடுக்கும் போது பாடும் பாடல், உடலை எடுத்த பின்னர் வருவோர் பாடும் பாடல், எந்த நேரத்திலும் பாடும் பாடல், வரும் வழியில் பாடும் பாடல், இரங்கூனில் இறந்தோருக்குப் பாடும் பாடல்கள் என்று பல உள்ளன.

## தூரத்து உறவினர் பாடும் ஒப்பாரி

உறவினர் வருவதற்கு முன்னரே உடலைப் புதைக்க எடுத்துச் சென்று விட்டது குறித்த ஒரு பாடலைக் காண்போம்.

"தூரத்தே இருந்தேன்னு
சுருளெழுதிப் போட்டுட்டா – நான்
சுருக்கா வருவேனுன்னா
தூக்கிட்டீக எம்பொணத்தே
ஓரணாக் காகிதந்தான் - ஒங்க
ஊரிலேயும் பஞ்சமாய்யாரி
காதத்தே இருந்தேனுன்னு
கடுதாசி எழுதிவிட்டா – நான்
கடுசா வருவேன்னா
கடத்திட்டீக எம்பொணத்தே
காலனாக் காகிதங்க – தங்க
கடையிலேயும் பஞ்சமாய்யா" (கணவர்)

## வெளிநாட்டில் இறந்தவருக்காகப் பாடும் ஒப்பாரி (மனைவி)

கிழக்கு முகவை மாவட்டத்தினர் பலர் சென்ற நூற்றாண்டில் இரங்கூன் சென்று வாழ்ந்தனர். இன்னும் வாழ்கின்றனர். அவ்வாறு சென்ற போது

மனைவியை நம் நாட்டில் விட்டுச் செல்வர். இரங்கூன் சென்றவர் காலம் செல்ல (இறக்க) இங்கிருப்பவர் வைக்கும் ஒப்பாரி காண்க.

“தங்கமான ரெங்கோனைத்
தங்கமென்றும் சொன்னீகளே – ஓங்க
தங்கலாம் என்றீகளே - இவ்வத்
தங்கங் கசந்ததென்ன – நீங்க
தனிப்பட்டு சென்றதென்ன?

இன்பமான ரெங்கோனை
இன்பமென்றும் சொன்னீகளே – அங்கே
இருக்கலாம் என்றீகளே - இப்ப
இன்பங் கசந்ததென்ன – நீங்க
இம்சைப்பட்டுச் சென்றதென்ன?

பிறந்த நாட்டை விட்டு இரங்கூன் சென்று பொருள் தேடி வளமான வாழ்க்கை வாழலாம் என்று மனைவியை விட்டுச் சென்ற கணவன் அங்கு மடிய (இறக்க) இங்கு வைக்கும் ஒப்பாரி இதுவாகும்.

## குழந்தையை இழந்த தாய்பாடும் ஒப்பாரி

குடும்ப வாழ்க்கை என்னும் தோட்டத்தில் மலர்ந்த மலர்கள் குழந்தைகள், குழந்தையை இழந்த தாய் ஒருத்தி பாடும் ஒப்பாரிப் பாடல் இது.

“பூமியில் புரண்டழுதோம்
புழுவாய் துடித்தழுதோம்
அழகான மைந்தனை – எமன்
அழைக்க வருவேன் என்றான்
ஈகடிக்கச் சம்மதியோம்
எமன்வரச் சம்மதித்தோம்
காற்றடிக்கச் சம்மதியோம்
காலன் வரச் சம்மதித்தோம்”

## மகளை இழந்த தாய் பாடும் ஒப்பாரி

மணக்கோலத்தில் காண வேண்டிய மகளைப் பிணக்கோலத்தில் காண்கிறாள். அவள் படும் வேதனைக்கு அளவே இல்லை.

''மணவறைப் பந்தலிலே
மணக்கோலம் பாராமல்
பிணவறைப் பந்தலிலே – நானும்
பேரழிவு கொள்ளுகின்றேன்''.

## மாமனாருக்கு மருமகள் பாடும் ஒப்பாரி

மாமனாரின் இறப்புக்காக மருமகள் ஒப்பாரி வைக்கின்றாள். மாமனாரின் அன்பும், பண்பு நலன்களும் ஒப்பாரிப்பாடல் மூலம் புலனாகின்றன.

''பிள்ளைகளை ஆதரிச்சுவந்த
புண்ணியர்க்குப் புத்திசொன்னீர் – நீங்கள்
பிள்ளைகளை வீதியில்விட்டு
பிரிந்தோடி முன்போனீர்''

## ஒப்பாரி பாடும் நோக்கம்

இறந்து போனவரிடத்துத் தாம் கொண்ட உண்மையான அன்பின் காரணமாக ஏற்படும் துக்கத்தை வெளியேற்றும் விதமாக சிலருக்கு ஒப்பாரி பயன்படுகிறது. ஒப்பாரி இறந்து கிடப்பவர்க்காக அன்று; தத்தம் மனக்குறையைத் தீர்க்க உதவும் கருவியாகத் திகழ்வதால் பாடபடுகின்றது. எனவே ''உள்ளப்புண்ணுக்கு மருந்தாவதால் உளவியல் நோக்கு, பழக்கமாகக் கொண்டுவிட்டமையால் பண்பாட்டு நோக்கு, பழக்கமாகக் கொண்டு எண்ணி வருந்துவதால் உலகியல் நோக்கு'' ஆகிய வகைகளில் ஒப்பாரி பாடப்படுகிறது என்கிறார் வி. சரசுவதி.

## ஒப்பாரி காட்டும் பெண்கள் நிலை

குடும்பத்தைப் பாதுகாக்க வேண்டிய கணவன் இறந்துவிட்டால் மனைவி பெரும் பாதிப்புக்குள்ளாக்குகிறாள். பேரிழப்பை மட்டுமின்றி அமங்கலி என்ற சொல்லையும் தாங்கிக் கொள்ள வேண்டியவளாகின்றாள். கணவனை இழந்த இழப்பைக் காட்டிலும் கைம்மை நோன்பின் கொடூரம்

வேதனைக்குள்ளாக்குகிறது. விதவைகள் எந்தச் சுபகாரியங்களிலும் பங்கு பெறக் கூடாது. அவள் தொட்ட காரியம் துலங்காது. அவள் எதிரே வந்தால் சகுனத்தடை என்றெல்லாம் சமூகம் நினைக்கிறது. பெண்களுக்குச் சொத்துரிமை இல்லாத நிலையில் பெண்களுக்கு நேரும் துயரங்களை ஒப்பாரிப் பாடல்களில் காண்கிறோம். பெற்றோருக்கப் பின் பிறந்த வீட்டிலும் வரவேற்பில்லை. பெற்றோரை இழந்த பெண்ணொருத்தி தனக்குப் பொன்னும், பொருளும், சீதனமும் வேண்டாம் அன்பான வார்த்தை கூறி வரவேற்றால் போதும் என வேதனையால் புலம்புவதைக் காணலாம்.

''அள்ளிக் கொடுக்க வேண்டாம்
அரண்மனையில் பாகம் வேண்டாம்
அன்பான வார்த்தை சொல்லி என்னை
அரவணைத்தால் போதும்
பணங்காசு போட வேண்டாம்
பட்டுப்பாய் போட வேண்டாம்
பாசமுள்ள வார்த்தை சொல்லி – என்னை
பராமரிச்சா போதும்
சீர்வரிசை செய்ய வேண்டாம்
சிப்பக்கட்டு கட்ட வேண்டாம்
சாந்தமான வார்த்தை சொல்லி என்னை
சிரிக்க வைச்சா போதும்''

சுருங்கச் சொன்னால் பெண்களின் உணர்ச்சிகள் முழுமையும் ஒப்பாரிப் பாடல்களில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

## 2. வாய்மொழிக் கதைகள்

**முன்னுரை :**

கதைப்பாடல்களையும், காப்பியங்களையும், புராணக் கதைகளையும், பழமரபுக்கதைகளையும் நாட்டார் கதைகளையும் எடுத்துரைப்பவை கதையாடல்கள் (Narrative) என்று குறிப்பிடுவர். இந்தக் கதையாடல்களைக் கவிதையின் வழி எடுத்துரைக்கப்படுபவை, உரைநடை வழி எடுத்துரைக்கப்படுபவை என்று இரு வகைப்படுத்துவர். கவிதையின் வழி (பாடல்களின் வழி) எடுத்துரைக்கப்படுபவற்றைக் கதைப்பாடல் (talked) காப்பியம் (epic) என்று இரு வகைப்படுத்துவர். உரைநடையில் எடுத்துரைக்கப்படும் கதையாடல்களை நாட்டார் கதைகள் (Folk tales) பழ மரபுக்கதை (legend) புராணக்கதை (myth) என்று மூன்று வகைப்படுத்துவர்.

**நாட்டார் கதைகள் வரையறை :**

கதை என்பதற்குச் சொல்லுதல் என்பது பொருள். நாட்டார் கதைகள் கதையாடல்களுள் ஒரு வகை. கற்பனையாகப் புனைந்து எடுத்துரைக்கப்படுபவை. இதனைத் தொல்காப்பியம் பொருளோடு புணராப் பொய்மொழி என்றும் கூறும். இவற்றை வழங்கி வரும் சமுதாய மக்கள் நாட்டார் குழுக்கள், இவற்றைப் புனிதமானவை என்று கருதுவதில்லை. வரலாறு சார்ந்தவை என்றும் போற்றுவதில்லை; சமயக் கோட்பாடு சார்ந்தவை என்றும் ஏற்பதில்லை. இவற்றை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக எண்ணுவதில்லை. இக்கதைகள் அடிக்கடி சொல்லப்பட்டாலும் பொழுதுபோக்காகவே சொல்லப்படும். மகிழ்ச்சியூட்டுவதே அவற்றின் முதன்மையான நோக்கமாகும். சில வேளைகளில் அறக்கருத்துக்களைப் பரப்பவும், நன்னெறிகளைப் புலப்படுத்தவும் பயன்படுத்தப்படும். நாட்டார் கதைகளுக்குக் காலமும் இல்லை. இடமும் இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரேயொரு ஊரில் என்றோ கதையில் கூறப்பட்டாலும் அவற்றையெல்லாம் கேட்போர், உண்மையென்று நம்புவதில்லை. இதனால் தான் கதைக்குக் காலுண்டா, கையுண்டா என்ற வழக்குத் தமிழகத்தில் காணப்படுகிறது. நாட்டார் கதைகளில் வரும் கதைப்பாத்திரங்கள் மானிடராகவும், மானிடரல்லாத உயிர்களாகவும் இருக்கலாம்.

நாட்டுப்புறக் கதைகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவதாகும். மரபு வழிப்பட்டதாகும். பல நூற்றாண்டு காலமாக வாய்மொழியாக மக்களிடையே வழங்கி வருவதால் மாற்றத்தைக் காண்கிறோம். மூல ஆசிரியர் யார் என அறியவொண்ணாமையும் ஒரு வித வாய்ப்பாட்டுக்கள் அடங்குவதும் நாட்டுப்புறக் கதைகளுக்கும் பொருந்தும்.

**நாட்டுப்புறக் கதைகளின் வகைகள் :**

உரைநடையில் கூறப்படும் கதைகளில் பல வகைகள் காணப் படுகின்றன. அவற்றைப் புராணக்கதை (myth) பழ மரபுக்கதை (legend) நாட்டுப்புறக்கதை (tale) என்று பிரித்துக் கொள்ளலாம். வில்லியம் பாஸ்கம் என்னும் மானுடவியல் அறிஞர் இவற்றைப் பின்வருமாறு வேறுபடுத்தி உரைக்கிறார்.

**1. புராணக்கதைகள் :**

உண்மைக்கதை என்று நம்பப்படுவது; நினைவிற்கு எட்டாத நெடுங்காலத்திற்கு முன் நடந்ததாகக் கூறப்படுவது; பல்வேறு உலகங்களில் நிகழ்வதாகக் கூறப்படுவது; மனித இனம் சாராக் கதைமாந்தர்களைக் கொண்டது; புனிதம் என்று கருதப்படுவது.

**2. பழமரபுக் கதைகள் :**

உண்மைக்கதை என்று நம்பப்படுவது; அண்மையில் பழங்காலத்தில் இவ்வுலகத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படுவது; மனிதர்களைக் கதைமாந்தர்களாகக் கொண்டது; சாதாரணம் அல்லது புனிதம் என்று கருதப்படுவது.

**3. நாட்டுப்புறக் கதைகள் :**

புனைவுக்கதை (கற்பனைக்கதை) என்று நம்பப்படுவது; எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும் நிகழ்வதாக் கூறப்படுவது; மனிதர்களையும், மற்றயவைகளையும் கதை மாந்தர்களாகக் கொண்டது; சாதாரணம் என்று கருதப்படுவது.

மேற்கூறப்பட்ட மூன்றும், உரைநடையில் கூறப்படுபவை என்பதால் பாடல் வடிவில் கூறப்படமாட்டாது என்பது பொருளல்ல. இதனை நினைவில் கொள்ள வேண்டும். இந்த விளக்கங்கள் நாட்டுப்புறக் கதை என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள துணைபுரிகின்றன. மக்களிடம் வாய்மொழியாக வழங்கப்படும் மரபுவழிக் கதைகளை நாம் 'நாட்டுப்புறக் கதைகள்' என்று பெயர் சுட்டி அழைக்கின்றோம். பழங்கதைகள், நாடோடிக் கதைகள், கிராமியக் கதைகள், பாட்டி கதைகள், தாத்தா சொன்ன கதைகள், நாட்டார் கதைகள் என்னும் பெயர்களிலும் நாட்டுப்புறக் கதைகள் சுட்டப்படுகின்றன.

நாட்டுப்புறக் கதைகளின் சேகரிப்பு மிகுதியாக அவற்றை வகைப்படுத்த வேண்டியதன் அவசியம் ஏற்பட்டது. ஆண்டி ஆர்னே (Anti Aarne)யும் ஸ்டித் தாம்ஸனும் (Stith Thompson) இணைந்து நாட்டுப்புறக் கதைகளை ஐந்தாக வகைப்படுத்துகின்றனர்.

1. விலங்குக் கதைகள் (Animal Tales)
2. சாதாரணக் கதைகள் (Ordinary Folk - fales)
3. நகைச்சுவை மற்றும் துணுக்குக் கதைகள் (Jokesand Aneedotes)
4. வாய்ப்பாட்டுக் கதைகள் (Formula Tales)
5. வகைப்படுத்தப்படாத கதைகள் (Unclassifies Tales)

டாக்டர் சு. சக்திவேல் அவர்கள் ஆறாக வகைப்படுத்துகிறார்.

1. மனிதக்கதைகள் - காதல் கதைகள்
   காரணக் கதைகள்
   விசித்திரக் கதைகள்
   நகைச்சுவைக் கதைகள்
   அதிர்ஷ்டக் கதைகள்
   குடும்பக் கதைகள்
   வேடிக்கைக் கதைகள்
   வேடிக்கைக் கதைகள்
   உல்லாசக் கதைகள்
   நீதிக்கதைகள்
   பிரயாணக் கதைகள்

கனவுக்கதைகள்

2. மிருகக்கதைகள்
3. மந்திர தந்திரக்கதைகள்
4. தெய்வக் கதைகள்
5. இதிகாச புராணக் கதைகள்
6. பல்பொருள் பற்றிய கதைகள்

டாக்டர் சு. சண்முகசுந்தரம் அவர்கள் நான்கு வகையாகப் பகுக்கின்றார்.

1. மனிதக் கதைகள்
2. மிருகக் கதைகள்
3. மந்திரக் கதைகள்
4. தெய்வக் கதைகள்

டாக்டர் தே. லூர்து அவர்கள் பழமரபுக் கதைகளை (legends) ஒன்பதாக வகைப்படுத்துகிறார்.

1. தோற்றம் பற்றிய பழமரபுக் கதைகள்
2. வரலாற்று பழமரபுக்கதைகள்
3. இடப்பெயர் சார்ந்த பழமரபுக் கதைகள்
4. உள்ளூர்ப் பழமரபுக் கதைகள்
5. போர் அழிவு பற்றிய பழமரபுக் கதைகள்
6. நம்பிக்கை பழமரபுக் கதைகள்
7. இறந்தோர் பழமரபுக் கதைகள்
8. பேய்கள் பற்றிய பழமரபுக் கதைகள்
9. சமய பழமரபுக் கதைகள்

இந்த வகைப்பாடுகளை முழுமையானவை என்று கூற இயலாது. அதே நேரத்தில் நாட்டுப்புறக் கதைகளின் வகைகளைப் புரிந்து கொள்ள இவை துணைபுரியும்.

**நாட்டுப்புறக் கதைகளின் தன்மைகள் :**

நாட்டுப்புற வழக்கில் கதைக்குக் கால் இல்லை என்பர்; இன்னும் ஆராயப்புகுந்தால் முடிவே இருக்காது. ‘ஒவ்வொரு முறையும் மாறாமல் ஒன்று

போல் பிழையும், பிசிரும் இல்லாமல் கதை சொல்வது என்பது முடியாத காரியம். எனவே காலப்போக்கில் கதைகள் மாறுதலைப் பெறுகின்றன’ என்கிறார் டாக்டர் பா.ரா. சுப்பிரமணியன் என்பவர். கதை சொல்பவரின் கற்பனைக்கும், கேட்பவரின் பொறுமைக்கும் ஏற்ப, கதைகள் குறுகியதாகவோ நெடியதாகவோ இருக்கும். சொல்லும் முறையும் கேட்பவர்க்கேற்ப மாறுவதுண்டு.

**கதைகளின் பொருண்மைகள் :**

வாழ்க்கைப் பிரச்சனை, ஆசை, துன்பம், சாதிப்பூசல், காதல், ஒழுக்கம், வேதனை, முட்டாள்தனம், பொறாமை, மன உணர்வெழுச்சி, கள்ள நட்பு, மந்திரம், புத்திசாலித்தனம், நீதி முதலியவற்றின் பொருண்மைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன நாட்டுப்புறக் கதைகள்.

# 3. பழமொழிகள்

**முன்னுரை :**

மூதறிவிலிருந்து தோன்றிய மொழி பழமொழி. நினைப்பிற்கும் எட்டாத பழங்காலத்திலிருந்தே மக்கள் வாழ்வில் வாழ்ந்து வருபவை என்பதைப் பழமொழியிலுள்ள 'மொழி' என்னும் சொல் உறுதிப்படுத்துகிறது. சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும், அறிவுக்கூறுகளையும் விளக்கும் சான்றாகப் பழமொழிகளும், விடுகதைகளும் திகழ்கின்றன. உலகிலுள்ள அனைத்து மொழிகளிலும் பேச்சு மொழியே முதன்மையானது என்பது அனைவரும் அறிந்ததொன்றாகும். ஆங்கிலச் சொற்களான sayings old sayings என்பதை நோக்கின் இவ்வுண்மை புலனாகும்.

**பழமொழியின் விளக்கம் :**

தமிழில் பழமொழிக்கு மூதுரை, முதுமை, மொழிமை, முன்சொல், முதுசொல், பழஞ்சொல் என ஆறு பொருள் இருப்பதாகச் சேந்தன் திவாகரம் கூறுகின்றது. மலையாளத்தில் 'பழஞ்சொல்' என்றும், தெலுங்கில் 'நாதுடி' என்றும், கன்னடத்தில் 'நாண்ணுடி' என்றும், ஆங்கிலத்தில் 'proverb' என்றும் அழைக்கின்றனர். தமிழ் இலக்கிய, இலக்கணங்களை ஆராய்ந்து பார்த்தால் பழமொழியைக் குறிக்க முப்பத்திநான்கு சொற்கள் இருப்பதாக டாக்டர் வ.பெருமாள் அவர்கள் குறிப்பிடுகிறார். அவை : பழகுமொழி, தொன்னெறி மொழி, முதுமொழி, முதுசொல், தொன்றுபடுகிளவி, தொன்றுபடு பழமொழி, பழமொழி, வாய்மொழி, அறம், நெடுமொழி, பல்லவையோர் சொல், பண்டைப் பழமொழி, சொலவு, மூதுரை, பழஞ்சொல், மூத்தோர் சொல் வார்த்தை, வழக்கு, உரை, பழைய நெறியனாய் வரும் சொல், பழவார்த்தை, உலகமொழி, உபகதை, சுலோகம், சொலவடை, வசனம், எழுதா இலக்கியம், வாய்மொழி இலக்கியம், எழுதாக்கிளவி, கேள்வி, சருதி, நீதி மொழி, முதுமை, மொழிமை, முன் சொல்.

**பழமொழியின் வரையறை :**

'பழமொழி' என்ற சொல்லே பழமொழி பற்றிய சிறந்த வரையறையாக அமைந்துள்ளது என்கிறார். ஜான் லாசரஸ் அவர்கள். 'பழமொழி' என்பது உலகுக்கு உணர்த்தும் உண்மையை ஒரு சிறிய வாக்கியத்தின் மூலம் சுருக்கிக் கூறுவது ஆகும். அப்பழமொழி முழுமையாக இல்லாவிடினும் அதை

விளக்கிக் கூறும்போது முழுக்கருத்தும் வெளிப்படும்’ என்கிறார் துர்கா பகவத் அவர்கள். ரிச்சார்டுடார்சன் அவர்கள் பழமொழியானது எளிதில் கவனிக்கக்கூடிய, சேகரிக்கக்கூடிய தொன்மை வாய்ந்த கருத்தாகும். இருப்பினும் எளிதில் புரிந்து கொள்ளக் கடினமானது என்கிறார். ஜான் ரஸ்ஸல் அவர்கள் பழமொழி பலரின் அறிவையும், ஒருவரின் உண்மைத் தன்மையையும் உணர்த்துவனவாகும் என்கிறார். எல்லோருக்கும் தெரிந்த உண்மைகளைச் சிறு வாக்கியத்தில் வெளிப்படுத்துவன பழமொழிகள் என ஆகஸ்போர்டு ஆங்கில அகராதி எடுத்தியம்புகின்றது.

**பழமொழியும், தமிழ் இலக்கியங்களும் :**

தொல்காப்பியர் பழமொழியை ‘முதுசொல்’, ‘முதுமொழி’ என்று குறிப்பிடுகிறார்.

‘அங்கதம் முதுசொலோடு அவ்வேழ் நிலத்தும்’

‘ஏது நுதலிய முதுமொழி என்ப’

தொல்காப்பியர் பழமொழிக்கு விளக்கம் தருகிறார்.

‘நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மை என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி’.

கருதிய பொருளை விளக்கும் வகையில் நுண்மை, சுருக்கம், தெளிவு, மென்மை ஆகிய இயல்புகளுடன் குறிப்பிட்ட பொருளைக் காரணத்துடன் உணர்த்த வல்லது பழமொழி என பழமொழிக்கு வரையறை செய்கிறார். ஒரு கருத்தை உணர்த்துவதும், அக்கருத்து காரணத்துடன் அறிவுக்கு ஏற்றதாகவும், தொல்காப்பியர் நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை உடையதாகவும் இருக்க வேண்டும். கூரியதாய்ச் சுருங்கி விழுமியதாய் எளிதாகி இயற்றப்பட்டுக் குறித்த பொருளை முடித்ததற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழி என்ப’ எனப் பேராசிரியர் விளக்கம் தருகிறார்.

தொல்காப்பியர் பழமொழியை ‘முதுமொழி’ ‘முதுசொல்’ என்ற பெயரால் அழைக்கிறார். இளங்கோவடிகள் ‘நெடுமொழி’ என்று அழைக்கிறார். திருவெம்பாவை ‘பழஞ்சொல்’ என்றும், குமரேச சதகம் ‘உலகமொழி’ என்றும்

கொன்றை வேந்தன் ‘மூத்தோர் சொல்’ என்றும் அழைக்கின்றன. கம்பரும் பழமொழியை ‘மூதுரை’ என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். கி.பி. 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த படிக்காசுப் புலவர் ‘பழமொழி’ என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அதே நூற்றாண்டில் வாழ்ந்த முத்தப்ப செட்டியார் பழமொழியைப் ‘பழமைச்சொல்’ என்று குறிப்பிட்டுள்ளார். பார் புகழும் பாரதி பழமொழியைத் தனது பாடல்களில் புகுத்திப் பாடியுள்ளார். பழமொழியைச் சுருக்கியும், கருத்தை விரிவாக விளக்கியும் பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியர் காலந்தொட்டு இலக்கிய வழக்கில் பயின்று வந்ததை அறிகிறோம்.

**தமிழ்ப் பழமொழிகளின் தொகுப்பு :**

மூன்றுறை அரையனாரின் ‘பழமொழி நானூறு’ முதல் பழமொழித் தொகுப்பாகும். இதனைத் தொடர்ந்து ‘பழமொழி விளக்கம்’ அல்லது தண்டலையார் சதகம்’ என்பதைக் குறிப்பிடலாம். மேலை நாட்டாரின் வருகைக்குப் பின்தான் முறையான தொகுப்புப் பணி தொடங்கியது எனக் கூறலாம். முக்கியமான பழமொழித் தொகுப்பும் ஆய்வு மட்டும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1842 | பெர்சிவல் | தமிழகப் பழமொழிகள் |
| 1870 | லாரி | பழமொழிகள் |
| 1894 | ஜான் லாசரஸ் | தமிழ்ப் பழமொழிகளின் அகர வரிசை |
| 1897 | ஹெர்மன் ஜென்சன் | தமிழ்ப்பழமொழிகளின் வகைப்படுத்தப் பட்ட தொகுப்பு |
| 1913 | அனவரதவிநாயகம் பிள்ளை | பழமொழி அகராதி |
| 1962 | ரா.பி. சேதுப்பிள்ளை முதலானோர் | தென்மொழிகளில் பழமொழிகள் |
| 1962 | கே. எஸ். இலட்சுமணன் | தமிழகப் பழமொழிகள் |
| 1975 | சாலை இளந்திரையன் | சமுதாய நோக்கில் பழமொழிள் |
| 1980 | ந.வீ. செயராமன் | பழமொழிகளில் வேளாண்மை அறிவியல் |

| | | |
|---|---|---|
| 1987 | வ. பெருமாள் | பலநோக்கில் பழமொழிகள் |
| 1988 | சௌந்திரபாண்டியன் | தமிழில் பழமொழி இலக்கியம் |
| 1988 | கி.வா. ஜெகந்நாதன் | தமிழ்ப் பழமொழிகள் |

**பழமொழி வகைப்பாடு :**

1. சுமித் அவர்கள் பழமொழிகளை ஏழு பிரிவாக வகைப்படுத்துகிறார்.
    1. உவமைத் தன்மையன
    2. கேலித் தன்மையன
    3. சிலேடைத் தன்மையன
    4. மரபுத் தொடர்கள்
    5. சொற்றொடர்கள்
    6. விடுகதைத் தன்மையன
    7. ஒலி இயைபின
2. ஆப்ரஹாம் அவர்கள் பழமொழிகளை நான்கு வகையாகப் பாகுபடுத்துகிறார்.
    1. நேர்சம மதிப்பு (positive equivalence) காலம் பொன்னானது.
    2. எதிர்மறை சமமதிப்பு (negative equivalence) ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை
    3. நேரடி காரண காரியத் தொடர்பு (positive causational) பதறிய காரியம் சிதறிப் போகும்.
    4. எதிரிடை காரண காரியத் தொடர்பு (negative causational) இரண்டு குற்றங்கள் நியாயமாகாது.
3. பிரௌனே அவர்கள் பழமொழியை இரண்டாக வகைப்படுத்துகிறார்.
    1. இலக்கியப் பழமொழி (Literary)
    2. இலக்கியமில்லாப் பழமொழி (Non-literary) அல்லது மரபுப் பழமொழி
4. டாக்டர் சக்திவேல் அவர்கள் தமிழ்ப்பழமொழிகளை ஐந்து வகையாக வகைப்படுத்துகிறார்.
    1. அளவு அடிப்படை (size basis)
    2. பொருள் அடிப்படை (subject basis)
    3. அகரவரிசை அடிப்படை (alphabetical basis)

4. அமைப்பியல் அடிப்படை (structural basis)
5. பயன் அடிப்படை (functional basis)

5. டாக்டர் க. சாந்தி அவர்கள் தமிழ்ப்பழமொழிகளை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கின்றார்.
    1. உருவத்தை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள்
        - வாக்கிய அமைப்புள்ள பழமொழிகள்
        - மேற்கோள் பழமொழிகள்
        - ஒலியியைபுப் பழமொழிகள்
        - கேள்விப் பழமொழி
        - உவமைப் பழமொழி
    2. பொருளை அடிப்படையாகக் கொண்டவை.
        - வேளாண்மைப் பழமொழிகள்
        - மிருகங்கள் பற்றிய பழமொழிகள்
        - பறவைகள் பற்றிய பழமொழிகள்
        - வேடிக்கைப் பழமொழிகள்
        - நெருப்புப் பழமொழிகள் முதலியன.
6. பேராசிரியர் வ. பெருமாள் அவர்கள் தமிழ்ப் பழமொழிகளைப் பதினெட்டு வகையாக வகைப்படுத்துகிறார்.
        - பொருள் அடிப்படை
        - தகுதி அடிப்படை
        - சமுதாய அடிப்படை
        - சமய அடிப்படை
        - ஒத்த கருத்து அடிப்படை முதலியன

அனைத்து பழமொழிகளையும் சேகரித்து ஆராய்ந்தால் முறையான அறிவியல் அடிப்படையிலமைந்த வகைப்பாடு செய்யலாம்.

**பழமொழியின் தன்மை :**

தினந்தோறும் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களின் திரட்டே பழமொழியாகும். அனுபவத்தின் அடிப்படையில் எழுந்தவை. அறிவின் சுருக்கமே பழமொழி எனலாம். வாழ்க்கையில் உயிர்ப் பண்பும், உணர்வுப் பண்பும், அறிவுப் பண்பும் பழமொழிகளில் கருவாக அமைந்து வாய்மொழி இலக்கியங்களில் சிறந்ததொன்றாகக் கருதப்படுகிறது. சிந்தனை ஆற்றலுக்கும்,

அறிவு வளர்ச்சிக்கும் பெருந்துணையாக உள்ளது. தமிழ்ப் பழமொழிகளைத் தமிழ் மக்களின் அறிவுக் களஞ்சியம் என்றே கூறலாம்.

**பழமொழியின் அமைப்பு :**

பழமொழிக்கு இரு சொற்கள் இருந்தே தீர வேண்டும். இதனைத்தான் ஆலன் டாண்டிஸ் தலைப்பு முடிவுரை (comment) பெற்றிருக்க வேண்டும் என்கிறார். இதன் மூலம் ஒரு சொல் பழமொழி (one word proverb) க்கு வாய்ப்பில்லை என அறிகிறோம்.

| **தலைப்பு** | **முடிவுரை** |
|---|---|
| அழுத பிள்ளை | பால் குடிக்கும் |
| அதிக ஆசை | அதிக நஷ்டம் |
| காய்த்த மரம் | கல்லடி படும் |

**பழமொழிச் சூழல் :**

நாட்டுப்புற வழக்காறுகளைச் சூழல் வெளிப்படுத்தும் முறை, செயல்படும் முறை இவற்றுடன் இணைத்து நோக்க வேண்டும். எந்தெந்த நேரத்தில் யார், யாருக்கு எதற்காகப் பழமொழி பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் ஆராய வேண்டும். பழமொழிகளைப் பொதுவாக பெரியவர்கள் சிறியவர்களுக்குக் கூறுவர். நமது சமூக அமைப்பில் சிறியவர்கள் பெரியவர்களுக்குப் பழமொழி கூறுவதில்லை. பெண் திருமண விஷயமாகப் பேசும் போது ‘தாயைத் தண்ணீர்த்துறையில் பார்த்தால், பெண்ணை வீட்டில் பார்க்க வேண்டியதில்லை’ என்பர். பெண்ணின் குணத்தைக் குறிப்பிடும் போது ‘தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை’ என்பர். பழமொழியைத் தொகுக்கும்போது சூழலையும் நோக்க வேண்டும் என்பதை ஆலன் டாண்டிஸ் வலியுறுத்திக் கூறுகிறார்.

**பழமொழிப் பயன்பாடு :**

பழமொழிகளை உலகிலுள்ள அனைத்துச் சமுதாயங்களும் பயன்படுத்துகின்றன. முன்னேறிய சமுதாயமும், முன்னேற்றமில்லாப் பழங்குடிச் சமுதாயமும் பழமொழியைப் பயன்படுத்துகின்றன. சமுதாயத்தில் அறக்கோட்பாடுகளை வலியுறுத்தவும், தவறு செய்யும்போது இடித்துரைக்கவும்

சமுதாயத்தில் இதைச் செய்யவும். இதனைச் செய்யக்கூடாது எனக் கட்டளையிடவும் பழமொழியைப் பயன்படுத்துகின்றனர். மக்களின் வாழ்வில் அனுபவித்த சாரம் என்பதால் மக்களிடையே அதற்கொரு செல்வாக்குண்டு. பழமொழி பொய்யின்னா பழயதும் சுடும்’ என்பதிலிருந்து மக்கள் பழமொழி மீது வைத்துள்ள நம்பிக்கைப் புலனாகிறது.

**பழமொழியின் கருப்பொருள் :**

உலகில் காணப்படும் அனைத்துப் பொருட்கள் பற்றியும் பழமொழி பேசுகின்றது. பழமொழி தொடாத பொருளே இல்லை எனலாம். பழமொழியில் காணப்படும் கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்துவனவாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். மனித சமுதாயத்தில் காணப்படும் நம்பிக்கை, பழக்க வழக்கங்களையும் பழமொழி விளக்குகின்றது. மனித சமுதாய வரலாற்றை விளக்கும் வாயிலாகவும் உள்ளது. பழமொழியின் கருப்பொருளை, மக்கள், இனம், விலங்கினம், மரம், செடி, கொடி, இனம், பண்பாடு, பல்பொருள் பற்றியது எனப் பிரிக்கலாம். இப்பெரும் பிரிவில் பல உட்பிரிவுகளும் உண்டு.

**இயற்கை பற்றிய பழமொழிகள் :**

1. சூரியனைக் கண்ட தாமரை போல
2. பூமியைப் போல பொறுமை வேண்டும்.

**மனித உலகம் :**

1. பாம்புக்குப் பல்லில் விஷம்
   பங்காளிக்கு உடம்பெல்லாம் விஷம்
2. கல்லானாலும் கணவன்
   புல்லானாலும் புருஷன்

**விலங்குகளும், பறவைகளும் :**

1. ஆட்டுக்கு வாலை அளந்து வைத்தாற்போல
2. உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது.

**மரம், செடி, கொடிகள் :**

1. கொடிக்குக் காய் பாரமா?
2. மிளகு சிறுத்தாலும் வீரியம் போகுமா?

**குடும்பம் :**

1. தந்தை எவ்வழி அவ்வழி புதல்வன்
2. தாய்க்குப் பின் தாரம்

**சாதி :**

1. இடையன் புத்தி பிடரியிலே

**வேளாண்மை :**

1. அகல உழுவதை விட ஆழ உழு
2. அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை

**கல்வி :**

1. இளமையிற் கல்
2. கற்றது கைம் மண்ணளவு. கல்லாதது உலகளவு

**பொருளாதாரம் :**

1. திரை கடலோடியும், திரவியம் தேடு
2. வரவுக்குத் தகுந்தபடி செலவு செய்

**மருத்துவம் :**

1. சுக்கு இல்லாத கசாயம் உண்டா?
2. ஆலும், வேலும் பல்லுக்குறுதி

**இலக்கண இலக்கியம் :**

1. கல்லாடம் படித்தவனிடம் சொல்லாடாதே
2. வில்லுக்கு விசயன்

**நுண்கலை :**

1. ஆசைக்கு ஓர் அளவில்லை
2. மனக்கவலை பலக்குறைவு

**தத்துவம் :**

1. ஆசை அண்டினால் அழுகையும் அண்டும்
2. இன்றிருப்பார் நாளை இல்லை

**தெய்வம் :**

1. திருக்கற்றவனுக்குத் தெய்வமே துணை
2. தெய்வமே துணை

**பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும் :**

1. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்
2. சனிப்பிணம் தனியே போகாது

**வானிலையியல் :**

1. தட்டான் தாழப்பிறந்தால் தப்பாமல் மழை வரும்

**மாதம், கிழமை :**

1. ஆடிப்பட்டம் தேடி விதை
2. தை பிறந்தால் வழி பிறக்கும்

**பல்பொருள் : (Miscellaneous)**

1. மனம்போல வாழ்வு
2. தன் கையே தனக்குதவி

**பழமொழியால் அறியலாகும் செய்திகள் :**

பண்பாட்டுக் கூறுகளை விளக்கும் பழமொழிகளின் வாயிலாக, சாதி, சமயம், தொழில், உறவுமுறை, மொழி, மிருகங்கள், பறவைகள், செடி, கொடிகள், இயற்கை, குடும்பம், திருமணம் போன்றவற்றைப் பற்றி அறியலாம். பழமொழிகள் மூலம் வாழ்க்கையில் நிலவும் அங்கதச் சுவையும் வாழ்க்கை அனுபவமும் புலப்படுகின்றன. இலக்கியங்களின் பின்னணியில் அறிய இயலாத மக்களின் சமுதாய நம்பிக்கைகள், வழக்குகள், பழக்க வழக்கங்களைக் பழமொழி மூலம் அறியலாம். சுருக்கமாகக் கூறின் வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் பழமொழி மூலம் அறியலாம்.

# 4. விடுகதை

**முன்னுரை :**

வாய்மொழி மரபில் வழக்கிலிருக்கும் விடுகதையை இரு அடிப்படைகளில் ஆய்வாளர் வரையறுத்தனர். சிலர் அமைப்பை அடிப்படையக் கொண்டு வரையறுத்தனர். அமைப்பு என்று சொல்லும் போது இலக்கண அமைப்பின் அடிப்படையிலும், அடிக்கருத்துக்களை அலகுகளாகக் (thematic units) கொண்ட அமைப்படிப்படையிலும் வரையறுத்துள்ளனர். வேறு சிலர் விடுகதைகளின் அறிதல்சார் பண்புகளில் அக்கறை கொண்டு வரையறுத்தனர். அதாவது விடுகதையின் செயல்பாட்டை மையமாகக் கொண்டு உளவியல், சமூகவியல், அறிவு நுட்பத்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அவை நிகழ்த்தப்படும் சூழல்களில் வைத்து வரையறை செய்தனர்.

**தொல்காப்பியத்தில் விடுகதை :**

முதன் முதலில் விடுகதையைப் பற்றிய குறிப்பு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. விடுகதையைத் தொல்காப்பியர் ''பிசி'' என்று குறிப்பிடுகிறார். (செய்யுளியல் 79) அடுத்து நொடியொடு புணர்ந்தபிசி என்று செய்யுளியலில் 165 ஆம் சூத்திரத்தில் குறிப்பிடுகிறார். மேலும்,

''ஒப்பொடு புணர்ந்த உவமத்தானும்
தோன்றுவது கிளந்த துணிவினாலும்
என்றிரு வைத்ததே பிசிவகை நிலையே''

என்றும் குறிப்பிடுகிறார்.

**இலக்கியங்களில் விடுகதை :**

மணிமேகலையில் ''பிசியும் நொடியும் பிறர் வாய்கேட்டு'' என்று வருகிறது. பிசி, நொடி என்பன இங்கு விடுகதைகளையே சுட்டுகின்றன. பெருங்கதையில், ''செம்முது செவிலியர் பொய்ந்நொடி பகர'' என்றும், ''புதல்வரை மருட்டும் பொய்ந்நொடி பகரவும்'' என்றும், ''பிசியும் நொடியும் பிறவும் பயிற்றி'' என்றும் வருமிடங்களில் எல்லாம், பசி, நொடி என்பன விடுகதைகளேயாம்.

**விடுகதை : கலைச்சொற்கள்**

ஒரு மொழியில் குறிப்பிட்ட ஒரு வழக்காற்றைச் சுட்ட நாட்டார் என்னென்ன சொற்களைப் பயன்படுத்துகின்றனர் என்பது மிக மிக இன்றியமையாதது. நாட்டார் வழங்கும் சொற்களை அறிந்தால்தான் அவர்களிடம் அப்பெயர்களைச் சொல்லி அவற்றைப் பற்றிய செய்திகளைச் சேர்க்க முடியம். நாட்டார் வழக்காற்று வகைமைகளின் பெயர்கள் குறிப்பிட்ட ஒரு பண்பாட்டினர் அவற்றை எவ்வாறு கருத்தாக்கம் செய்துள்ளனர் என்பதையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் உட்பொருளை உணர்த்தும். தமிழில் பிசி, நொடி, பிதிர், புதிர், வெடி, அழிப்பாங்கதை, விடுகதை என்ற பல பெயர்கள் வழங்குகின்றன. இச்சொற்களைப் பற்றி ஆறு, இராமநாதன், தமிழில் புதிர்கள், ஓர் ஆய்வு'' என்ற நூலில் ஆராய்ந்துள்ளார்.

'பிசி' என்ற சொல் தமிழ் மொழியில் நாட்டாரிடை இன்று வழக்கிலிருப்பதாகத் தெரியவில்லை. பிசி என்ற சொல்லே பின்னாளில் 'பிதிர்' என்றாகிப் பின் 'புதிர்' என்று மாறியது என்ற கி.வா. ஜகநாதனின் கருத்தைச் ச.வே. சுப்பிரமணியன் ஏற்றுக் கொள்கிறார்.

'நொடி' என்ற சொல் வழக்குப்பற்றி எழுத வந்த ஆறு. இராமநாதன், ''நாட்டார் இன்று புதிர்களை நொடி என்று கூறும் வழக்கு இல்லை'' என்கிறார்.

'வெடி' என்ற சொல் திருச்சி, தென்னார்க்காடு, வடார்க்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் வழக்கத்தில் உள்ளது. வெடி என்ற சொல்லுக்கு விடுவித்தல் என்பது தான் பொருள். வெடித்து விட்டால் புதிர் அவிழ்க்கப்பட்டு விட்டது என்பது தான் கருத்து.

'அழிப்பாங்கதை' என்பது நெல்லை மாவட்டத்தார் வழக்கு. விடுகதையைப் போடுகிறேன். அதனை அழிக்கிறாயா? என்பது மரபு. இங்கு போடுவதை அழிப்பதற்கே, விடுவிப்பதற்கே நொடி, வெடி, விடு, அழி என்ற கருத்தாக்கங்கள் முதன்மையளிக்கின்றன.

இனி 'விடுகதை' என்ற சொல்லை ஆய்வோம். ''விடுகதை என்ற சொல்லாட்சி பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் காணப்படவில்லை

என்றும், இச்சொல்லாட்சி மிக அண்மைக் காலத்திலேயே தமிழ் மொழியில் காலூன்றியுள்ளது என்றும் கூறப்படுகிறது. இச்சொல் தெலுங்கில் ‘விடிகதா’ (vidikatha) என்றும், கன்னடத்தில் ‘ஓடகதே’ (odekathe) விடிகதா என்றும் வழங்கப்படுகிறது. மலையாளத்தில் ‘விடிகதா’ கடங்கதா என்றும் வழங்கப் படுகிறது.

‘விடுகதை’ என்ற சொல் தமிழகமெங்கும் வழக்கிலுள்ளது. விடுவிக்கப்பட வேண்டியது என்பதே பொருள். இச்சொல் எல்லா வகையான விடுகதைகளையும் சுட்ட ஒட்டுமொத்தமாக நாட்டாரால் பயன்படுத்தப்படுகிறதே தவிர எந்தவொரு துணை வகைமையையும் சுட்டுவதாகத் தெரியவில்லை.

**விடுகதைகளின் வகைகள் :**

தமிழில் விடுகதைகளை வகைமை செய்ய முயன்றவர் ஆறு, இராமநாதனே ஆவார். விடுபுதிர் விடுகணக்கு என்று பிரிந்து அவற்றுள் சில வகைகளையும் கூறுகிறார். புதிர் பேச்சு, நாட்டுப்புறப் புதிர்கள், இலக்கியப் புதிர்கள் என்று பிரித்து இவற்றை ஒரு பட்டியலிடுகிறார்.

விடுகதைகளை ரோஜர் டி. ஆப்ரஹாம் அவர்களும் ஆலன்டண்டிஸ் அவர்களும் ஒன்பது வகையாகப் பிரிக்கின்றனர்.

1. விளக்க விடுகதைகள்
2. எதிர்மறை விடுகதைகள்
3. தலை தப்பும் விடுகதைகள்
4. கதையமைப்பு விடுகதைகள்
5. உரையாடல் வகை
6. சொல் விளையாட்டு
7. நகை வினாக்கள்
8. அறிவு வினாக்கள்
9. புதிர்கள்

மரியா லீச் (Maria Leach) அவர்கள் இரண்டு வகையாகப் பகுக்கின்றார்.

1. உண்மை விடுகதைகள்
2. வினா விடுகதைகள்

பிரிட்டானிய கதைக்களஞ்சியம் இரண்டு வகையாகப் பகுக்கின்றது.

1. விளக்க விடுகதைகள்
2. நகை வினாக்கள்

டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் அவர்கள் பண்பு கருதி விடுகதைகளை இரண்டாகப் பகுக்கின்றார்.

1. நாட்டுப்புற விடுகதைகள்
2. இலக்கிய விடுகதைகள்

**விடுகதைச் சூழல் :**

புதிரையும், நொடி வினாவையும் உலகிற்கு வழங்கிய பெருமை இலத்தீன் மொழிக்கு உண்டு. ஜெர்மனியில் ஒரு காலத்தில் மணப்பெண்ணை விடுகதை மூலம் தேர்ந்தெடுத்ததாக அறிகிறோம். தொடக்க காலத்தில் விநோதப் பண்புகளை அடிப்படையாகக் கொண்ட விடுகதைகள் காலப்போக்கில் சமயஞ்சார்ந்த விடுகதைகளாக மாறின. பைபிளிலும், குர்ரானிலும் விடுகதைகள் காணப்படுகின்றன. திருமணச் சடங்கு, இறப்பு, பலி, விழாக் காலங்களில் விடுகதைகள் போடப்பட்டன. ஆப்பிரிக்க விடுகதைகள் தான் உலகில் சிறந்தவை எனக் கூறுகின்றனர். விடுகதை இரவிலே தான் போடப்படுகிறது. இதற்குரிய காரணம் புரியவில்லை. தமிழ் நாட்டில் சிறுவர்கள் ஒன்று சேர்ந்து விட்டால், விடுகதை போடும் வழக்கத்தைச் சில கிராமங்களில் இன்றும் காணலாம்.

**விடுகதையின் கருப்பொருட்கள் :**

மக்கள் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளையும் பிரதிபலிப்பனவான விடுகதைகள் வாழ்க்கையின் பயன்படுபொருள்களான கருப்பொருள் யாவற்றையும் விளக்கும் வகையினவாக அமைகின்றன.

**இயற்கைப் பொருட்கள் :**

1. அப்பா பணத்தை எண்ண முடியாது
   அம்மா புடவையை மடிக்க முடியாது – விண்மீன், வானம்
2. அள்ளலாம், கிள்ள முடியாது – தண்ணீர்
3. இரவில் தோன்றும் இருளை வெட்டும் - மின்னல்

**விலங்குகள் :**

1. ஒற்றைக் கால் நாராயணன்
   ஓடையிலே மீன் பிடிக்கிறான் - கொக்கு
2. தண்ணீர் இல்லாத தடாகத்தில்
   தாவிப்பாயுது ஒரு கப்பல் - ஒட்டகம்
3. இருட்டு வீட்டிலே
   குருட்டெருமை மேயுது – பெருச்சாளி

**பறவைகள் :**

1. அவள் ஒரு பாடகி
   ஆனால் பெண் அல்ல – அது யார்? – குயில்
2. பகலில் துயிலுவான்
   இரவில் அலறுவான் - ஆந்தை
3. பட்ட மரத்தில் பச்சை
   அதிலும் சிவப்பு – கிளி

**தாவரங்கள் :**

1. பரந்த காட்டேறிக்குப்
   பக்கமெல்லாம் சடை – ஆலமரம்
2. ராசா மகள் பூ இல்லாமல்
   சடை போட மாட்டாள் - முருங்கை
3. அடி மலர்ந்து நுனி மலராத பூப்பூக்கும் - வாழை

**தானியம் :**

1. அடி காட்டில் நடு மாட்டில்
   நுனி வீட்டில் - நெல்
2. நடுக்காட்டில் ஈட்டி – கம்பு

**உடல் உறுப்புகள் :**

1. ஒரு சாண் குட்டையில் ஒரு முழவால் - நாக்கு
2. அண்ணனுக்கு எட்டாதது
   தம்பிக்கு எட்டும் - உதடு
3. இரண்டு கிணற்றுக்கு
   ஒரு பாலம் - மூக்கு

**உணவுப் பொருட்கள் :**

1. அரிசி பணத்துக்கு ஒரு படி
   ஆக்கித் தின்ன ஆள் இல்லை – உப்பு
2. வெள்ளைக்காரன் பூக்க
   வெகுபேர் காத்திருக்கிறார் – சோறு
3. கோழி மேயுது குடல் வேகுது – முட்டை

**பண்ட பாத்திரங்கள் :**

1. ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை – அடுப்பு
2. கடகடா குடுகுடு நடுவிலே பள்ளம் - ஆட்டுக்கல்
3. அட்டைக்கு ஆயிரம் கண் - சல்லடை

**அணிகலன்கள் :**

1. ஒட்டுத் திண்ணையிலே பட்டுக் காயுது - மூக்குத்தி
2. தரையில் முட்டிடும் விரலில் ஒட்டிடும் - கால் மெட்டி
3. தலையை முறித்துக் கம்பு காட்டுக்குள் வைத்தான் - தலைப்பாகை

**அறிவியல் :**

1. ஆடையில்லாத கறுப்பழகி
   ஆடிச் சுழன்று பாடுகிறாள் - இசைத்தட்டு
2. இந்த ஊரிலே அடிபட்டவன்
   அடுத்த ஊரிலே போய்ச் சொல்லுகிறாள் - தந்தி
3. உயரப் பறக்குது ஊர்க்குருவி – வானவூர்தி

**விடுகதையின் நடை :**

**1. மோனை**

கறுப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன் - பூட்டு

**2. எதுகை**

கடித்தால் கடிபடாது
பிடித்தால் பிடிபடாது – தண்ணீர்

**3. இயைபு**

பச்சைப் பசேலென்றிருக்கும் பாகற்காயுமல்ல
பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல
உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமல்ல
உருக்கினால் நெய் வடியும் வெண்ணையுமல்ல – ஆமணக்கு

4. **அந்தாதி**

ஏணியிலே கேணி
கேணியிலே குண்டு
குண்டுமேலே புல்லு
புல்லுக்குள் பூச்சி

**ஓரடி விடுகதை :**

சிவப்புச் சட்டிக்குக் கறுப்பு மூடி – குன்றிமணி

**ஈரடி விடுகதை :**

செத்துக் காய்ந்த மாடு
சந்தைக்குப் போகிறது – கருவாடு

**மூவடி விடுகதை :**

காயும் காய்க்கும்
பூவும் பூக்கும்
காசுக்கொரு இலையில்லை – நாகதாளி

**நாலடி விடுகதை :**

ஏறினால் வழுக்கும்
இலையென்றால் சுருளும்
காய் என்றால் துவர்க்கும்
பழம் என்றால் இனிக்கும் - வாழை

**விடுகதையால் அறியலாகும் செய்திகள் :**

விடுகதை மூலம் வட்டார வழக்குகள் மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், காலமாற்றத்தின் சாயல்கள் முதலிவற்றை அறிய முடியும். மனித வாழ்வில் காணப்படும் கருப்பொருட்கள் அனைத்தையும் விளக்குகின்றன. மக்களிடையே காணும் ஒழுக்கம், அவர்கள் வழிபடும் தெய்வம், தொழில் முறைகள், சாதி வேறுபாடுகள் போன்ற பலவும் விடுகதையின் பின்னணியில் உணர்த்தப்படுகின்றன. மனித இனத்தின் சிந்தனைத் திறனை அளவிட்டு அறிவிக்கும் கருவியாக நிற்பதோடு மட்டுமின்றி மக்களின் செயல்முறைகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைப் போக்கு, கொள்கைகள், கோட்பாடு ஆகியவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் வரலாற்றுச் சான்றாகவும் விடுகதைகள் விளங்குகின்றன என டாக்டர் ச.வே.சுப்ரமணியம் கூறுவது குறிப்பிடத்தக்கது. மனித சமுதாய வரலாற்றை அறிய விடுகதைகள் துணை புரிகின்றன.

**பயிற்சி வினாக்கள் :**

**I. ஒரு பக்க வினா :**

1. தாலாட்டு பாடல்கள் என்றால் என்ன?
2. தெம்மாங்கு பெயர்க் காரணம் யாது?
3. ஒப்பாரி பாடும் முறையினை விளக்குக.
4. நாட்டுப்புறக் கதைகளின் வகைகள் யாவை?
5. பழமொழியின் வரையறை.
6. விடுகதையின் கலைச்சொற்களைக் குறிப்பிடுக.

**II. மூன்று பக்க வினா :**

1. தாலாட்டுப்பாடல்கள் குறித்துக் கட்டுரை வரைக.
2. தெம்மாங்குப் பாடல்களில் காதல் பெறும் இடத்தை மதிப்பிடுக.
3. ஒப்பாரிப் பாடல்கள் குறித்து விளக்குக.
4. பழமொழியின் சிறப்பினைக் கூறுக.
5. விடுகதையின் கருப்பொருட்களை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

# அலகு-4

## சமூக பழக்கவழக்கங்கள் : உணவு, உடை, அணிகலன்கள்

**முன்னுரை :**

நாகரிகம் என்ற சொல் புதியது. புதுமை என்ற பொருளில் வழங்கப்படுகிறது. ‘‘நல்ல நாகரீகம் பாருங்க நம்ம நாட்டினிலே, எல்லாமே புதுசுதானுங்க’’ என்ற தொடர்கள் இதனை விளக்குகின்றன. தலையை ஒப்பனை செய்து கொள்வது, ஆடை அணிகளால் உடலை ஒப்பனை செய்து கொள்வது போன்ற மக்களின் புறக்கலை வளர்ச்சி நிலைகளே நாகரிகம் என்றழைக்கப்படுகிறது. நாகரிகம் உணவிலும், உடையிலும், அணிகலன்களிலும் இவை போன்ற பிற வாழ்க்கையின் ஆரவாரங்களிலும் தோன்றுகிற ஒன்றாகும் என்ற கருத்து ஈண்டு நோக்கத்தக்கது. ‘‘தற்கால நாகரிகம் தலையைக் கெடுக்கும்’’, ‘‘நாகரிக பொடவ கட்டி’’, ‘‘நாகரிகமான தோடு முத்துமணி’’ போன்ற தொடர்களும் இதனை விளக்குகின்றன. மேலும், உறைவிடம் பயன்படுத்தும் மனைப்பொருட்கள், உணவுமுறைகள், வாகனங்கள் முதலியனவும் நாகரிகக் கூறுகளாகப் பேசப்படுகின்றன. இவை பண்பாடு என்று அழைக்கப்படுவதில்லை. இந்த அடிப்படை வேறுபாடுகளை மனதிற்கொண்டு நாகரிகம் என்பதற்கு ‘‘மக்களின் புறவாழ்க்கையின் புறக் கோலத்தின் வளர்ச்சிமிகு மாற்றங்கள்’’ என்றும், பண்பாடு என்பதற்கு ‘‘மனவளர்ச்சி மேன்மேலும் திருந்தி வரும் திருத்த நிலை’’ என்றும் பொருள் வரையறை செய்து கொள்ளலாம். அறிவு வளர்ச்சி, கலை வளர்ச்சி என்பன வளர்ச்சியோடு தொடர்புடையன. நாட்டுப்புற மக்களின் உணவுப் பழக்கவழக்கம், உடை, அணிகலன்கள் இன்னும் பிற பழக்க வழக்கங்கள் குறித்து இதன்கண் காண்போம்.

**உணவு :**

**முதன்மை உணவுகள் :**

மக்களின் உணவுமுறை பற்றிய குறிப்புகள் பல்வேறு பாடல்களில் இடம்பெறுகின்றன. அவற்றுள் சோறு அல்லது சாதம், கஞ்சி, கூழ், களி முதலியன முதன்மை உணவுகளாகும். இட்லி, தோசை, பிட்டு, கொழுக்கட்டை, அப்பம், பணியாரம், முறுக்கு, அதிரசம் முதலிய சிற்றுண்டிகளையும் முதன்மை உணவுகளாகக் கருதலாம். பலகாரம், பட்சணம்

என்ற சொற்களால் கட்டப்படும் இவை சிறப்பு நாட்களில் மட்டுமே பயன்படுத்தப்படும் முதன்மை உணவுகளாகும். நெல்லரிசி, கம்பு, கேழ்வரகு, சோளம், வரகரிசி முதலியன சமையலுக்கும் பயன்படுத்தப்படும் முதன்மை தானியங்களாகும். இவற்றுள் முதல் மூன்று தானியங்களே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. வேர்க்கடலை மிகுதியாக விளையும் பகுதிகளில் அதுவும் உணவுமுறைகளில் சிறப்பிடத்தைப் பெறுகின்றது.

**துணை உணவுகள்**

ஆடு, கோழி, பன்றி, எலி, உடும்பு, மாடு முதலியவற்றின் இறைச்சிகளும் மீன், நண்டு, கருவாடு, சின்னாகுனி, கோழிமுட்டை, வாத்துமுட்டை முதலியனவும் கத்தரிக்காய், மாவடு, கொள்ளு, பூசணிக்காய், நெல்லிக்காய் முதலியனவும், குழம்பு, சாம்பார், வறுவல், பொரியல், வதக்கல், தொவயல், ஊறுகாய் போன்ற பல்வேறு வடிவங்களில் முதன்மை உணவுகளுக்குத் துணை உணவுகளாகின்றன.

**பானங்கள்**

கள், கஞ்சித்தண்ணி, பால், மோர் முதலிய பானங்களும், மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. சிலர் சாராயத்தைச் சிறப்புச் சந்தர்ப்பங்களில் இயல்பாகப் பயன்படுத்துவதை நடைமுறையில் காணமுடிகிறது.

**உணவைப் பக்குவப்படுத்துதலும், நாகரிக நிலையும்**

தானியங்கள், காய்கனிகள், இறைச்சி, மீன் முதலியவற்றைப் பச்சையாக உண்ணல், தீயிலிட்டு வாட்டி உண்ணல் முதலிய பல்வேறு படிநிலைகளை அடிப்படையாகக் கொண்டு, மக்களின் நாகரிக நிலையில் ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கப்படுகின்றன. உணவுச் சேர்க்கையை அடிப்படையாகக் கொண்டு சிலவகை உணவுகள் சிறப்பித்துப் பேசப்படுகின்றன.

இறைச்சி, மீன் முதலியவற்றைப் பச்சையாக உண்ணும் பழக்கம் அநாகரிக நிலையைக் குறிக்கும். தமிழகத்தில் அந்நிலை இல்லை. பாடங்களிலும் அது பற்றிய குறிப்பு இல்லை. நண்டினைச் சுட்டுத் தின்பதைப் பற்றி ஒரு பாடல் குறிப்பிடுகிறது. ஏனைய பாடல்கள் தானியங்கள், காய்கனிகள் முதலியவற்றைப் பச்சையாகவோ, எளிய அல்லது உயர்ந்த

முறையில் சமைத்தோ உண்ணும் நிலையைக் குறிக்கின்றன. இறைச்சியை சமைத்து உண்பதையே பாடல்கள் குறிப்பிடுகின்றன.

**சிறப்புணவுகள்**

சோறு, கூழ், களி முதலியவற்றுள் (நெல்லரிசி) சோறு சிறந்த உணவாகக் கருதப்படுகிறது. இதனாலேயே மக்கள் கம்மங்கூழினையும் சோளக் கூழினையும் கூழ் என்று சுட்டாமல் சோறு என்று அதாவது கம்மஞ்சோறு, சோளச்சோறு என்று சுட்டுகின்றனர்.

சோற்றிலேயே அரிசியின் தரத்தை வைத்து உயர்வு தாழ்வு கற்பிக்கப்படுகிறது. குண்டஞ்சம்பா, சிறு சம்பா, நீட்டஞ்சம்பா முதலிய அரிசிச்சாதங்கள் உயர்வாகவும், குறுவை அரிசிச் சாதம் தாழ்வாகவும் பேசப்படுகின்ற நிலையைக் காணலாம்.

நெய்யூற்றியோ, பாலூற்றியோ வறுக்கப்படும் பாகற்காய், நெய் மணக்கும் கத்திரிக்காய், புச, புசன்னு தோசை, வெண்கலம் போலே முறுமுறுப்பா தோசை, ஆற்றுமணலைப் போல் பொல பொலவென்றிருக்கும் புட்டு முதலிய உணவுகள் சமைக்கப்படும் பக்குவத்தால் சிறப்புப் பெறுகின்றன.

விருந்திற்கு வந்திருக்கும் ‘‘பசிக்கேற்ற காப்பி’’ வைத்தலையும் சிறப்பித்துக் கூறுகின்றாள் ஒரு பெண். ‘‘சோறு முண்ணா கொஞ்சம் வச்சி குத்துக்கறி மிச்சம் வச்சி’’ உண்பது சிறப்பான விருந்துணவாகக் கருதப்படும் நிலையை உணர்ந்து கொள்ளமுடிகிறது. தாகத்திற்கு மோர் குடிப்பது சிறப்பாகக் கூறப்படுகிறது. பதனீர் ஏழைகளுக்கேற்ற பானமாகவும், கள் வசதி மிக்கவர்களின் பானமாகவும் காணப்படுகிறது.

சில முதன்மை உணவுகளோடு சில துணை உணவுகளின் சேர்க்கை (Combination) சிறப்பாகப் பேசப்படுகின்றன. குழம்பும் சோறும், சாறும் சோறும், சுடுசோறும் சுடுகுழம்பும், சுடுசோறும் புளிக்குழம்பும், தயிரும் சோறும், வத்தல் மீன்குழம்பும், இட்லியும் ஏலக்காய் சாம்பாரும், இட்லியும் பாவக்காய் சாம்பாரும், புச புசன்னு தோசையும் புளிக்குழம்பும், அப்பமும் வெல்லமும், கறித்தோசை என்பனவற்றைச் சான்றுகளாகக் கூறலாம். இந்தச் சேர்க்கைகூட கிராமப்புற மக்கள் பலருக்கு அரிய சுவை மிகுந்த உணவாகக்

காட்சியளிப்பதைக் காண முடிகிறது. உண்ண உணவே கிடைக்காதவர்கள் உணவை விரும்பி உண்பதைக் காணமுடிகிறது. எப்போதும் தண்ணீர் ஊற்றிச் சாப்பிடுபவர்களுக்கு குழம்புச் சோறும் சிறப்புணவாகத் தோன்றும். எப்போதும் பழங்கஞ்சி உண்பவர்களுக்கு சுடுசோறும் சுடுகுழம்பும் உயர்வாகத் தெரியும். இவ்வாறே பிற உணவுச் சேர்க்கை கூட கிராமப்புறு மக்கள் பலருக்கு அரிய உணவாகக் காணப்படுவதிலிருந்து அம்மக்களின் பொருளாதார தாழ்நிலையை உணர்ந்து கொள்ள முடிகிறது.

**சாதியும் உணவும்**

உணவு வகைகளுள் சில சில சாதியினர்க்கே உரியவையாகக் காணப்படுகின்றன. கன்னிக்காடை, காட்டுப்பூனை, குள்ளநரி, மறனுக்குஞ்சி ஆகிய அனைத்தையும் சேர்த்துக் “கறிக்குழம்பு” வைத்துண்ணல் குறவர்களின் உணவாகக் கூறப்படுகிறது. நண்டு உணவு கவுண்டர், மலை மக்கள் பாடல்களில் காணப்பிடுகிறது. பறையர், குறவர், இருளர், தொம்பர், கன்னார், தச்சர், கவுண்டர் ஆகியோர் பன்றியிறைச்சி உண்பதைப் பற்றிப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. “பன்றியறுத்துக் கூறுபோடும் பணம் பெருத்த பேரங்கியூர்” என்று தங்கள் ஊரின் செல்வ வளத்தைப் பற்றி ஒரு கவுண்டர் பெண் பாடுவதைக் காணலாம். இதில் பன்றியிறைச்சி சிறப்பான உணவாகக் கருதப்படுகிறது.

**உணவு நாகரிகமும் குடும்பமும்**

சமுதாயத்தில் பொதுவாகக் கூழ் சிறந்த உணவாகக் கருதப்படவில்லை என்றும் சோறே சிறந்த உணவாகக் கருதப்படுகிறது என்றும் முன்னர்க் கூறப்பட்டது. எப்போதும் கூழே பயன்படுத்தும் ஒரு எளிய குடும்பத்தின் தலைவியாக விளங்கும் ஒரு பெண் அவ்வுணவை வெறுக்கிறாள். கணவன் மீதுள்ள வெறுப்பு ஒரு காரணமானாலும் சோறுண்ண நினைக்கும் நினைவால் தோன்றிய வெறுப்பாகவும் இதனைக் கருதலாம். இதன் விளைவாகக் குடும்ப அமைதி கெடுவதைப் பாடல் விளக்குகின்றது. இதைப்போலவே இட்லி காப்பு பணக்காரர்களின் நாகரிக உணவாகக் கருதப்படுவதையும் அந்நாகரிகத்தை மேற்கொள்ள நினைக்கும் பல ஏழை ஆண்கள் இட்லிக் கடைகளில் கடன் வாங்கித் தின்றுவிட்டுக் கடனை அடைக்க இயலாமல் கடன் பணத்திற்கான வட்டி கட்டுவதையும் பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றன. புதிய நாகரிகத்தால் குடும்ப அமைதி கெடுவதற்கு இவை சான்றுகளாகின்றன.

**ஒப்பனைப்பொருட்களும், ஒப்பனை முறைகளும் :**

உடலைத் தூய்மைப்படுத்திய பின் பயன்படுத்தப்படும் ஒப்பனைப் பொருட்களையும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு மக்களின் நாகரிக நிலை அளவிடப்படுகிறது.

**நீராடல் :**

குளிக்காமை, பல் துலக்காமை முதலியன நாகரிகமற்ற செயல்களாகக் கருதப்படுகின்றன. குறவர்களின் வாடிக்கையைக் கூறும்போது குளிக்காமை, பல் துலக்காமை, சீண்ட நாற்றம் அடித்தல், சீலப்பேன் பிடித்தல் போன்ற அவர்களின் நிலையைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இத்தன்மைகளே இவர்களை நாகரிமற்றவர்களாக ஆக்கிவிடுவதை உணர முடிகிறது.

நீராடி உடலைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் பழக்கம் தமிழர்களிடம் பழங்காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது என்பதை இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. பிற்காலத்தெழுந்த பாவை நோன்பு அதிகாலையில் நிகழ்ந்த நீராட்டினை அடிப்படையாகக் கொண்டதே என்பர். சூலுற்ற மகளிர் எண்ணெய் தேய்த்து நீராடுதலும் தொன்மையான பழக்கம் என்பதை இலக்கண, இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

இன்றைய நிலையில் இருபாலரும் எண்ணெய் தேய்த்து நீராடுகின்றனர். நல்லெண்ணெய் (எள் எண்ணெய்), விளக்கெண்ணெய் (முத்துக்கொட்டை எண்ணெய்) ஆகிய இரண்டும் நீராடப் பயன்படுத்தப்படுகின்றன. எண்ணெயைப் போக்க அரப்பு என்று அழைக்கப்படும் ஒருவிதத்தழை பூசப்படுகிறது.

“ஆவாரம்பட்ட வெட்டி அலக்கத்தல மெழுவி” என்ற பாடற்குறிப்பு ஆவாரம் பட்டையைத் தலையில் தேய்த்துக் குளிக்கும் பழக்கத்தைக் குறிக்கிறது போலும்”.

மஞ்சள் தேய்த்துக் குளிப்பது பெண்களுக்கு மட்டுமே உரிய பழக்கமாகக் காணப்படுகிறது. ஒரு ஆண்மகன் கேலி செய்யப்படும்போது அல்லது இகழ்ந்துரைக்கப்படும்போது ‘மஞ்சள் குளித்தவன்’ என்று சுடப்படுவதை வழக்கில் காணலாம். குளிப்பதற்கென்று தனி மஞ்சள் உண்டு. வெளியில் அலைந்து திரிந்ததால் புழுதி படிந்து வந்திருக்கும் அன்பனிடம்

“தேய்தாங்கொட்டை வாங்கித் தருகிறேன்; உன் உடம்மைத் தேய்த்துக்கொள்” என்று குறிப்பிடப்படுகின்றது. குடிநீருக்கு ஆற்றுநீர் அல்லது குளத்துநீரைப் பயன்படுத்தும் கிராம மக்கள் அந்நீர் கலங்கலாக இருந்தால் அதனை ஒரு பாத்திரத்திலிட்டுத் தேய்த்தாங் கொட்டையைத் தேய்த்து அந்நீரில் விடுவர். சற்று நேரத்தில் நீரோடு கலந்துள்ள மண் முதலிய அசுத்தங்கள் அடியில் தங்கிவிடும். மேலே தெளித்து நிற்கும் நீரை எடுத்துக் குடிக்கப் பயன்படுத்துவர். ஆனால் குளிப்பதற்கு ஆறு அல்லது குளத்தில் இருக்கும் கலங்கலான நீரை அப்படியே பயன்படுத்தும் நிலையையே பெரும்பாலும் காணலாம்.

**ஆடை அணிதல் :**

மக்கள் உடுத்தும் ஆடைகள் பற்றிய குறிப்புகள் பாடல்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவற்றைப் பற்றிக் காண்போம்.

**பட்டுடை:**

பட்டுடை பழங்காலத்திலிருந்தே தமிழகத்தில் இருந்திருக்கிறது என்பதற்குப் பொருநராற்றுப்படை போன்ற சங்க இலக்கியங்கள் சான்று கூறுகின்றன. நாட்டுப்புறப் பாடல்களுள் கடவுளோடு தொடர்புடைய பாடலிலும், பணக்காரர் பற்றிய பாடலிலும், பட்டணத்துப் பெண்கள் பற்றிய பாடல்களிலும், பெண்கள் தங்கள் பிறந்த வீட்டுப்பெருமை பேசும் பாடலிலும், புகுந்த வீட்டுப்பெருமை பேசும் பாடலிலும், பட்டுடை பற்றிய குறிப்புகள் வருகின்றன. இதைத் தவிரப் பட்டுடை எளிய மக்களால் அணியப்பட்டதாக எந்தப் பாடலிலும் குறிப்பு இல்லை.

**பெண்ணுடை :**

புடவை, இரவிக்கை, உள்பாடி முதலியன பெண்களின் உடைகளாகும்.

**புடவை :**

பெண்களின் மிக இன்றியமையாத உடை புடவை. இதனைக் குறிக்கச் சேலை, சீலை என்ற சொற்களே மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**வண்ணப்புடவைகள்**

மல்லிகைப்பூ, செவ்வந்திப்பூ போன்ற மலர்களையொத்த அழகும், மென்மையும் வண்ணமும் உடைய சேலைகளும் பூப்போட்ட சேலைகளும் நீலம், பச்சை, வெள்ளை போன்ற வண்ணச் சேலைகளுடன் பல வண்ணச்

சேலைகளும் பொரி பொரித்தாற்போன்று மான்புள்ளி போன்றும் புள்ளி போட்ட சேலைகளும், குண்டுமணி, பப்பாளி ஆகிய நிறங்களில் உள்ள சேலைகளும் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. சீட்டி என்ற எளிய துணி மக்களிடம் மிகுதியாகச் செல்வாக்குப் பெற்றுள்ளது.

**புடவை நெய்யும் ஊரும் தரமும் :**

சேலைகள் அவை நெய்யப்படும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு ஆர்க்காட்டுச் சேலை, காந்தலூரான் கம்பி சீல என்றும் நெய்யப்படும் நூலின் தரத்தை அடிப்படையாகக் கொண்டு ஒண்ணா நம்பருசீல என்றும் அழைக்கப்படுகின்றன.

**திருமணப் புடவை :**

திருமணத்தின்போது மட்டும் கட்டிக்கொள்ளக்கூடிய புடவை கூறை சேலை எனப்படும். சிறு சிறு கூட்டம் போடப்பட்ட எளிய புடவையே கூறைப்புடவை எனப்படும். கூறை நல்லாடை, பட்டாடை என்று திவாகரம் குறிப்பிடும் மூன்று தரங்களில் கூறை சாதாரண ஆடையாயிருத்தல் வேண்டும் என்று பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை கருத்தை ஈண்டு ஒப்புநோக்கலாம். கூறைப்புடவை பட்டாலும் நெய்யப்படுவதுண்டு என்பதைத் “தாலிகட்டும் கூறை சேலை பெங்களூர் பட்டு” என்ற தொடரால் அறிந்து கொள்ளலாம்.

**ஆடை நாகரிமும், குடும்பப் பொருளாதாரமும் :**

இரண்டாம் உலகப்போர் நடந்த காலத்தில் “வாயில் சேலை” பணக்காரர் மட்டுமே உடுத்தும் சேலையாக இருந்தது என்பதையும், பிற்காலத்தில் அனைவரும் உடுத்தும் சேலையாக மாற்றம் பெற்றது என்பதையும் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. சில நாகரிகப் பொருட்கள் மக்களிடம் பரவத் தொடங்கும்போது உற்பத்தி பெருகி விலை குறையத் தொடங்கும். எனவே, அனைவராலும் பயன்படுத்தத்தக்க பொருட்களாகி மாற்றம்பெறும். வாயில் சேலையும் அது தோன்றிய காலத்தில் பணக்காரர்கள் மட்டுமே பயன்படுத்தத்தக்க அளவு விலை உயர்ந்ததாகவும் தற்காலத்தில் அனைவரும் பயன்படுத்தத்தக்க அளவு குறைந்ததாகவும் மாற்றம் பெற்றுள்ள நிலையை அறிந்துகொள்ள முடிகிறது.

வெங்காய சில்க்கு சேலையைப் பெண்கள் குறிப்பாக இளம்பெண்கள் விரும்பி அணியும் நிலை பற்றி விமர்சனம் செய்கிறது ஒரு பாடல். பெண்கள் உடல் தெரியுமாறு மெல்லிய சேலை அணிவது ஒழுக்கக்குறைவான செயல் எனக் கருதும் கிராமப்புற ஆண்களின் குறிப்பாகி முதியவர்களின் மனநிலையை இப்பாடல் தெளிவுபடுத்துகிறது. "புதிய நாகரிகத்தால் பண்பாடு கெட்டுவிடும்" என்ற எண்ணமே எதிர்ப்பிற்கான காரணம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால் இதற்கு பொருளாதாரமும் ஒரு காரணமாக இருப்பதை உணர முடிகிறது. சில நாகரிகப் பொருள்கள், அவை தோன்றும்போது விலை உயர்ந்தவையாக இருக்கும் என்று மேலே குறிப்பிடப்பட்டது. எனவே, விலையுயர்ந்த புதிய நாகரிகப் பொருட்களைக் குடும்ப உறுப்பினர்கள் பயன்படுத்துவது அக்குடும்பப் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும். இப்பாதிப்பினைக் குடும்பப் பொறுப்பேற்காத இளையோர் உணர்வதில்லை. ஆதலால் அவர்கள் புதிய நாகரிகப் பொருட்களை விரும்புகின்றனர். ஆனால் குடும்பப் பொறுப்பேற்றிருக்கும் முதியவர்கள் புதிய நாகரிகப் பொருட்கள் குடும்ப பொருளதாரத்தைச் சீர்குலையச் செய்கிறது என்பதை உணர்ந்து கொள்வதால் அவர்கள் அதனை எதிர்க்கிறார்கள். இளையவர்கள் சற்று முதியவர்களாகிக் குடும்பப் பொறுப்பேற்றவுடன் உண்மைநிலையை உணர்வதால் அவர்கள் புதிய நாகரிகத்தை எதிர்ப்பவர்களாக மாறுகின்றனர். புதிய நாகரிகத்தால் சமுதாயம் கெடுகிறது என்று கூறிப் புதிய நாகரிகத்தைக் கண்டித்துக் குரல் எழுப்புகின்றனர். இந்நிலை இடையறாமல் நிகழ்ந்து கொண்டிருப்பதால்தான் சமுதாயத்தில் எல்லாக் காலத்திலும் புதிய நாகரிகத்தை "வரவேற்பவர்கள்", "எதிர்ப்பவர்கள்" என்ற இரு அணிகள் நிரந்தரமாகக் காணப்படுகின்றன.

**வெள்ளைப்புடவை :**

வெள்ளை நிறத்தை அமங்கலமாகக் கருதும் பழக்கம் கிராமப்புற மக்களிடம் காணப்படுவதில்லை என்பதை வெள்ளைப்புடவை கட்டிச் செல்லும் பெண்களைச் சிறப்பிக்கும் பாடல்களால் உணர்ந்து கொள்ளலாம். முற்பட்ட சாதியினரிடம் தான் வெள்ளைப்புடவை விதவைக்கு உரியதாகவும், எனவே அமங்கலமானதாகவும் கருதும் நிலை காணப்படுகிறது.

**விதவையும், ஆடையும் :**

கணவனை இழந்த மகளிர் உயர்ந்த சேலையை அணியக்கூடாது என்பதையும் சித்தாடையையும், பழந்துணியையும் அணிய வேண்டும் என்பதையும் பாடல் உணர்த்துகின்றது.

**சிறுமியர் ஆடை :**

பாவாடை, சித்தாடை, தாமணி (தாவணி) முதலிய ஆடைகளும் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. இவை சிறுமியரும் இளங்கன்னியரும் உடுத்தும் ஆடைகளாகும்.

**இரவிக்கை :**

பெண்களின் மேலாடை ரவிக்கு, லவிக்கி, ஜாக்கெட்டு, சட்டை என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. புள்ளி போட்ட ரவிக்கை, ஆரங்கி (ஆரஞ்சு) வண்ண ரவிக்கை போன்ற ரவிக்கைகள் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. தைக்கும் இடங்களை அடிப்படையாகக் கொண்டு மெட்டாசி (Madras) லவுக்கி, பம்பாய் ரவிக்கி என்றும் அழைக்கப்படுகின்றன. சேலையை ஒப்பிட ரவிக்கையைப் பற்றிய குறிப்பு மிகக் குறைவாகவே உள்ளது. இன்னும் கூடப் பின்தங்கிய கிராமப்புறங்களில் நடுத்தர வயதுக்கு மேல் பெண்கள் பலர் இரவிக்கை அணியாமலிருப்பதைக் காணமுடிகிறது. இரவிக்கையில் பல்வேறு வளர்ச்சி நிலைகள் தோன்றிவிட்ட இக்காலக் கட்டத்திலும் கூடக் கிராமப்புறங்களில் இரவிக்கையணியும் நாகரிகம் முற்றிலும் பரவவில்லை என்பதையே சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன.

**உள்பாடி :**

உள்பாடி அணியும் பழக்கம் கிராமப்புற பெண்களிடம் பரவிக் கொண்டிருக்கிறது. இது லப்பர் பாடி என்றும் சம்பர் பாடி என்றும் சுட்டப்படுகிறது.

**ஆணுடை :**

ஆணுடைகளுள் வேட்டி, துண்டு ஆகிய இரண்டும் முதன்மை இடம்பெறுகிறது. சட்டை, பனியன், கால்சராய் (Pant) பற்றிய குறிப்புகளும் பாடல்களில் இடம்பெறுகின்றன.

**வேட்டி :**

வேட்டிகளுள் பட்டுவேட்டி, சரிகை வேட்டி, வெள்ளை வேட்டி, சாயவேட்டி, எட்டுமொழ வேட்டி, ஆறுமொழ வேட்டி, சந்தனகலர் வேட்டி, கருப்புக்கர வேட்டி, செவப்புக்கர வேட்டி முதலானவை அழகானவையாகக் கூறப்படுகின்றன. எட்டுமொழ வேட்டி, கருப்புக்கர வேட்டி முதலியனவற்றைக் கட்டுதல் பெருமையாகப் பேசப்படுகின்றன. சிலர் கோவணம் மட்டுமே அணிதலையும் பாடல் சுட்டுகிறது. தலையில் "தலப்பா" கட்டுதலும் கிராமப்புறங்களில் காணப்படுகிறது. பெரும்பாலோர் தொழில்புரியும்போது கோவணம் கட்டித் தலைப்பாகையுடன் இருப்பதைக் காணலாம். ஏழ்மைக் காரணமாக நிரந்தரமாக இதே கோலத்தில் இருப்பாரும் உண்டு.

**துண்டு :**

துண்டுகளுள் பட்டுத்துண்டு, சரிகைத்துண்டு, நாகப்பட்டினம் துண்டு, முருங்கப்பூத்துண்டு முதலியன குறிக்கப்படுகின்றன. இவற்றுள் நாகப்பட்டினம் துண்டு என்பது நெய்யப்படும் இடத்தை அடிப்படையாகக் கொண்ட பெயர். பாசமலர் என்னும் திரைப்படத்தில் நடிகர்கள் பயன்படுத்தும் துண்டின் மாதிரியை (Model) அடிப்படையாகக் கொண்டு நெய்யப்படும் துண்டு அப்படத்தின் பெயராலேயே சுட்டப்படுகிறது. திரைப்படத்தின் வாயிலாக உடை நாகரிகம் பரவுவதற்கு இது ஒரு சான்றாகும். தி.மு.க. ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் (M.L.A) நீண்ட துண்டு போடுவது வழக்கம். இவ்வாறு நீண்ட துண்டினைப் போட்டுக் கொண்டு பெருமிதத்துடன் செல்லும் நிலை மக்களைக் கவர்ந்தது போலும். அவ்வாறு நீண்ட துண்டு போட்டுச் செல்வது ஒரு நாகரிகமாகவே வளர்ந்த நிலையை ''எம்.எல்.ஏ.துண்டு" என்று சுட்டப்படுவதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம். ''டர்க்கிடவல்'' என்று அழைக்கப்படும் துண்டினையே ''முருங்கப்பூ டவல்'' ''தேங்காப்பூ டவல்'' என்று மக்கள் அழைக்கின்றனர்.

**சட்டை :**

பண்டைத் தமிழர் சட்டையை அறிந்திருக்கவில்லை நமது நாட்டிற்கு வந்த யவணர் முதலியோரே சட்டையை அணிந்தனர் என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன. கிராமப்புற எளிய மக்களைப் பொறுத்தவரை சட்டையணியும் பழக்கம் மிகப் பிற்காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும்

எனத் தெரிகிறது. இவர்கள் சட்டைணியாததால் தான் சட்டையணியும் நாகரிகம் கிராமப்புறங்களில் இன்னும் முற்றிலுமாகப் பரவவில்லை. கருப்பு, சிவப்பு, வண்ணச் சட்டைகள் குறிப்பிடப்படுகின்றன. பட்டுச்சட்டை பற்றியும் ஓட்டுநர் அணியும் காக்கிச் சட்டை பற்றியும் பாடல்கள் குறிப்பிடுகின்றன.சொக்கா, ஷர்ட்டு என்ற சொற்களும் சட்டையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

**பனியன் :**

பனியன் அணியும் பழக்கம் கிராமப்புறங்களில் பரவிக் கொண்டிருக்கிறது என்பதைப் பாடல் தெளிவுபடுத்துகிறது.

**கால்சராய் :**

காலுசரா (Pant) போட்டு காரிலே வந்த இளைஞனிடம் ஒரு இளம் பெண் எளிதில் மயங்குவதை ஒரு பாடல் குறிப்பிலிருந்து அறிந்து கொள்ளலாம். அவ்விளைஞன் சென்னையிலிருந்து வந்ததாகப் பாடற்குறிப்பிலிருந்து ஊகிக்க முடிகிறது. “கால்சராய்” அணிதல் வெள்ளையர் நாகரிகம் முதலில் நகர்ப்புற செல்வந்தர்களிடம் பரவி அவர்கள் வாயிலாகக் கிராமப்புறங்களுக்கு பரவியது என்பதைப் பாடல் தெளிவுபடுத்துகிறது. புதிய நாகரித்தை இளைய சமுதாயம் விரும்பி வரவேற்பதைப் பாடலால் அறிந்து கொள்ளலாம்.

**சிகையலங்காரம் :**

**ஆண்கள் :**

பண்டைத்தமிழர் முகத்தை மழித்துக் கொள்ள அறிந்திருக்கவில்லை. கத்திரியாகிய மயிர்க்குறை கருவியால் ஏகதேசமாக முகமயிர் முதலியவற்றைக் கத்திரித்து வந்தவர்கள் என்றும் பெரும்பாலும் மீசை தாடி வளர்க்க நேரிட்டது என்றும் தலைமுடியை எண்ணெய் தடவி பதஞ்செய்துப் பூவினால் புனைந்து கொண்டனர் என்றும் ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். இதில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தாலும் கூடச் சமீபகாலம் வரை ஆண்கள் நீண்ட முடி வளர்த்துக் குடுமி வைத்தனர் எனத் தெரிகிறது. ‘‘மீசை முறுக்கழகா மின் குடுமிகாரசாமி’’ என்றும் ‘‘கத்த குடிகாரன்’’ என்றும் குடுமி பற்றிப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. ஐரோப்பியர் வருகைக்குப்பின் அவர்களின் கிராப்பு வைத்துக் கொள்ளும் பழக்கம் தமிழகத்தில் பரவியது.

இந்நாகரிகமும் முதலில் நகர்ப்புறத்தில் தான் பரவத் தொடங்கியது. பழமை போற்றும் பார்ப்பனர்களிடையே ஒரு நாகரிக இளைஞன் ‘‘அமெரிக்கன் கிராப்பு’’ வைத்துள்ளதையும் அதனைக் கண்டு ஒரு இளம்பெண் அவனிடம் மயங்குவதையும் பாடல் தெளிவுபடுத்துகின்றது. தொடக்கத்தில் கிராமப்புறங்களில் பிராப்பு வைத்துக் கொள்ளும் பழக்கம் பரவிய போது இளைஞர்கள் அதனை வரவேற்பதையும் முதியவர்கள் எதிர்த்ததையும் களப்பணியில் கேட்டறிய முடிந்தது. முதியோரின் பழமை போற்றும் பண்பே எதிர்ப்பிற்குக் காரணமாகலாம். கிராமப்புறப் பெண்களுள் (முதியவர்கள்) ஒரு சாரரும் கிராப்பு வெட்டிக் கொள்ளும் இளைஞர்களை இறுமாப்புடையவர்கள், மோசமானவர்கள் என்றும் கூறிக் கேலி செய்வதை ‘‘மேலத்தெரு பசங்களெல்லாம் மேடிக்காரண்டி, கிராப்பு வெட்டிக்காரண்டி” என்ற பாடல் தொடர்கள் விளங்குகின்றன. இப்பாடல் கிராப்பு வெட்டிக் கொள்ளும் பழக்கம் பரவிய காலகட்டத்தில் முதிய பெண்களால் சிறுமியர்க்குச் சொல்லித் தரப்பட்டதாகும்.

**பெண்கள்:**

பெண்கள் தங்கள் கூந்தலை ஆசையுடன் பேணி வளர்ப்பதைப் பற்றிப் பாடல் குறிப்பிடுகிறது. நீண்ட கூந்தல் சிறப்பாகப் பேசப்படுகிறது. கூந்தலுக்கு எண்ணெய் தடவுதல், ஈருக்குளியல் பேனை நீக்குதல், சீணுக்கெடுக்கிற கம்பியால் ஏற்படும் சிக்கினை அகற்றுதல், சீப்பினால் சீவுதல், இவ்வாறு செப்பஞ் செய்யப்பட்ட கூந்தலை அள்ளி முடித்தல், சித்திரம் போலக் கொண்டை போடல், சடை பின்னுதல் போன்ற ஒப்பனைகள் புரிந்து மலர் சூடுதல் முதலிய செய்திகளைப் பாடல்கள் சுட்டுகின்றன.

கூந்தலுக்கு எண்ணெய் வாங்கித் தடவுவதற்கே வசதியில்லாத பெண்களைப் பாடல்கள் சுட்டுகின்றன. ஒரு தாய் தன் தம்பியிடம் சென்று தன் மகளுக்கு எண்ணெய் வாங்கித் தருமாறு கேட்கிறாள். மற்றொரு பெண் தன் கணவரிடம் எண்ணெய் கேட்டுத் திட்டு வாங்குகிறாள்.

பெண்கள் இரட்டைச் சடை பின்னிக் கொள்ளும் நாகரிகம் சமீப காலத்தில் தோன்றியது. இளம்பெண்கள் இதனை விரும்பி வரவேற்றனர். ஆனால் பழமை விரும்பிகளான முதியோர்கள் இதனைக் கேலி செய்து

எதிர்க்கின்ற நிலையையும் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. இது போன்ற புதிய நாகரிகங்கள் பரவுதற்குத் தற்காலத்தில் காரணமாக இருப்பவை திரைப்படமும் நாடகமுமாகும் என்று அவர்கள் கருதுவதையும் அப்பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. எனவே, இவை அவர்களால் எதிர்க்கப்படுகின்றன.

**நெற்றியலங்காரம் முதலியன:**

பெண்கள் நெற்றியில் சாந்துப்பொட்டு, நீல வர்ணப் பொட்டு முதலியன வைத்து அழகுபடுத்திக் கொள்வர். கண்ணுக்கு மையிட்டு ஒப்பனை செய்து கொள்வதைப் பல பாடல்கள் சுட்டுகின்றன.

ஆண்களும் நெற்றியில் சந்தனப்பொட்டு, குங்குமப் பொட்டு முதலியன வைத்து அழகுப்படுத்திக் கொள்வர் என்பதைப் பாடல் தெளிவுபடுத்துகின்றது.

**அணிகளணிதல் :**

மானிடரின் அழகுணர்ச்சியின் வெளிப்பாடே அணிகலன்களாக உருவெடுத்துள்ளன. முதலில் மலர், காய், கனி, கொட்டைகளையும் பின்பு சங்கு, முத்து பவளம் முதலியனவற்றுள்ளான அணிகளையும், அதன் பிறகு பொன், வெள்ளி போன்ற உலோக அணிகளையும் மக்கள் பயன்படுத்தினர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் உலோகங்களுக்கு மந்திர சக்தி உண்டு என்ற நம்பிக்கை காரணமாகப் பேய் பிசாசுகள் அணுகாமலிருக்கும் பொருட்டுக் காப்பு முதலிய அணிகளை அணிந்ததால் உலோக அணிகள் பெருகின என்றும் ஆடவர், தங்கள் செல்வ வளத்தைக் காட்டப் பெண்களுக்கு அணிகளணிவித்ததாலும் அவை பெருகின என்றும் கூறுகின்றனர். தமிழகத்தில் பயன்படுத்தப்பட்ட பயன்படுத்துகின்ற நூற்றுக்கணக்கான அணிகளை அவர்கள் தெளிவுப்படுத்துகின்றனர். அவை தமிழர்களின் அழகுணர்ச்சியையும் தொழில் நுட்பத்தையும் செல்வ நிலையையும் சமுதாயப் பழக்க வழக்கங்களையும் எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன. தொன்று தொட்டு இன்று வரை மக்கள் அணிந்து வரும் அணிகளையும் புதிதாகத் தோன்றி வழக்கிலிருக்கும், மறைந்து விட்டதுமான அணிகளையும் நாட்டுப்புறப் பாடலகள் சுட்டுகின்றன. அணிகளை ஆண்களணியும் அணிகள், பெண்களணியும் அணிகள் என்று இரண்டாகப் பிரித்துக் கொள்வோம்.

**ஆணணிகள் :**

ஆண்கள் அதிகமாகத் தங்களை அணிகளால் ஒப்பனை செய்து கொள்வதில்லை என்பதைப் பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றன. கடுக்கன், பவுனுகாப்பு மோதிரம், வீரமணி, தண்ட, வீரதண்ட முதலிய சில அணிகள் மட்டுமே ஆண்களுக்குரியவையாகச் சுட்டப்படுகின்றன.

கடுக்கன் அணிவது செல்வ வளத்தைச் சுட்டுவதாகக் காணப்படுகிறது. இதனைக் கடைக்காரர் செய்ததாக ஒரு பாடலும் மணமகன்கள் அணிவதாக இரு பாடல்களும் சுட்டுகின்றன. செல்வ வளமிக்கோரில் சிலர் நிரந்தரமாகவும் ஏனையோர் திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளிலும் கடுக்கன் அணிந்தனர் என்பதை இவற்றால் உணர்ந்து கொள்ள முடிகிறது. இன்று கடுக்கன் அணிதல் அருகிக் காணப்படுகிறது. ஆண்கள் காப்பணிவதாகக் கூறும் பாடல் ஒரு தலைமுறைப் பழமை உடையது. இன்று யாரும் காப்பணிவது இல்லை.

பெண்களோடு ஒப்பிட ஆண்கள் மோதிரம் அணிவது கூடக் குறைவாகவே காணப்படுகிறது. ஒரு சில பாடல்கள் மட்டுமே ஆண்கள் மோதிரம் அணிவதைக் குறிக்கின்றன.

கையில் கட்டப்படும் வீரமணி, காலில் அணியப்படும் வீரதண்டை முதலியன பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன.

ஆண்கள் வாச்சி (Watch) அணிவது பெருமையாகக் குறிப்பிடப்படுகிறது.

**பெண்ணணிகள்:**

மகளிர் அணிகலன்கள் மீது பெரு விருப்பினராக உள்ளனர் என்பதைப் பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றன. பிரசவத்தில் தான் இறந்துவிட்டால் தான் அணிந்த நகைகளை எல்லம் யார் அணிந்து பார்ப்பார்களோ என்று எண்ணித் தவிக்கும் பெண் பல்வேறு அணிகள் வேண்டும் என்று அண்ணனிடம் நச்சரிக்கும் பெண்கள், அணிகள் செய்யுமாறு தட்டானிடம் கூறும் பெண், அணிமணி மீது கொண்ட ஆசை காரணமாகத் தங்களையே இழக்கும் பெண்கள் போன்ற பல்வேறு பெண்களைப் பாடல்களில் காணலாம்.

காதணிகளுள் தோடும், மூக்கணிகளுள் மூக்குத்திகளும், கையணிகளுள் வளையலும் காப்பும், கைவிரலணிகளுள் மோதிரமும் காலணிகளுள்

கொலுசும், பாடல்களில் மிகுதியாகப் பேசப்படுகின்றன. இதனால் இவை மகளிரின் உயரணிகள் என்பதை உணரமுடிகிறது.

**பழங்காலத்திலிருந்து வழக்கிலிருப்பவை :**

கால அடிப்படையில் நோக்கினால் காதில் அணியும் தோடு, கழுத்திலணியும் சங்கிலி, முத்துச்சரம், முத்துமணி, கையிலணியும் வளையல், கைவிரலில் அணியும் மோதிரம் முதலிய அணிகள் மிகப் பழங்காலத்திலிருந்து இன்று வரை செல்வாக்குடன் திகழ்வதை அறிய முடிகிறது. பண்டைய இலக்கியங்களில் இவற்றைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

**அணிகளும் விதவையும் :**

அணிகளணிந்து ஒப்பனை செய்து கொள்வது மனதுக்கு இன்பம் நல்கக்கூடியது. கணவனைப் பிரிந்திருக்கும் மகளிர் அவன் திரும்பும் வரை இன்பங்ளை விழைவது கூடாது என்பதை வலியுறுத்தவே அம்மகளிர் அணிகளணிவதில்லை என்று இலக்கியம் படைக்கப்பட்டன. அத்துடன் கணவனை இழந்த பெண்கள் நிரந்தரமாக இன்பத்தினை விழையக் கூடாது இன்ப உணர்வே அவர்களுக்குத் தோன்றக் கூடாது என்று கருதியே இன்பப் பொருட்களை விலக்குமாறு உடைமைச் சமுதாயம் அவர்களைப் பழக்கி வந்துள்ளது. கணவனை இழந்த மகளிர் கைவளை முதலிய அணிகளைக் களைத்தல் பற்றிப் பழைய இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. கணவனை இழந்த நிலையில் தாலி, சங்கிலி, வளையல் போன்ற அணிகளை நீக்கும்போது மகளிர் கதறித் துடிப்பதைப் பாடல்கள் குறிப்பாக ஒப்பாரிப் பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றன.

**பழங்காலத்தில் தோன்றி வழக்கொழிந்தவை:**

நெற்றியில் அணியப்படும் சுட்டி, காதில் அணியப்படும் ஓலை, காலில் அணியப்படும் சிலம்பு, சிலம்பின் மீது அணியப்படும் பாடகம், கால் பெருவிரலில் அணியப்படும் காலாழி முதலிய பழைய அணிகலன்கள் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் சுட்டி என்பது திருமணத்தில் மணமகள் அணியும் அணியாக அருகிக் காணப்படுகிறது. ஓலை என்பது இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுய பெண்டிர் அணியும் அணியாக உள்ளது. திருச்சி, தஞ்சை, சேலம், தென்னார்க்காடு செங்கற்பட்டு பொன்ற மாவட்டங்களில் இவ்வணி அநேகமாக வழக்கொழிந்து விட்டது எனலாம். மேற்குறிப்பிட்ட ஏனைய அணிகள் வழக்கில் இல்லை.

**இடைக்காலத்தில் தோன்றி வழக்கிலிருப்பவை:**

இடைக்காலத்தில் தோன்றிய அணிகளுள் மூக்குத்தி, தாலி, மெட்டி, முதலியன இன்று மிகுதியான செல்வாக்குடன் திகழ்கின்றன. இவற்றுள் இறுதி இரண்டும் மகளிர் அணிவன. மூக்குத்தி இடைக்காலத்தில் தோன்றிய நாகரிகம் என்பதை ஆய்வாளர்கள் தெளிவுப்படுத்துகின்றனர். இவ்வணி கிராமப்புறப் பெண்களிடம் மிகுந்த செல்வாக்குடனும் படித்தவர்களிடம் செல்வாக்கிழந்தும் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களில் ஐம்படைத்தாலி, புலிப்பல் தாலி முதலிய அணிகள் சுட்டப்படுகின்றன. இவை இன்று மணமான மகளிர் தாலி அணியும் பழக்கம் கி.பி.10ம் நூற்றாண்டில் தான் தோற்றம் பெற்றது என்பர். மெட்டி என்பது கால் பெருவிரலுக்கு அடுத்தவிரலில் அணியப்படும் அணியாகும்.

இவ்வணி பரத்தையரால் விருப்புடன் அணியப்பட்டது என்றும் இன்று வழக்கிலில்லை என்றும் கூறப்படும் கருத்து பொருத்தமற்றது. இதனை தமிழகத்தில் பல பகுதிகளில் மணமான மகளிர் விருப்புடன் அணிவதை காணமுடிகிறது. "பீலாழி (பீடி)யும் மெட்டி போன்றதே. மிஞ்சி இதனோடு ஒத்த கால் விரலணி", சிலப்திகாரம் கூறும் நல்லணி இக்காலணிகளுடன் தொடர்புடையதாகும்.

**இடைக்காலத்தில் தோன்றி வழக்கொழிந்தவை**

இடைக்காலத்தில் தோன்றி வழக்கொழிந்த பல அணிகள் பற்றிய குறிப்புக்களும் பாடல்களில் இடம்பெறுகின்றன. காதின் மேற்புறத்தில் அணியப்படும் கொப்பு, முருவு, (முருகு) காதின் அடிப்புறத்தில் அணியப்படும் குருடு, நாவடம் (நாகப்படம்) கடுக்கன், மூக்கின் நடுத்தண்டில் அணியப்படும் முத்துப்பிலாக்கு (முத்துப்புல்லாக்கு) முதலியன சமீப காலம் வரை மக்களிடம் வழக்கிலிருந்து வந்துள்ளன. இவை அனைத்தும் பழைய இலக்கியங்களில் காணப்படவில்லை காலமாற்றத்தாலும் வேற்றின மக்களின் தொடர்பாலும் தமிழகத்தில் தோன்றிய நாகரிகங்களாக இவற்றைக் கருதலாம்.

**பிற்காலத்தில் தோன்றி வழக்கிலிருப்பவை :**

காதணியான சிமிக்கி.ஃ.தொங்கட்டான், கழுத்தணியான அட்டிகை, பதக்கம், இடையணியான ஒட்டியாணம், காலணியான கொலுசு முதலியன

பிற்காலத்தில் தோன்றியவையாகத் தெரிகின்றன. இவற்றுள் ஒட்டியாணம் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் மட்டும் பயன்படுத்தப்படுகிறது. கொலுசு விலை குறைந்த உலோகமான வெள்ளியில் செய்யப்படும் காரணத்தால் மக்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது. மற்றவை ஓரளவு வசதியுள்ள கிராமப்புற மக்களிடம் மட்டுடே காணப்படுகின்றன.

**பிற்காலத்தில் தோன்றி வழக்கொழிந்தவை :**

மாட்டலு (மாட்டல்) பட்டை, லோலாக்கு, சல்லட போன்ற அணிகள் பிற்காலத்தில் தோன்றி வழக்கொழிந்தவைகளாகக் காணப்படுகின்றன. மாட்டலுக்கு ஆங்கிலேயர் காலத்தில் செல்வாக்குடன் திகழ்ந்தது என்பதனை "இங்கிலீசு மாட்லு" என்ற தொடரால் உணர முடிகிறது இது காதணியான தோட்டிலிருந்து மேலேயுள்ள கூந்தலில் அணியப்படும் மேலாக்கு என்பது காதணி மேற்புறத்தில் துளையிட்டு அணியப்படும் அணியாகும். பட்டை என்பது பட்டைக் கொலுசாகலாம். சல்லடை என்பது காலில் அணியப்படும் அணி என்பதைப் பாடலால் ஊகிக்க முடிகிறது. இவ்வணி பற்றி விவரம் எதுவும் கிடைக்கவில்லை.

**அணிகளின் மாற்றங்கள்:**

அணிகளுள் பல காலத்திற்குக் காலம் தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ப சிற்சில மாற்றங்கள் பெற்று வேறு பெயர்களைப் பெறுகின்றன. பழைய கிண்கிணியே புதிய கொலுசாகலாம். பண்டைய ஊசல் ஒண் குழையே இன்றைய சிமிக்கி தொங்கட்டான் ஆகலாம். இவ்வாறு எல்லா அணிகளுமே காலத்திற்குக் காலம் வடிவமும் பெயரும் மாறி வருவதை அறிய முடிகிறது.

**அணிநாகரிகமும் மக்கள் ஏற்பு நிலையும் :**

காலாழி, சிலம்பு, பாடகம், தண்டை முதலிய வழக்கொழிந்த பழைய அணிகள் ஒரு சாராரால் (பெரும்பாலும் முதியவர்கள்) நினைவிலிருத்திப் போற்றப்படுகின்றன. வழக்கிலிருப்பவை ஏற்றுப் கொள்ளப்படுகின்றன. புதியவை எதிர்க்கப்படுகின்றன. ஆனால் மற்றொரு சாராரால் (பெரும்பாலும் இளையவர்கள்) பழமை புறக்கணிக்கப்படுகிறது. நடைமுறையில் இருப்பனவற்றை ஏற்றுக் கொண்டாலும் புதுமைகளே விரும்பி வரவேற்கப்படுகின்றன. இளம் பெண்கள் தங்களின் பாட்டிமார்கள் பயன்படுத்தி வந்த காசிமாலை, காதோலை முதலிய பேரணிகளை

விரும்புவதில்லை. மெல்லிய சங்கிலி, சிமிக்கி, கலர் வளையல் போன்ற புதிய நாகரிகப் பொருட்களான சிற்றணிகளை விரும்பி அணிகின்றனர் இப்போக்கு வயதானவர்களால் கடுமையாக விமர்சனம் செய்யப்படுவதைக் காணமுடிகிறது. விலை உயர்ந்த ஆடைகள் மீது பெண்கள் ஆசை கொள்வதானது குடும்பப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்குமாதலால் அது கண்டிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில் நோக்கினால் இங்கே விலை குறைந்த சிற்றணிகளை பெண்கள் விரும்புவது வரவேற்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மாறாகக் கண்டிக்கப்படுகிறது. இந்த முரண்பாட்டிற்கான அடிப்படைக் காரணம் என்ன? ஆடை விரைவில் அழிந்துவிடக் கூடியது. எனவே அதற்குச் செலவு செய்யப்படும் அதிகப்படியான தொகை பொருளாதார அடிப்படையில் வீணானதாகவே கருதப்படும். மாறாகப் பொன்னணிகள் குடும்பத்தின் நிரந்திரச் செல்வமாகக் கருதத்தக்கவை. ஆண்கள் தங்களின் செல்வச் செழிப்பைப் பெண்களுக்கு நகைகள் பூட்டுவதன் வாயிலாகவும் வெளிப்படுத்துகின்றனர். இளம் பெண்கள் சிற்றணிகளை விரும்பி அணியும் மாற்றத்தால் தங்களின் செல்வச் செழிப்பைக் காட்ட இயலவில்லை எனக் கருதியே பொறுப்பில் இருக்கும் ஆண்கள் அப்புதிய நாகரிகத்தைக் கண்டிக்கின்றனர். மேலும் சிற்றணிகளை எதிர்க்கும் போக்கு தங்கவிலையேற்றத்தினால் இன்று மாற்றம் பெற்றுவிட்டது என்பதை நடைமுறை வாழ்க்கையில் அறிந்து கொள்ள முடிகிறது.

## பயிற்சி வினாக்கள்

### I. ஒரு பக்க வினாக்கள்

1. முதன்மை உணவுகள் யாவை ?
2. சிறப்புணவுகள் குறித்து விளக்குக?
3. நீராடல் செய்திகளைக் கூறுக ?
4. பெண்கள் அணியும் உடை குறித்து எழுதுக?
5. “கால்சராய்”- சிறுகுறிப்பு வரைக?

### II. மூன்று பக்க வினாக்கள்

1. நாட்டுப்புற மக்களின் உணவுப் பழக்க வழக்கங்கள் குறித்து விளக்குக.
2. நாட்டுப்புற மக்களின் உடை பற்றி விவரிக்க
3. நாட்டுப்புற மக்களின் அணிகலன்களின் முக்கியத்துவத்தை எழுதுக.

## அலகு 5

# நிகழ்த்துக் கலைகள்

நாட்டார் கலைகள் அழகியல் சார்ந்தவை. நாட்டார் கலைகளை நகழ்த்துக் கலைகள் என்றும், கைவினைக் கலைகள் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம். இப்பகுதி நாட்டார் நிகழ்கலைகளைப் பற்றி மட்டுமே பேசுகிறது. நாட்டார் வழக்காற்றியல் புலத்துள் நிகழ்த்துதல் என்பது குறித்து இரு கருத்தாக்கங்கள் காணப்படுகின்றன. நாட்டார் பாடல், விடுதலை பாடல், கதை சொல்லல் போன்றவையும் நிகழ்த்துதல்களே என்பது ஒன்று. நிகழ்த்துக் கலைகளாகிய வில்லுப்பாட்டு, கணியான் கூத்து, தேவராட்டம், பாவைக் கூத்து, தெருக்கூத்து போன்றவையும், நாட்டார் வழிபாட்டுச் சடங்குகளும், வாழ்க்கை வட்டச் சடங்குகளும் நிகழ்த்துதல்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த இயலுள் நிகழ்த்துக் கலைகளின் தன்மைகள் குறித்தும், அவற்றுள் ஒரு சில வகைமைகள் குறித்தும் காண்போம்.

### 1. வில்லுப்பாட்டு :

'வில்' என்ற இசைக்கருவியை அடித்துக் கொண்டு ஒரு குழுவினர் நிகழ்த்தும் கலை நிகழ்ச்சி வில்லுப்பாட்டு என்று அழைக்கப்படுகிறது. அம்மன் கோயில்களில் மிகுதியாகவும், சுடலைமாடன் கோயில்களில் குறைந்தளவிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்படுகின்றன. ஆண்களோடு, பெண்களும் இக்கலை நிகழ்ச்சியில் பங்கு பெறுகின்றனர். ஆனால் பெண்கள் தீட்டின் போது வில்லிசைக்கச் செல்வதில்லை என்று கூறப்பட்டது. பூதப்பாண்டியில் பெண்கள் பாடிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றில் பூஜை செய்த நேரத்தில் மட்டும் பாடிய பெண்ணின் குருவான ஆண் ஒருவர் கலந்து கொண்டதாக தே.லூர்து குறிப்பிட்டார் (11-5-99). கி.பி. 1910 முதல் பெண்கள் அண்ணாவியாக இருந்துள்ளனர் எனத் தெரிகிறது. இக்கலை வில்லு, வில்லிசைக்கலை, வில்லடி, வில்லடிச்சான் பாட்டு, வில் பாட்டு என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் பழைய இராமநாதபுரம் மாவட்டத்தின் தெற்கேயுள்ள பகுதிகளிலும், அதாவது சின்னகாமன்பட்டி, சிவகாசி, சாத்தூர், பந்தல்குடி முதலான ஊர்களிலும் வில்லுப்பாட்டுக் கலை காணப்படுகிறது. இம்மாவட்டங்களில் மாசி மாதம் தொடங்கி ஆடி மாதம் வரை கோயில்

கொடை விழாக்கள் அதிகமாக நிகழ்கின்றன. அடுத்த ஓரிரு மாதங்களிலும் கோயில் கொடை நிகழ்ச்சிகள் நடப்பதுண்டு.

**கோயில்களில் நடைபெறும் நாட்கள் :**

அம்மன் கோயில்களில் திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளிலும் மாடன் கோயில்களில் வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளிலும் நடைபெறும் விழாக்களில், ஒரு நாள் நிகழ்ச்சியாகவோ அல்லது மூன்று நாள் நிகழ்ச்சியாகவோ வில்லிசை நிகழ்ச்சி இடம் பெறுகிறது. கார்த்திகை மாதத்தில் அம்மன் கோயில்களில் செவ்வாய்க்கிழமைகளிலும் மாடன் கோயில்களில் வெள்ளிக்கிழமைகளிலும் ஒரு நாள் நிகழ்ச்சியாக வில்லிசை நிகழ்கிறது. ஏனைய அனைத்து மாதங்களிலும் இறுதிச் செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமையில் ஒரு நேர நிகழ்ச்சியாக இக்கலை நிகழ்த்தப்படுகிறது.

**வழிபாட்டுச் சடங்குக்கலை :**

வில்லுப்பாட்டு பெரும்பாலும் வழிப்பாட்டுச் சடங்குக் கலையாகக் காணப்படுகிறது. தற்போது கோயில்கள் அல்லாத பிற இடங்களில் பொழுது போக்கை நோக்கமாகக் கொண்டு நடத்தப்படுகின்றன. ஆயினும் குமரி, நெல்லை மாவட்டப் பகுதிகளில் வழிபாட்டை நோக்கமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் போக்கே மிகுதியாகக் காணப்படுகிறது. இக்கலை கோயில் சார்ந்தக்கலை என்பதற்கு அ.கா.பெருமாள்(1997:53) பின்வரும் காரணங்களைச் சுட்டுகின்றார்.

1. வில்லிசைக்கலை அம்மன் கோயில் விழாக்களில் கட்டாயமாகவும், சுடலைமாடன் கோயில் விழாக்களில் சிறு அளவும் நிகழ்கிறது.

2. கோயிலின் முக்கியத் தெய்வத்திற்கு சாமியாடுகின்றவர்க்கு கருவறை தெய்வத்தின் அருள் வருவதற்குள் வில்லிசைப் புலவர் சாமிவரத்துப் பகுதியைக் கட்டாயம் பாட வேண்டியிருக்கிறது.

3. கோயில் விழாக்களில் நிகழும் வில்லிசையின் பாடு பொருள் குறிப்பிட்ட கோயிலின் முக்கியத் தெய்வம் குறித்த கதையாகவே இருக்க வேண்டும்.

4. முக்கிய தெய்வத்தின் சாமியாடிக்கு அருள் வரச் செய்யும் சாமிவரத்துப் பாடும் வில்லிசைப் புலவர் அதை வழிபாட்டுக் கூறுகளுள் ஒன்றாகக் கருதுகிறார்.

5. கோயில் விழாக்களில் வில்லிசை நிகழ்ச்சியை நடத்தும் முன்பு உடலை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். விரதம் இருக்க வேண்டும் என்ற மரபு வழி வழக்கு உள்ளது.

6. வில்லிசை கோயில் அல்லாத மேடைகளில் பாடப்பட்ட பின்பும் கோயில் விழாக்களில் பாடப்படும்போதும் தன் தனித்தன்மையை ஓரளவு தக்கவைத்து விடுகிறது.

இக்காரணங்களால் வில்லுப்பாட்டுக் கலை தெய்வ வழிபாட்டோடு தொடர்புடைய கலை என்பதை நன்கு அறிந்து கொள்ள முடிகிறது.

**மேடை அமைப்பு :**

வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடைபெறுவதற்கான மேடை, கோயில் கருவறையின் நேர் எதிரே பெரும்பாலும் அமைக்கப்படுகிறது. அங்கு இடம் இல்லாத நிலையிருப்பின் கருவறையின் பக்கங்களில் மேடை அமைக்கப் படுகிறது. சில கோயில்களில் கருவறையின் எதிரே நிரந்தர மேடை அமைக்கப் பட்டிருக்கும் என்று தெரிகிறது.

**வில்லுப்பாட்டுக் குழுவினர் :**

வில்லுப்பாட்டுக் குழுவில் குறைந்தது ஐவரும் அதிகபட்சம் எண்மரும் இடம் பெறுவர். ஒரே குழுவில் வெவ்வேறு வயதுடையவர்கள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ஒரே குழுவில் பள்ளர், தேவர் முதலான வெவ்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருத்தலைக் கூட காணலாம்.

வில்லுப்பாட்டுக் கலைஞர்கள் ஒப்பனைக்கென முக்கியத்துவம் தருவதில்லை. ஆயினும் அண்ணாவிகள் தனித்துத் தெரியும் வண்ணம் எடுப்பாக உடை அணிகின்றனர்.

**கதைப்பாடல்கள் :**

வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் பாடுவதற்கென்றே ஏராளமான கதைப்பாடல்கள் படைக்கப்பட்டுள்ளன. அகால மரணமுற்ற பலரின் கதைகளும் புராண இதிகாசக் கதைகளும் நெடுங்காலமாக ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டு வந்துள்ளன. முதலில் பாடலாக மட்டுமே கதைகள் பாடப்பட்டு வந்தன என்று தெரிகிறது. தற்போது பாடலும் வசனமுமாக எழுதப்பட்டுள்ள கதைகளை வில்லுப்பாட்டுக் கலைஞர்கள்

பயன்படுத்துகின்றனர். மூலக்கதையை அப்படியே பயன்படுத்துவதும் பார்வையாளர்களுக்கு ஏற்ப அவ்வப்போது மாற்றங்கள் செய்து பயன்படுத்துவதும் உண்டு. சில நேரங்களில் மூலக் கதையை வைத்துக் கொண்டு தாங்களே புதிதாகப் படைப்பதும் உண்டு. நிகழ்ச்சியின் இடையிடையே பல உபகதைகளும் பாடப்படுகின்றன. சில கதைகள் வாய்மொழி மரபாக மட்டுமே உள்ளன. இத்தகைய கதைகளை நிகழ்ச்சி நடத்தும் ஊரில் கேட்டு அன்றே அவற்றைப் பாடலாகப் பாடும் ஆற்றல் வாய்ந்த கலைஞர்கள் இன்றும் உள்ளனர். நாடார் கோயில்களில் அவர்கள் ஓலைச்சுவடிகளில் எழுதி வைத்திருக்கும் கதையைத் தான் பாட வேண்டும் என்ற மரபு காணப்படுகிறது. வில்லுப்பாட்டுக் கதை நூல்கள் 1943 முதல் அச்சில் வெளிவரத் தொடங்கின. ஆறுமுகப் பெருமாள் நாடார், மு.பெருமாள் நாடார் போன்றோர் வில்லுப்பாடல்களை மிகுதியாகப் பதிப்பித்தவர்கள் நா.வானமாமலை, தி.சி.கோமதி நாயகம், தி.நடராசன், ஏ.என்.பெருமாள், நா.இராமச்சந்திரன், ஆ.சிவசுப்ரமணியன், சு.சண்முகசுந்தரம், லாரன்ஸ் போன்ற பலரும் வில்லிசைப் பாடல்களைப் புதுப்பித்து இருக்கின்றனர். தென்தமிழ் நாட்டில் கிடைக்கின்ற வில்லிசைக் கதைப்பாடல்களை,

1. புராணத் தன்மை கொண்டு புராணமாக அமைபவை (சாஸ்தா வரலாறு, வலை வீசிய கதை, இரண்ய சம்காரம், வள்ளியம்மன் கதை).
2. புராணத்தன்மை கொண்டு புராணமாக அமையாதவை (முத்தாரம்மன் கதை, காலசாமி கதை, சுடலைமாடன் கதை)
3. வரலாற்று அடிப்படையில் அமைபவை (ஐவர் ராசாக்கள் கதை, கன்னடியன் போர், தம்பிமார் கதை)
4. சமூகம் தொடர்பாய் அமைபவை (முத்துப்பாட்டன் கதை, சின்னத் தம்பிக் கதை, பூலங்கொண்டாள் அம்மன் கதை, சிதம்பர நாடார் கதை)

என்று நான்காக வகைப்படுத்தி விளக்குகின்றார் அ.கா.பெருமாள். இவர் நாஞ்சில் நாட்டில் வழங்கப்படும் எண்பத்தொன்பது வில்லிசைப் பாடல்களின் பெயர்களைத் தன் நூலில் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

‘வில்லிசை வேந்தர்’ எனப் புகழப்பட்ட பிச்சைக்குட்டி என்பவர் கட்டபொம்மன், வ.உ.சி., பாரதி, காந்தியடிகள் போன்றோரின் வரலாறுகளை வில்லுப்பாடலாகப் பாடியுள்ளார். கண்ணகி கதை, சிலப்பதிகாரத்தையொட்டி இவரால் உருவாக்கப்பட்டுள்ளது. கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் குழுவினர் உருவாக்கிய காந்திமகான் கதையும் கொத்தமங்கலம் சுப்பு

எழுதிய காந்தி மகான் கதையும் குறிப்பிடத்தக்கவை. தமிழ் வளர்த்த கதை, வள்ளுவர் கதை, கண்ணகி கதை முதலான நூல்கள் கழக வெளியீடாக வெளிவந்துள்ளன. தொடர்ந்து சமகாலப் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டு ஏராளமான வில்லுப்பாடல்கள் உருவாக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன. வில்லுப்பாடல் பனுவல்களின் (text) பெருக்கமானது அக்கலை தென் தமிழ் நாட்டு மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கினைத் தெளிவுபடுத்துகிறது. குமரி மற்றும் நெல்லை மாவட்ட வில்லுப்பாடல்களில் தெய்வ வழிபாட்டுக் கதைகள் மிகுதியாக இடம் பெறுகின்றன. வில்லுப்பாடற் கலையின் எல்லைப் புறமான பழைய இராமநாதபுரம் மாவட்டத்தின் தென் பகுதிகளில் வழிபாடு சாராத இலக்கியக் கதைகள் அதிகம் இடம் பெறுவதைக் காண முடிகிறது. வடக்கு தமிழ்நாட்டில் பாரத, இராமாயணக் கதையே விரும்பிக் கேட்கப்படுவதாகக் கூறுவர். கதைப்பாடல்கள் மிக அதிக அளவில் காணப்படும் தென் தமிழ் நாட்டில் அப்பாடல்களை அழியாமல் காத்ததில் வில்லுப்பாட்டுக் கலைக்கும் பங்குண்டு என்றால் மிகையாகாது.

**இசைக் கருவிகள் :**

வில்லுப்பாட்டில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளின் அமைப்பு குறித்தும், செய்முறை குறித்தும் மிக விரிவான அளவில் தி.சி.கோமதி நாயகம் விளக்கியுள்ளார். அதிலிருந்து சில குறிப்புகள் வருமாறு :

வில்லுப்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளில் முதன்மை இடத்தைப் பெறும் இசைக் கருவி வில்லாகும். வில்லானது பொதுவாக ஆறு முழ நீளத்தில் அமையும். கூந்தற்பனையின் வைரம் பாய்ந்த அடிமரத்தினின்றும் செதுக்கி எடுத்து அதன் மீது கயிறுகளை இறுக்கமாகச் சுற்றி அதன் மேல் துணியைச் சுற்றி ஒப்பனை செய்யப்பட்டிருக்கும். மூங்கிலாலும் வில் செய்யப்படுவதுண்டு. வில்லின் இரு முனைகளையும் வெண்கலம் அல்லது பித்தளைக் குப்பிகளைப் பொருத்தி மாட்டுத்தோல் வடத்தினால் இரு முனைகளையும், இழுத்துக் கட்டியிருப்பர். வில்லின் நடுப்பகுதி குடத்தின் கழுத்துடன் சேர்த்து இணைக்கப்பட்டிருக்கும். வில்லின் ஒருபுறம் வெண்கல மணிகள் ஐந்தும், மறுபுறம் ஆறும் கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கும். இந்த மணிகளின் எண்ணிக்கை மாறுபடுவது உண்டு. ஆயினும் ஒற்றைப்படையில் அது அமைந்திருக்கும். அண்ணாவியே கதைப்பாடும் புலவராக இருப்பார். அவருடைய இரு கைகளிலும் 1 ½ சாண் நீளமுள்ள கோல்கள் இருக்கும். அவற்றின் கைப்பிடியை அடுத்து உள்ளீடு பெற்ற கிண்கிணிகளும் இருக்கும்.

இந்தக் கோல்கள் ‘வீசு கோல்கள்’ என்று சுட்டப்படுகிறது. இதனைக் கொண்டு வில் நாண் மீதுத்தட்டும் போது இனிய ஒலி எழும்பும். இந்த வீசு கோல்கள் சில புலவர்களால் அழகுற இயக்கப்படும். சில குழுக்களில் புலவர் பாடல் பாட வேறு ஒருவர் வீசு கோல்களைக் கையாள்வதும் உண்டு. தற்போது வில்லை சிறு சிறு பகுதிகளாகச் செய்து நிகழ்ச்சிக்குச் செல்லும் போது இணைத்து நாணேற்றிக் கொள்வர் என்று ஏ.என். பெருமாள் (1989) குறிப்பிடுகின்றார். வெளியூர்களுக்கு வில்லை எடுத்துச் செல்வதற்கு வசதியாக இத்தகைய ஏற்பாடு செய்யப் படுகிறது.

வில்லுப்பாட்டில் மற்றாரு முக்கிய இசைக்கருவி உடுக்கு ஆகும். வெண்கல அல்லது பித்தளை வார்ப்பில் மாட்டுச் சவ்வினாலான இரு தட்டுகளைப் பொருத்தி உருவாக்கப்படும் ‘சிற்றடுக்கு’ வல்லிசையில் பயன்படுத்தப்படுகிறது. அடுத்து சிறப்பிடம் பெறுவது குடம். கழுத்துப்பகுதி மிகவும் உறுதியாகவும், வாய் விளிம்பு வளைவு இன்றியும் உருவாக்கப்படும். குடம் வில்லிசையில் முக்கியத்துவம் பெறுகிறது. வைக்கோல் பிரிமணையின் மீது இக்குடம் வைக்கப்பட்டிருக்கும். இந்தக் குடத்தினைத் தட்டி இசைப்பதற்கு ‘பத்தி’ சொட்டிக்கட்டை’ ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. சிறு பந்தடி மட்டை போன்று தோலால் உருவாக்கப்படும் பத்தியால் குடத்தின் வாய்ப்புறத்தில் தட்டுவர். குடத்தின் வாய்ப்புறத்தைக் காட்டிலும் சிறிது அகன்ற வட்ட வடிவுடனும், கைப்பிடியுடனும் கூடிய அமைப்புடையது ‘பத்தி’. இதனை வலக்கையில் பிடித்துக் கொண்டு வாய்ப்புறத்தில் தட்டும் அதே நேரத்தில், இடது கை விரலிடுக்கில் வைத்துள்ள சிறு மரத்துண்டாலான ‘சொட்டிக்கட்டை’யால் குடத்தினது கழுத்திற்கு கீழ்ப்பகுதியில் தட்டுவர்.

இரும்பு அல்லது பித்தளையால் ஆக்கப்பட்ட தாளம் (இது சாலர் எனவும் அழைக்கப்படும்), கருங்காலி மரத்துண்டுகளால் நீண்ட சதுர வடிவில் கையடக்கமாக அமைக்கப்பட்டிருக்கும் ‘கட்டை அல்லது தாளக்கட்டை அல்லது கட்டைத்தாளம்’ ஆகியனவும் வில்லுப்பாட்டில் பயன்படுத்தப்படும் முக்கியமான இசைக்கருவிகளாகும். இவையேயின்றி இக்காலக்கட்டத்தில் பார்வையாளர்களைக் கவருவதற்காக ஹார்மோனியம், ஆல்ரவுண்டு, மிருதங்கம், தபேலா, கிளாரிநெட் முதலான வேறு இசைக்கருவிகளும் இசைக்கப்படுகின்றன.

**நிகழ்ச்சித் தொகுப்பு :**

நிகழ்ச்சி தொடங்குகையில் இறைவனை வேண்டிக் காப்பு விருத்தம் பாடப்படுகிறது. தொடர்ந்து பாடப்போகும் கதையைப் பற்றிக் கூறுவதாகப் பாடல் பாடப்படும். சில நேரங்களில் உரையாகவும் கூறப்படுவதுண்டு. தொடர்ந்து தங்களுக்கு வில்லிசையைப் பயிற்றுவித்த ஆசானை வணங்கியபடி அவையடக்கம் பாடப்படும். அதன்பிறகு நாட்டு வளமும், கதையும் பாடப்படும். சாஸ்தா கதை முதலில் பாடப்படும். இது வல்லரக்கன் கதை என்று கூறப்படும். இக்கதை பாடி முடித்த பிறகு அந்தந்தக் கோயில் கதைகள் பாடப்படும். இறுதியில் வாழி பாடுவதுடன் நிகழ்ச்சி முடியும்.

**வில்லுப்பாட்டின் தோற்றம் :**

போரில் பயன்படுத்தப்பட்ட வில்லில் நாணேற்றி வெற்றிக்களிப்பில் தட்டிய ஓசையின் சிறப்புக் கருதி அதிலிருந்து வில்லுப்பாட்டு தோன்றியது என்னும் கருத்து பலராலும் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகிறது. இதற்கான காலம் எதுவும் தெரியவில்லை. தி.சி.கோமதிநாயகம் வில்லுப்பாட்டுக்கலை 14ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது என்று அனுமானிக்கிறார் அ.கா. பெருமாள் வில்லிசைக் கலை கி.பி. 15 ஆம் நூற்றாண்டையொட்டித் தோன்றியிருக்கலாம் என்ற கருத்தினைக் கூறுகின்றார். மு.சண்முகம் பிள்ளை, சோமலெ ஆகியோரும் இதே கருத்தினைக் கொண்டுள்ளனர் என்பதை இவர் எடுத்துக் காட்டுகிறார். இக்கலை சுமார் 100 அல்லது 150 ஆண்டுகளுக்கு முன்பு பிள்ளைமார்களால் நிகழ்த்தி வரப்பட்டது என்றும், தற்போது பல சாதியினரிடமும் பரவியுள்ளது என்றும் முத்துச்சண்முகம் கூறுகின்றார். (இக்கருத்து கருத்தரங்கத்தில் கூறப்பட்டபோது இதனை மறுத்துக் கருத்துகள் கூறப்பட்டன.) இன்றைய நிலையில் பிள்ளைமார், நாடார், ஆசாரி, செட்டியார் ஆகியோர்களே அண்ணாவிகளாக இருக்கின்றனர் என்றும், அவர்களுள் முதல் இரண்டு சாதியினரே அதிகம் என்றும் முத்துச்சண்முகம் குறிப்பிடுகின்றார். ஆனால் வேறு சாதியைச் சேர்ந்தவர்களும் அண்ணாவிகளாக உள்ளனர் என்பதைக் களப்பணியில் அறிய முடிந்தது. சான்றாக தெய்வக்கனி என்னும், பெண் அண்ணாவி பள்ளர் சாதியைச் சேர்ந்தவர் என்பதைச் சுட்டிக்காட்டலாம். வில்லிசையில் பக்க வாத்தியங்கள் வாசிக்கும் கலைஞர்கள் பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். வில்லிசைக் கலை திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து நாஞ்சில் நாட்டுக்கு வந்த கலை என்ற ஸ்டுவர்ட் பிளாக்பர்ன் கருத்தினை அ.கா.பெருமாள் மறுத்துள்ளார்.

**தமிழகத்தில் வில்லுப்பாட்டு :**

வில்லுப்பாட்டுக் கலை குமரி, நெல்லை மாவட்டங்களுக்கு உரியதாகக் காணப்பட்டாலும், இன்று தமிழகம் முழுவதும் ஓரளவு அறியப்பட்ட கலையாகக் காணப்படுகிறது. குமரி மாவட்டத்தில் பிறந்து திரையுலகில் புகழ்பெற்ற கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன் திரைப்படத்தில் இக்கலையை அறிமுகப்படுத்தினார். அதன்பிறகு தமிழகத்தின் பல பகுதிகளிலும் காந்தி மகான் கதையை வில்லுப்பாட்டு நிகழ்ச்சியாக நடத்தினார். தொடர்ந்து எஸ்.எஸ். இராசேந்திரன் போன்ற நடிகர்களும் திராவிடக் கட்சிகளும் அகில இந்திய வானொலி நிலையமும் கல்வி நிறுவனங்களும் அரசின் பல்வேறு துறைகளும் நல்கிய ஆதரவு காரணமாக இக்கலை தமிழகத்தின் பல பகுதிகளிலும் அறிமுகமானது. குடும்பக் கட்டுப்பாடு போன்ற பல்வேறு நலத்திட்டப் பணிகளை மக்களிடையே எடுத்துச் சொல்வதற்கு இக்கலை பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் வழங்குவதில் சுப்பு ஆறுமுகம் புகழ்பெற்ற வில்லுப் பாடகராகக் கருதப்படுகிறார். மரபுகளைப் பின்பற்றுவதில்லை என்று இவரைப் பற்றிய குறை ஒரு புறமிருந்தாலும் மக்களை மகிழ்விக்கத்தக்கக் கலைஞராக இவர் உள்ளார்.

**2. கணியான் கூத்து**

கணியான் என்னும் சாதியினரால் நிகழ்த்தப்படும் கூத்து கணியான் கூத்து என்று கூறப்படுகிறது. மகுடம் என்னும் பறையை அடித்து ஆடுவதால் கணியான் கூத்து மகுடாட்டம் என்றும், மகுடக் கச்சேரி என்றும் சமீப காலங்களில் சுட்டப்படுகிறது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் சுடலைமாடன் கோயில்களில் கட்டாயமாகவும், அம்மன், சாஸ்தா கோயில்களில் ஓரளவும், சித்திரை மாதம் தொடங்கி ஐப்பசி மாதம் வரை கணியான் கூத்து நிகழ்த்தப்படுகிறது. மிக அருகிய நிலையில் கல்யாண வீடுகளிலும், பூப்புச் சடங்கு வீடுகளிலும் நிகழ்த்தப்படுவதுண்டு. அப்போது மீனாட்சி கல்யாணம் பாடுவதை மக்கள் விரும்புவர். இக்கூத்தினை ஆடும் கணியான்கள் திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், தென்காசி தொடங்கி வள்ளியூர் வரை வசிக்கின்றனர். இதற்கு வடக்கேயும், தெற்கேயும் இக்கலைஞர்கள் இல்லை. நெல்லை மாவட்டத்தில் 300லிருந்து 325க்கு மேல் இவர்களின் எண்ணிக்கை காணப்படவில்லை என்று ஸ்ரீவைகுண்டம் செல்லப்பா என்னும் கணியான் கூறினார். 300 குடும்பங்கள் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் ஜோதிடத்தைக் கணிக்கும் வல்லமை உள்ளவர்களாக இருந்ததால் கணியான் என்று அழைக்கப்பட்டனர் என்றும், ஆதியில் இவர்களின் தொழில் மாந்திரீகமும், சோதிடமும் என்றும் செல்லப்பா கூறினார். தற்போது இவர்கள் அத்தகைய தொழில் ஏதும் செய்வதில்லை. கணியான் கூத்து கணியான்களால் மட்டுமே நிகழ்த்தப்படும். கோயிற் சடங்குகக்கலையாகவே இன்றும் காணப்படுகிறது. வேறு சாதியினர் இக்கூத்தினை நிகழ்த்த முயன்று நோய் வந்து இறந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

**கணியான்களின் நிலை :**

கணியான்கள் சமூகப் படித்தளத்தில் கொத்தடிமை நிலையில் தீண்டத்தகாதவர்களாக உள்ளனர். பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கும் உரிமை கூட இவர்களுக்கு மறுக்கப்படுகிறது. கிராமத்திலுள்ள உயர் சாதிக்காரர்கள் நிகழ்த்தும் கோயில் விழாக்களில் இவர்கள் கட்டாயம் ஆட வேண்டும் என்பதும் அவர்கள் தரும் தொகையைத்தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் அக்காலத்தில் வேறு ஊர்களுக்கு அவர்கள் செல்லக்கூடாது என்பதும் அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள விதிகளாகும். இவ்விதிகள் அவர்களின் வாழ்க்கை நிலையைத் தெளிவுபடுத்துகின்றன. கணியான்கள் தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்தாலும் அதற்கான அரசு அங்கீகாரம் ஏதும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கணியான்கள் என்று அவர்களை அழைப்பதையே அவர்கள் விரும்புவது இல்லை. அவர்கள் பாடல் பாடுவதால் புலவர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இதனால் அவர்களைத் தாழ்த்தப்பட்ட சாதியில் சேர்ப்பதில் பிரச்சனை ஏற்பட்டதாகத் தெரிகிறது. கணியான் கூத்துத் தொழிலில் போதிய வருமானம் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. கணியான் சாதிப் பெண்கள் கூடை செய்தல், பாய் முடைதல் போன்ற தொழில்களைச் செய்கிறார்கள். இவர்கள் கணியான்களின் கூத்தினைப் பார்க்கக் கூடாது என்ற கட்டுப்பாடும் உள்ளது.

**கணியான்களின் பிறப்பு :**

கணியான்கள் சுடலைமாடன் கோயில் கொடை விழாவில் முக்கியத்துவம் பெறுகின்றனர். இதற்குக் காரணமாகக் கணியான்களின் பிறப்பு குறித்துக் கூறப்படும் கதை வருமாறு :

‘‘பகவான், பார்வதியோடு உலகையெல்லாம் உண்டு பண்ணி, கைலாசத்தில் இருந்தார். ஒரு நாள் படைக்கப்பட்ட ஜீவன்களுக்கெல்லாம்

படியளப்பதற்காக பகவான் கைலாசத்தை விட்டு வெளியே சென்றிருந்தார். அப்போது அங்கு வந்த பிரம்மனை பகவான் என்று நினைத்து பார்வதி பணிவிடை செய்யப் போனாள். பிரம்மதேவன் தான் பகவான் அல்ல என்று கூறினார். படியளந்த பகவான் கைலாயம் திரும்பிய போது பார்வதி அவரை பிரம்மதேவன் என்று எண்ணி பணிவிடை செய்யச் செல்லாமல் இருந்து விட்டார். இத்தகைய குழப்பங்களுக்குக் காரணம் பகவானுக்கு ஐந்து தலை இருப்பது போலவே பிரம்மனுக்கும் ஐந்து தலை இருந்ததுதான். இதனை அறிந்த பகவான் பிரம்மன் வந்தபோது அவருடைய ஐந்து சிரசில் ஒன்றைக் கிள்ளி எடுக்க, அது பகவான் கையில் ஒட்டிக் கொண்டது. இதனால் பிரம்மதோசம் பிடித்து பகவான் சுடலையில் போய் ஆடினார். அப்போது பார்வதியும், கிருஷ்ணனும் முப்பத்தி முக்கோடி தேவர்களும் தேவ பெண்களும் ஆடினர். தெய்வப் பெண்களின் காலில் கிடந்த சிலம்புகள் தெறிக்கக் கணீர் எனப் பாறையில் மோதி விழுந்தன. அதிலிருந்து இரண்டு பாலகர்கள் அவதரித்தனர். கணீர் என்று சத்தத்தில் பிறந்ததினால் ஒரு பிள்ளை கணியான் என்றும், ஒரு பிள்ளை கம்பர் என்றும் கிருஷணரால் அழைக்கப்பட்டனர். கிருஷ்ணன் கணியானிடம், ‘நீ பிரம்மதோசம் நீக்க வேண்டும்’ என்றும் கம்பரிடம் நீ தெய்வ வழிபாடு செய்ய வேண்டும்’ என்றும் கூறினார். ‘பகவானுக்கு பிரம்மதோசம் நீக்க வேண்டும் என்றால் கருவிகள் வேண்டும்’ என்று கணியான்கள் கேட்க, கிருஷ்ணன் தன் சக்கரத்தை எடுத்து ‘இதனை மகுடமாக வைத்துக் கொள்ளுங்கள்’ என்று சொல்லி கை வெட்டுவதற்குக் கத்தி ஒன்றும் தந்தார்.

கணியான் நீராடியபின் புதுவேட்டி உடுத்தி கையில் முழங்கை பக்கத்தில் வெட்டி பகவான் கையில் பிடித்திருக்கும் சிரசில் ரத்தத்தை விடுகிறார். இரத்தம் பட்டவுடன் அந்த சிரசு கீழே விழுந்து விடுகிறது. இவ்வாறு கணியான் பகவானின் பிரம்மதோசத்தை நீக்குவார். பகவானின் கையிலிருந்து விழும் கபாலத்தினை அல்லது சிரசினை கிருஷ்ணன் கணியானிடம் தந்தார். அதுவே ‘பேய் முகம்’ எனப்படுகிறது.

இக்கதையைக் கூறிய திருவடி நைனார் இக்கதையைச் சுடலைமாடன் கோயில்களில் பாடலாகப் பாடுவோம் என்று கூறினார். கணியான் பிறப்புக் குறித்து இதற்கு மாறுபட்ட கதையும் கூறப்படுகிறது. எப்படியிருப்பினும்

கணியான்கள் தங்களை சிவபெருமானோடு தொடர்புபடுத்திக் கூறிக் கொள்வதில் பெருமை அடைகின்றனர். தங்களின் ஆட்டம் சிவபெருமானால் கற்பிக்கப்பட்டதென்றும் மகுடம் அடிக்கும் முறை நந்தியால் கற்பிக்கப்பட்டதென்றும் கூறிக் கொள்கின்றனர். ஈஸ்வரனை வழிபட்டால் தோஷங்கள் நீங்கும் என்று சிவபக்தர்கள் நம்புகின்றனர். கணியான்களோ ஈஸ்வரனின் தோஷத்தை நீக்குவதாக அவர்களின் பிறப்புக் கதை கூறுகிறது. அதனை சுடலைமாடன் வழிபாடு வாயிலாக நிகழ்த்திக் காட்டுகின்றனர்.

**கணியான் கூத்தின் குழுவினர் :**

கணியான் கூத்தில் ஆறு அல்லது ஏழு பேர் இடம் பெறுகின்றனர். ஒருவர் அண்ணாவி அல்லது புலவர் என்று சுட்டப்படுகிறார். இவரே அக்குழுவின் தலைவராகச் செயல்படுகிறார். இவர் தான் கதையைப் பாடுபவர். இவருக்குத் துணையாக துணைப்பாடகர் ஒருவர் இருப்பார். மகுடம் அடிப்பவர் இருவர். ஒருவர் ஜால்ராக்காரர். பெண் வேடம் தரிப்பவர்கள் இருவர். இந்த எண்ணிக்கை மாறுபடுவதும் உண்டு. மகுடம் அடிப்பவர் மூவராகவும் இருப்பதுண்டு. பின்பாட்டு பாடுபவருக்குத் தனியாக ஒருவரை அமர்த்தாமல் ஜால்ராக்காரரே பின்பாட்டுப் பாடுவதுண்டு. அண்ணாவி பெரும்பாலும் 35 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பார்.

பெண் வேடமிடும் கலைஞர்கள் தங்களுடைய நீள முடியை வட்டமாகக் கொண்டை போட்டுக் கொள்கின்றனர். பெண்களுக்கான முக ஒப்பனையுடன் புடவை, ஜாக்கெட் முதலியன அணிந்து கொள்கின்றனர். கவர்ச்சிகரமாக இவர்கள் உடையணிவதில்லை. காலில் சதங்கை அணிகின்றனர். அண்ணாவி வேட்டி மற்றும் நீளக்கை ஜிப்பா அணிந்து இடுப்பில் துண்டினைக் கட்டியிருப்பார். மகுடம் அடிப்பவர்கள் பெரும்பாலும் சட்டை ஏதும் அணிவதில்லை. சிலர் சட்டை அணிவதுண்டு.

**பாடல்களும், கதைகளும் :**

கணியான் கூத்து அண்ணாவி பாட, பெண் வேடமிட்டவர்களால் மகுடாட்ட இசைக்கேற்ப ஆடப்படுகிறது. இதற்கான பாடல்கள் வாய்மொழியாகவே உள்ளன. பெரும்பாலும் சுடலைமாடன் அல்லது காளி தொடர்பான கதைகள் முதலிடம் பெறுகின்றன. கணியான் கூத்திலும் வில்லுப் பாட்டிலும் கட்டாயம் பாடப்படுபவை என்றும், கேள்விக்கதை என்றும் (மக்கள்

விரும்பிக் கேட்கும் கதை) இரண்டு வகை உள்ளன. விநாயகர் வணக்கம், குரு வணக்கம், சாஸ்தாக்கதை (அல்லது வல்லரக்கன் கதை அல்லது ஐயன் கதை) மாடன், அம்மன் கதை, வாலி முதலியவை கட்டாயம் பாடப்படுபவை. முத்துப்பட்டன் கதை, பார்வதி கல்யாணம், மீனாட்சியம்மை கல்யாணம், பாரதக் கதைகள், இராமாயணக் கதைகள், சிலப்பதிகாரக் கதை, அருணகிரிநாதர் கதை, சிறுத்தொண்டர் கதை, மார்க்கண்டேயர் கதை, ஐயப்பன் கதை, அரிச்சந்திரன் கதை, பட்டினத்தார் கதை முதலான கதைகள் கேள்விக் கதைகள் ஆகும்.

**இசைக் கருவிகள் :**

கணியான் கூத்தில் முதன்மை பெறுவது மகுடம் என்னும் இசைக் கருவியாகும். மகுடத்தில் மந்தம், உச்சம் என்று இரண்டு வகை உண்டு. மஞ்சனத்தி (நுணா), வேம்பு, பூவரசு போன்ற மரத்தால் மூன்று வளைவுகள் செய்து அவற்றை வட்ட வடிவில் இணைத்து அதன் மீது எருமைக் கன்று தோலால் போர்த்தி மகுடம் தயார் செய்யப்படுகிறது. மரவேலைகளை ஆசாரி செய்தாலும் தோல் வைத்துக் கட்டுவதை இவர்களே செய்து கொள்கின்றனர். உச்சத்திற்கு தோலிலுள்ள சவ்வை நீக்காமல் கட்டப்படும் என்றும், மந்தத்திற்கு சவ்வை நீக்கிக் கட்டப்படும் என்றும் கூறப்படுகிறது. புளியங்கொட்டையை ஊறவைத்து வேக வைத்து, அரைத்து பசையாக்கி அப்பசையைக் கொண்டு தோல்கள் ஒட்டப்பட்டு மகுடம் தயார் செய்யப் படுகிறது. மகுடத்தின் தோற்றம் தப்பினை ஒத்திருக்கும். ஆயினும் தோற்றத்தில் சிறு வேறுபாடும் அடிப்பதில் மிகுந்த வேறுபாடும் காணப்படும். தப்பினைக் குச்சிகளால் அடிப்பர். மகுடம் கைகளால் அடிக்கப்படுகிறது. மகுடத்தில் உச்சம் அல்லது உச்சக்கட்டம் ‘கணீர்’ என்ற ஒலியையும், மந்தம் அல்லது மந்தக் கட்டம் ‘தொம்’ என்ற ஒலியையும் எழுப்புகின்றன. உச்சக்கட்ட மகுடம் இரண்டும், மந்தக்கட்ட மகுடம் ஒன்றும் பொதுவாக ஒரு நிகழ்ச்சியில் பயன்படுத்தப்படுகிறது.

**கணியான் ஆட்டம் நிகழ்த்தும் முறை :**

அண்ணாவி கோயில் கருவறையின் எதிரே சற்று தூரத்தில் நின்று கொண்டு பாடலைப் பாடுவார். அப்போது பெண் வேடமிட்டவர்கள் அண்ணாவிக்கும், கருவறைக்கும் இடையில் நின்று ஆடுவர். பாட்டு இசையுடன் இருக்கும். மகுடம் வேகமாக உச்சநிலையில் அடிக்க அதற்கேற்ப

ஆட்டக்காரர்கள் சுழன்று ஆடுவர். பாட்டு முடிந்து அப்பாடலுக்கு விளக்கம் கூறும் போது ஆட்டக்காரர்கள் அவருக்கு இருபுறமும் வந்து நின்று கொள்வர். பின்பாட்டுக்காரர்களுடன் சேர்ந்து பாடுவதும், லேசாக உடலை அசைத்தும் ஆடுவது உண்டு. பாட்டுக்குத் தகுந்தவாறு மகுடம் அடிக்கப்பட்டாலும், ஒலி மிக அதிகமாகக் கேட்கும். அப்போது பின்பாட்டும் பாடுவர். எனவே, அண்ணாவியின் பாடலைப் புரிந்து கொள்வது சிரமமாக இருக்கும். கணியான் ஆட்டத்தில் நேர்க்கோட்டில் நின்று ஆடும் ஆட்டமே பெரும்பாலும் காணப்பட்டாலும், கும்மிப்பாட்டிற்கு வட்ட வடிவமாக நின்று ஆடும் ஆட்டமும் காணப்படுகிறது. கரகாட்டம் போல மெல்லத் தொடங்கி வேக நிலைக்குப் போய் இறுதியில் அதிவேக நிலையில் ஆடி தன்னைத்தானே சுற்றிச் சுழன்று ஆட்டத்தை முடிக்கின்றனர்.

**கைவெட்டு நிகழ்ச்சி :**

கணியான் ஆட்டம் வழிபாட்டுச் சடங்குக் கலையாக உள்ளது. சுடலைமாடன் கோயிலின் வழிபாட்டுச் சடங்கில் அறுபது வயதிற்கு மேற்பட்ட கணியான்கள் கைவெட்டு என்னும் நிகழ்ச்சியை நிகழ்த்துகின்றனர். கோயில் கருவறைக்கு முன்புறம் விரிக்கப்பட்டிருக்கும் வாழையிலையில் கணியான் தன் இடது கையின் கீழ்ப்பகுதியைக் கீறி, அதலிருந்து வெளிவரும் இரத்தத்தினைச் சொட்ட விடுகின்றார். முன்பு இருபத்தோரு சொட்டுக்கள் ரத்தம் விடப்படும் என்றும், தற்போது மூன்று சொட்டுகள் ரத்தம் விடப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. இந்நிகழ்ச்சி முடிந்த பின்னரே பிற உயிரினங்கள் பலியிடப்படும். இந்தக் கைவெட்டு நிகழ்ச்சி நடந்த நள்ளிரவில் சாமக்கொடை நடைபெறும். பலியிடப்பட்ட இரத்தத்தில் பிசைந்த பச்சரிசிச் சோறினை சுடுகாட்டுக்குச் சென்று அங்கிருந்தபடி மேல் திசையைத் தவிர ஏனைய திசைகளுக்கு எறியும் ‘திரளை கொடுத்தல்’ என்னும் நிகழ்ச்சியிலும் கணியான் முக்கிய பங்கு வகிக்கின்றார்.

கைவெட்டு என்பது போல நாக்கு வெட்டு நிகழ்ச்சியும் நடப்பதாகத் தெரிகிறது. நாக்கினைக் கீறி இரத்தம் சிந்த வைப்பதே இதன் நோக்கமாகும். இவையெல்லாம் முற்காலத்தில் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகள் நரபலியின் எச்சமாகலாம்.

**பேய் முகம் :**

கணியான்களிடம் மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் பூசப்பட்ட முகமூடி உள்ளது. இது ‘பேய் முகம்’ என்று சுட்டப்படுகிறது. முன்னர் குறிப்பிட்ட கணியான் தோற்றக் கதையிலிருந்து இது பிரம்மனின் முகம் என்று நம்பப் படுவதாகப் புரிந்து கொள்ள முடிகிறது. கைவெட்டு நிகழ்ச்சிக்குப் பிறகு சாமியாடிக்கு சாமி வராதபோது ஒரு கணியான் பேய் முகத்தினை முகத்தில் அணிந்து கொண்டு ஆட, சாமியாடி அருள் வந்து ஆடுவார் என்று கூறப்பட்டது.

இவ்வாறு பல நிலைகளில் கணியான்களும், அவர்களின் கூத்தும் சடங்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கணியான் கூத்துக்கள் இன்று மேடை நிகழ்ச்சிகளாக அருகிய நிலையில் நிகழ்த்தப் பட்டாலும், வழிபாட்டுச் சடங்குச் சூழலின் ஒட்டு மொத்த நிகழ்வையும் காணும் போது தான் இந்தக் கூற்றினை முழுமையாகப் புரிந்து கொள்ள இயலும்.

**வரலாறு கூறும் செய்திகள் :**

கணியான்கள் மற்றும் கணியான் கூத்துத் தொடர்பான வரலாற்றுச் செய்திகள் குறித்து அ.கா.பெருமாள் கூறியுள்ள கருத்துக்கள் நோக்கத் தக்கவை. இவர் கருத்துப்படி கணியான் ஆட்டத்தின் தாயகம் திருநெல்வேலி மாவட்டம் ஆகும். திருநெல்வேலி மாவட்டத்தின் பெரும்பாலான கோயில்களில் கணியான் ஆட்டம் நிகழ்வதாலும், கணியான் சாதியினர் இந்த மாவட்டத்தில் மட்டும் வாழ்வதாலும், இச்சாதியினரின் பழக்க வழக்கங்கள் இந்த மாவட்டத்திற்கு உரியதாகக் காணப்படுவதாலும், அவர் இந்த முடிவுக்கு வருகிறார். ஆனால் புகழ் பெற்ற வானமாமலை கணியான் என்பவர் கருத்துப்படி கணியான் சாதியினரின் பூர்வீகம் வட தமிழ்நாடு என்பதாகும். ஆர்க்காடு மாவட்டத்தில் தெருக்கூத்து நடத்தும் சாதியினரும், தாங்களும் ஒரே இனம் என்றும், பின்னால் கலை நிகழ்த்திய தன்மையில் வெவ்வேறு சாதிகளாக ஆகி விட்டோம் என்றும் அவர் கூறியுள்ளார். இதனையும் அ.கா. பெருமாள் தன் நூலில் கூறியுள்ளார். இது ஆய்வுக்குரிய கருத்தாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றிய முக்கூடற் பள்ளுவும், விறலிவிடுதூதும் கணியான் ஆட்டத்தைக் குறிப்பிடுகின்றன. விரலிவிடுதூது 16

ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. ஆதலால் கணியான் கூத்து அக்கால கட்டத்திற்கும் முற்பட்டது.

கணியான் கூத்தினை கணியான்கள் மட்டுமே ஆடுகின்றனர். சமீப காலத்திலே இக்கலை சடங்குச் சூழலை மீறிப் பிற சூழல்களில் நிகழ்த்தப் படுகிறது.

**3. களியல் ஆட்டம்**

கோல்களைக் கையில் பிடித்து ஆண்களும், பெண்களும் தனித்தனியாகவோ, ஒருங்கிணைந்தோ அடித்து ஆடும் ஆட்டம் களியல் ஆட்டம் என்று சுட்டப்படுகிறது. தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இந்த ஆட்டம் காணப்படுகிறது. ஒவ்வொரு பகுதியிலும் இந்த ஆட்டத்திற்கு வெவ்வேறு பெயர்கள் காணப்படுகின்றன. குமரி மாவட்டப் பகுதிகளில் களியல், களியல் மடி, களியல் அடி, ஆட்டம் என்றும், தஞ்சை மாவட்டப் பகுதிகளில் கிட்டியடித்தல், கிட்டியாட்டம், கிட்டியடியல் என்றும், திருச்சி மாவட்டப் பகுதிகளில் ஆண்கள் ஆடும் கோலாட்டம், ‘வைந்தானை ஆட்டம்’ என்றும் ஈழத்தில் வசந்தன் அல்லது வசந்தன் கூத்து என்றும், பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது. ஆயினும் கோலாட்டம் என்ற சொல்லே பரவலாக அறியப்பட்ட சொல்லாகக் காணப்படுகிறது.

**பெயர்க்காரணம் :**

கோலாட்டம் குறித்து வழங்கப்படும் வட்டாரச் சொற்கள் குறித்து ஆய்வாளர்கள் பலரும் மாறுபட்ட கருத்துக்களை முன் வைக்கின்றனர். குமரி மாவட்ட தென் தாமரைக் குளம் வட்டாரத்தை ஆய்வுக்களமாகக் கொண்டு ‘களியல் நடனம்’ குறித்து ஆய்வு செய்துள்ள ஆ.அன்னசெல்வம் அவ்வட்டாரத்தில் கழியல், களியல் என்ற இரண்டு சொற்களும் பயன்படுத்தப் படுகின்றன என்றும், ‘கழிகளை (கம்புகளை) கையில் பிடித்து அடித்து ஆடுவதால் கழியல் என்ற பெயரே பொருத்தமுடையது’ என்றும் கூறுகிறார். திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய களியல் ஆட்டம் குறித்து ஆய்வு செய்த கு.கதிரேசன் “பெண்கள் கோல் கொண்டு ஆடும் ஆட்டம் கோலாட்டம் என்று வழங்கப்பட்டு வருவதால் ஆண்கள் கோல் கொண்டு ஆடும் ஆட்டமும் கோலாட்டம் என்று தான் வழங்கியிருக்க

வேண்டுமே தவிர களியல் என்று வழங்கப்டுவதற்கு நியாயமில்லை. அதனால் களி என்ற வினையை மையமாக வைத்து விளங்கும் தன்மையால் இவ்வட்டாரத்திற்குக் களியல் ஆட்டம் என்பதே சரியான பெயராக அமைகிறது'' என்று குறிப்பிடுகிறார். படைத்தல், படையல், துவைத்தல் - துவையல், வடித்தல் - வடியல் என்பது போல களித்தல் - களியல் என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்பது இந்த ஆய்வாளரின் வாதம். கழி அடித்து ஆடுவதால் கழியல் ஆட்டம் என்று பெயர் பெற்றிருக்கலாம் என்றும், அது பின்னர் வழக்கில் களியல் ஆட்டம் எனத் திரிந்து வழங்கப்பட்டிருக்கலாம் என்றும் ஞா.ஸ்டீபன் குறிப்பிடுகிறார். வசந்த காலமாகிய சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் சிறப்பாக நிகழ்வதால் காலவாகு பெயராக 'வசந்தன்' என்ற பெயர் பெறுவதாயிற்று. கிராமங்களில் நடக்கும் வசந்த கால விளையாட்டு கோலாட்டம் என்று கலைக்களஞ்சியம் விளக்குகிறது. வசந்தன் என்ற சொல்லுக்கு இன்பம் என்று பொருள் உண்டு. அறுவடை முடிந்த பின்னர் உழவர் இன்ப நோக்கத்திற்காக ஆடும் இன்பக் கூத்தே வசந்தன் கூத்து. எப்படியிருப்பினும் கோல்களை அடித்து ஆண்களாலும், பெண்களாலும் தனித்தனியே அல்லது இணைந்து நிகழ்த்தப்படும் கோலாட்டம் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இலங்கைத் தமிழர்களிடையேயும் பரவலாகக் காணப்படுகிறது என்பதில் ஐயமில்லை.

**கோலாட்டம் நடைபெறும் இடங்கள் :**

கோலாட்டம் பொழுதுபோக்கினை நோக்கமாகக் கொண்ட ஆட்டமாகவே தமிழகத்தில் பரவலாகக் காணப்படுகிறது. குமரி மாவட்டத்தில் இந்துக்களின் கோயில் திருவிழாக்களில் கோலாட்டம் சிறப்பு நிகழ்ச்சியாக நிகழ்த்தப் படுகிறது. இறப்புச் சடங்கின் போது களியல் நிகழ்த்தப்பட்டு வந்ததாகவும், தற்போது நிகழ்த்தப்படவில்லை என்றும் தெரிகிறது. பூப்புச் சடங்கின் போது மிக அருகிய நிலையில் நிகழ்த்தப்படுகிறது. ஆசான்களின் கலைத்திறனைச் சோதிப்பதற்கான போட்டி நிகழ்ச்சிகளும் நிகழ்த்தப்படுவதுண்டு. கிறிஸ்துமஸ், உயிர்த்தெழுதல் போன்ற பண்டிகைக் காலங்களிலும் களியல் நிகழ்த்தப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. தற்போது மிக அருகிய நிலையிலேயே களியல் ஆட்டம் குமரி மாவட்டத்தில் காணப்படுகிறது என்று ஞா.ஸ்டீபன் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மோசஸ் என்னும் 81 வயது களியல் அடி ஆசான். நாகர்கோவிலைச் சுற்றியுள்ள கோயில்களில் களியல் அடி நிகழ்ச்சி நடத்த

மிகுதியாக அழைக்கின்றனர் என்றும் கூறினார். இந்துக் கோயில்களிலும் சென்று ஆடுவதுண்டு என்றும் தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் களியல் ஆட்டம் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள், திருவிழாக்கள், திருமணம், பூப்புனித நீராட்டு, கிரகப்பிரவேசம், வரவேற்பு விழாக்கள், வெற்றி விழாக்கள், பள்ளி கல்லூரி ஆண்டு விழாக்கள், வயது முதிர்ந்தவர்களின் இறப்பு நிகழ்ச்சிகள் போன்ற சூழல்களில் நிகழ்த்தப்படுகிறது. கிறித்தவர்கள் கிறிஸ்துமஸ் விழாக்களிலும், திருமணம் மற்றும் பிற விழாக்களிலும் இஸ்லாமியர் பெருநாட்கள், திருமண நிகழ்ச்சிகள், சுந்நத் கல்யாணம் முதலான நிகழ்ச்சிகளிலும் களியல் ஆட்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கின்றனர். நாடார் ஜாதி மக்களிடம் இவ்வாட்டம் மிகுதி. உயர் சாதி மக்கள் பானத்துக்கு ஆடுவது இழுக்கு என்ற கருத்தை உடையவர்கள். கோயில் விழாக்கள், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் கலை நிகழ்ச்சியாக இவர்கள் ஆடுகின்றனர். குறைந்த வருமானம் உள்ள மீனவர், ஆதி திராவிடர், சக்கிலியர் போன்றோர் முதியோர் இறப்பு நிகழ்ச்சிக் கொண்டாட்டங்கள், திருமணம் மற்றும் பிற விழாக்களிலும் பணம், உணவுப் பொருள் முதலானவற்றைப் பெற்று ஆடுகின்றனர். யாதவர், மறவர் போன்றவர்களுள் ஆட்டம் தெரிந்தவர்கள் குறைவாக உள்ளனர் என்றும் தெரிகிறது.

**கோல் :**

கோலாட்டம் நிகழ்த்துவதற்கு மிக முக்கியமான பொருள் கோல் ஆகும். இது அளவாலும், உருவாக்கப்படும் முறையாலும் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. தச்சு வேலைப்பாடு மிக்க வர்ணம் தீட்டி, பித்தளை பூண் மாட்டி, மணிகள் கோர்த்து, அலங்கரிக்கப்பட்ட கம்புகளுடன் ஆடிய கலைஞர்கள் இன்று கையில் கிடைக்கும் கம்புகளைக் கொண்டு ஆடுகின்றனர் என்று கு.கதிரேசன் குறிப்பிடுகிறார். கோலாட்டக் குச்சிகள், அடிக்கம்பு, சலங்கைக் கம்பு என்று குறிப்பிடப்படும்.

**இசைக் கருவிகள் :**

கோலாட்டத்தில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. குமரி மாவட்டப் பகுதிகளில் ஆர்மோனியம், மத்தளம், ஜால்ரா போண்டு வாத்தியம் பயன்படுத்தப்படுவதாகக் கூறப்பட்டது. தஞ்சை

மாவட்டத்தில் குந்தனம் என்னும் தோல் கருவி பயன்படுத்தப்படுகிறது. இது இல்லாத போது தவில் பயன்படுத்தப் படுகிறது. பாடல், கோலடி, குந்தளம், தாளம், கைதட்டல் போன்ற அனைத்தும் ஒருங்கிணைந்ததாக ஆட்டம் அமையும். பாடலும், பாடல் இசையும், கருவி இசையும், கோலடி இசையும் ஒருங்கிணைந்து சென்றால் மட்டுமே ஆட்டம் குழப்பம் இல்லாமல் நிகழும்.

**கோலாட்ட முறை :**

ஞா.ஸ்டீபன் குமரி மாவட்டக் களியல் ஆட்டமுறை பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். ‘‘களியல் கும்புடு அடவுடன் தொடங்கப்படும். இறைவனுக்கு அல்லது கலையைக் கற்றுக் கொடுத்த ஆசானுக்கு வணக்கம் செலுத்தும் அடவு கும்புடு அடவு ஆகும். களியலில் கோழிப்போர் அடவு, பஞ்சிவெட்டி அடவு, வள்ளி அடவு, நெல்குத்து அடவு, பாம்பு அடவு, கன்னிக் கொத்து அடவு, பட்டாளத்து அடவு எனப் பல அடவுகள் உள்ளன. இவ்வடவுப் பெயர்கள் பாடல்களின் உள்ளடக்கத்தின் அடிப்படையிலே அமைகின்றன. சான்றாகக் கோழிப்போர் அடவின் பாடல், இரு குழுக்கள் பந்தயம் கட்டி சேவல் கோழிகளை சண்டையிடச் செய்வது குறித்து அமையும். களியல் நிகழ்த்தப்படும்போது இவ்விடவினைக் கோழி சண்டையிடுவது போல் நிகழ்த்துவர். எனவே இதனைக் கோழிப்போர் அடவு என்பர். இவவாறே பிற அடவுகளும் பாடல்களின் உள்ளடக்கத்திற்கு ஏற்றபடி நிகழ்த்தப்படும்.

களியல் ஆட்டம் ஆரம்ப ஆட்டநிலை, தயார் ஆட்ட நிலை, சாதாரண ஆட்ட நிலை, வேக ஆட்ட நிலை, மின்னல் வேக ஆட்டநிலை, இறுதியாட்ட நிலை என்று ஆறு ஆட்ட நிலைகளைக் கொண்டு அமைகிறது. அவை ஒவ்வொன்றும் அதன் தன்மையில் வேறுபட்டு அமைகின்றன. குருவாட்டம், வணக்காட்டம், கப்பலாட்டம், அனுமான் ஆட்டம், கொக்கு ஆட்டம், இரட்டையாட்டம், கும்மிகளியல் ஆட்டம், ஒயில் களியல் ஆட்டம், மாரடி ஆட்டம் என்று பல வகைகள் கூறப்படினும் இன்னும் பல வகைகள் இருந்திருக்க வேண்டும். காலப் போக்கில் அவை அழிந்திருக்க வேண்டும். ஆட்டத்தின் முடிவு நிலை மங்களம் அல்லது வாழிப்பாடி ஆட்டம் ஆகும்.

**4. தோல்பாவை நிழற் கூத்து :**

உயிரற்ற பாவைகளை உயிருள்ள பாத்திரங்களைப் போல் இயக்கி மனிதரால் நிகழ்த்தப்படும் கூத்து பாவைக்கூத்து என்றழைக்கப்படுகிறது. இது

தோற்பாவைக் கூத்து, மரப்பாவைக் கூத்து என்று இரு வகைப்படும். பாவைகளை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட பெயர் வேறுபாடுகள் இவை. இவையேயன்றி கையுறை பாவைக்கூத்தும் உண்டு. இனி தமிழகத்தில் நடைபெறும் தோற்பாவை நிழற்கூத்துக் குறித்துக் காணலாம்.

**இக்கூத்தின் பெயர்க்காரணம் :**

தஞ்சையிலும், தஞ்சைக்குத் தெற்கே உள்ள மாவட்டங்களிலும் 'தோல்பாவைக்கூத்து' என்றும், தஞ்சைக்கு வடக்கே உள்ள மாவட்டங்களில் 'தோல் பொம்மலாட்டம்' என்றும் அழைக்கப்படுகிறது. பாவைகளைச் செய்வதற்கு ஆட்டுத்தோல் அல்லது மாட்டுத்தோல் பயன்படுத்தப்படுவதாலும், இக்கலை பாவையைத் திரைமறைவில் காட்டி நிழலாக்கிக் காட்டுவதாலும், 'தோற்பாவை நிழற்கூத்து' என்று அழைப்பது பொருத்தமாக இருக்கும்.

**தோற்பாவைக் கூத்துக் கலைஞர்கள் :**

தோற்பாவைக் கூத்துக் கலைஞர்கள் தஞ்சையில் மிக அருகிய நிலையில் உள்ளனர். புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, குமரி போன்ற தென் மாவட்டங்களில் பரவலாக இருக்கும். இவர்கள் மராட்டியைத் தாய் மொழியாகக் கொண்ட 'ராவ்' என்னும் வகுப்பினர் மகாராஷ்டிரத்திலிருந்து தஞ்சை மராட்டியர் காலத்தில் இங்கு குடிபெயர்ந்த இவ்வகுப்பினர் இப்போது தமிழர்களே ஆகிவிட்டனர்.

குடும்பத்திலுள்ள அனைத்து உறுப்பினர்களும் நிகழ்ச்சியில் வெவ்வேறு பொறுப்புகளை ஏற்கின்றனர். இவர்கள் வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று ஊர்ப் பொது இடத்தில் வட்ட வடிவிலான திறந்தவெளிக் கூடாரம் போட்டு, அதில் பொம்மலாட்ட மேடை அமைத்து, விளம்பரப்படுத்தி, கட்டணம் வசூல் செய்து நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். இதில் கிடைக்கக்கூடிய வருவாயை வைத்து அவர்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர். இவர்களின் நோக்கம் அன்றாட வாழ்க்கைக்கான பொருள் ஈட்டுவதேயாகும். பொழுதுபோக்கினை மையமாகக் கொண்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. வழிபாட்டுச் சடங்கோடு தொடர்புடையதாகக் காண முடியவில்லை. ஆனால் முன்னர் வழிபாட்டுச் சடங்கோடு தொடர்புடையதாக இருந்து தற்போது மாறியிருக்கலாம் என்று வெங்கடசாமி கூறுகிறார்.

**கூத்து நிகழ்த்துதல் :**

தோற்பாவைக்கூத்து நிகழ்த்துவதற்கு ஆறு பேர் தேவைப்படுவதாக 'தஞ்சை லெட்சுமிபாஸ் தோல் பொம்மலாட்டக் குழுவைச் சேர்ந்த கோவிந்தராவ் கூறினார்.

| | | |
|---|---|---|
| மிருதங்கம் | - | ஒருவர் |
| பெட்டி | - | ” |
| தாளம் / சால்ரா | - | ” |
| பக்கப்பாட்டு | - | ” |
| பொம்மையை ஆட்டி கதைவசனம் பேச | - | ” |
| பொம்மைகளை எடுத்துத் தர உதவியாளர் | - | ” |

பாவைகளை இயக்கும் கலைஞர்கள் திரைமறைவில் இருப்பர். பாவைகளை இயக்கிக் கொண்டே பாடி வசனம் பேசும் ஆற்றல் வாய்ந்தவர்கள் எத்தனை வயதுடையவராக இருந்தாலும் நிகழ்ச்சியை நடத்துவர். மரப்பாவைக் கூத்துக்கும் இது பொருந்தும்.

**தோற்பாவை செய்யப்படும் முறை :**

தோற்பாவைக் கூத்துக் கலைஞர்கள் தங்களுடைய நிகழ்த்துதல்களுக்குத் தேவையான தோற்பாவைகளைத் தாங்களே செய்து கொள்கின்றனர்.

தோற்பாவைகளைச் செய்வதற்கு ஆட்டுத்தோல் அல்லது மான்தோல் பயன்படுத்தப்படுகிறது. முரடாக இருக்குமாதலால் மாட்டுத்தோல் பயன்படுத்துவதில்லை. தோலை வாங்கிய உடனே பாவை செய்தால் நாற்றம் அடிக்கும். எலி கடித்து விடும். எனவே தோலை முதலில் பதப்படுத்துகின்றனர். தோலை வாங்கி மூன்று நாட்கள் சட்டியில் வைத்து நான்காவது நாள் தோலிலுள்ள உரோமங்களை நீக்கி பின்னர் தண்ணீரில் அலசி, சோப்புப் போட்டு நன்கு கசக்கி மீண்டும் அலசிக் காய வைப்பர். இவ்வாறு நான்கு நாட்கள் திரும்பத் திரும்ப செய்யப்படும் போது தோல் பஞ்சுபோல் ஆகிவிடும். பின்னர் முளைகள் அடித்துத் தோலை விரித்து இறுக்கமாகக் கட்டி உலர்த்தி, பின் கத்தியால் தோலிலுள்ள சவ்வுகளைச் சுரண்டி எடுத்து ஒளிபுகுமளவு மெலிதாக ஆக்கப்பட்ட அத்தோலை உப்புத்தாளால் தேய்த்து சுத்தப்படுத்துவர். இதனால் தமிழ்நாட்டுப் பாவைகள் ஒளிரும் தன்மை

கொண்டவையாக உள்ளன. இவ்வாறு தயார் செய்யப்பட்ட தோலில் வண்ணம் தீட்டி உருவம் வரைவர். உளியால் தட்டி அணிகள் போல் வெட்டி விரைப்புக்காக மூங்கில் பிளாச்சு வைத்தக் கட்டுவர். இப்பாவை ஒரே தோலில் செய்யப்பட்டிருக்கும்.

**கூத்து நிகழ்த்தப்படும் அரங்கு :**

தோற்பாவைக் கூத்து நடைபெறும் இடம் வட்ட வடிவமாக அமைந்திருக்கும். அங்கு கூத்தாட்டும் அரங்கம் அமைக்கப்படும் மேடையில் நீள உயர அகலங்கள் பார்வையாளர்களை மனதில் கொண்டு அவரவர் வசதிக்கேற்ப அமைக்கப்படுகிறது என்றும், இது குழுவுக்குக் குழு மாறுபடுகின்றது என்றும் தெரிகிறது. மேலும், தோற்பாவை நிழல் அசைவுகள் வாயிலாகக் கதை நிகழ்ச்சி சொல்லப்படுகிறது. ஆகவே, நிழல்கள் பார்வையாளர்களின் கண்களைக் கூசச் செய்யாமல் கூத்தை நன்கு சுவைக்கத் தூண்டுவனவாக அமைதல் வேண்டும். அதற்கேற்ப விளக்கை மாட்டி அரங்கம் அமைக்கப்படும். இந்த அரங்கத்தில் கதைக்கு ஏற்றாற்போல் பாத்திர முறைப்படி பாவைகளை வரிசையாக அடுக்கி வைத்துக் கொள்கிறார் நிகழ்த்துநர்.

**கதைகளும், பாடல்களும் :**

தோற்பாவைக் கூத்துகளில் இராமாயணக் கதைகளே மிகுதியாக நிகழ்த்தப்படுகின்றன. ஞானசவுந்தரி, ஐயப்பன், நல்லதங்காள் கதைகளும் நிகழ்த்தப்படுகின்றன. தஞ்சாவூர் பொம்மலாட்டக் குழுவைச் சேர்ந்த கோவிந்தராவ் இராமர் பிறப்பிலிருந்து பட்டாபிஷேகம் வரை பதினொரு நாட்களில் முடிக்கலாம் என்றும், தினமும் இரவில் நான்கு மணி நேரம் அல்லது ஆறு மணி நேரம் நடத்த வேண்டும் என்றும் கூறினார். இராமாயணத்தோடு தொடர்புடைய மயில் இராவணன் கதை, இராமர் அசுவமேதயாகம், லவகுசா முதலான கதைகளும் நிகழ்த்தப்படுகின்றன.

தோற்பாவைக் கூத்துக்கான பாடல்கள் அந்தந்த குழுவைச் சேர்ந்த கலைகஞர்களாலேயே உருவாக்கப்படுகின்றன. இடையிடையே தெருக்கூத்துப் பாடல்கள், தெம்மாங்குப் பாடல்கள், திரைப்பாடல்கள் முதலியன இணைக்கப் படுகின்றன என்பதை அறிய முடிகிறது. பாவையை ஆட்டுபவர் பாத்திரங்களின் தன்மைக்கேற்பக் குரலை மாற்றிப் பேசுவதில் வல்லவராக உள்ளார். இவர் திரைமறைவில் அமர்ந்தவாறே பாவைகளை இயக்க, இசைக் கலைஞர்கள் வெளியில் இருப்பர். பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் நிகழ்ச்சி நடத்தப்படும். தற்போது மின் விளக்குகளும் பயன்படுத்தப்படுகின்றன.

கூத்து நிகழ்ச்சி பொதுவாகப் பின்வருமாறு அமைந்திருக்கும்.

1. கடவுள் வாழ்த்து
2. கோமாளி (பபூன் தன்னறிமுகப் பாடல்)
3. கூத்து அறிமுகம்
4. நகைச்சுவைக் காட்சி
5. கதை ஆரம்பப் பாடல்
6. கதை நிகழ்ச்சி
7. நகைச்சுவைக் காட்சி
8. கதை முடிவு

உச்சிக்குடும்பன், உழுவத் தலையன் என்னும் பாத்திரங்களின் நகைச்சுவைக் காட்சியும், பாவைகளின் வேகமான இயக்கங்களும் சிறுவர்களை மகிழ்விக்கக் கூடியவையாக அமைந்துள்ளன.

தோற்பாவைக் கூத்தின் பழமை குறித்து நமக்குக் கிடைக்கும் முதல் சான்று திருவாசகம் தான்.

**கூத்து நிகழ்த்தப்படும் இடங்கள் :**

தோற்பாவை நிழற்கூத்து தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஒரிசா ஆகிய இந்தியாவின் தென் மாநிலங்களில் மட்டுமே காணப்படுகின்றது. கேரளாவில் இக்கலை பாவக்களி, தோற்பாவைக் கூத்து, பாவக்கதகளி, ஓலப்பாவைக்கூத்து என்ற சொற்களால் சுட்டப்படுகிறது. ஆந்திராவில் தொகலு, பொம்மலாட்டா என்றும், கர்நாடகத்தில் தொகலு, பொம்பே ஆடா அல்லது சக்கல கொம்பே ஆடா என்றும், ஒரிசாவில் ராவன்சாயா என்றும் சுட்டப்படுகிறது.

கொங்கனி, ஒரிசா, ஆந்திரம், கர்நாடகம், தமிழகம் ஆகிய பகுதிகளில் அவ்வப்பகுதி மொழிகளில் தோற்பாவை நிழற் கூத்தை இன்னமும் நிகழ்த்திக் கொண்டிருப்பவர்கள் மராட்டிய பூர்வீகமுடையவர்கள்தான்.

தோற்பாவை நிழற்கூத்து பெரும்பாலும் குடும்பக் கலையாக இருப்பதால் வழிவழியாக தந்தைக்குப் பின் மகன் என்ற நிலையில் கற்றுக் கொள்கின்றனர்.

இன்றைய நிலையில் போற்றுவாரற்று மறைந்து வரும் கலையாகத் தோற்பாவைக் கூத்து உள்ளது. பனிரெண்டு குடும்பங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் குறைந்தவர்களே இக்கலையை நிகழ்த்தி வருவதாகத் தெரிகிறது.

**பயிற்சி வினாக்கள் :**

## I. ஒரு பக்க வினா :

1. ‘வில்லுப்பாட்டு’ என்றால் என்ன?
2. வில்லுப்பாட்டு ஒரு வழிபாட்டுச் சடங்குக்கலை என்பதை அ.கா.பெருமாள் கூறும் காரணங்களை எழுதுக.
3. கணியான்களின் நிலை குறித்துக் கூறுக.
4. “தோல் பாவை நிழற் கூத்து” பெயர்க்காரணம் தருக.

## II. மூன்று பக்க வினா :

6. வில்லுப்பாட்டின் இசைக் கருவிகள் பற்றி விளக்குக.
7. கணியான் ஆட்டம் நிகழ்த்தும் முறையினை விவரிக்க.
8. “களியல் ஆட்டம்” பற்றி கட்டுரை ஒன்று வரைக.

# B. Litt. DEGREE EXAMINATION

**நாட்டுப்புறவியல்**

**Time : Three Hours** **Maximum : 80 Marks**

**பகுதி - அ (5 x 4 = 20 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

1. நாட்டுப்புறவியல் என்றால் என்ன?
2. “Folk Lore” அகராதிப் பொருள் கூறுக.
3. வாய்மொழி சாரா வழக்காறுகள் யாவை?
4. தாலாட்டுப் பாடல்கள் என்றால் என்ன?
5. விடுகதையின் கலைச்சொற்களைக் குறிப்பிடுக.
6. முதன்மை உணவுகள் யாவை?
7. கணியான்களின் நிலை குறித்துக் கூறுக.
8. “தோல் பாவை நிழற்கூத்து” - பெயர்க்காரணம் கூறுக.

**பகுதி - ஆ (5 x 12 = 60 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.**

9. நாட்டுப்புறவியல் சில வரையறைகள் குறித்து அறிஞர்களின் கருத்துக்களை விளக்குக.
10. பொருள்சார் பண்பாட்டினைக் கூறுக.
11. தெம்மாங்குப் பாடல்களில் காதல் பெறும் இடத்தை மதிப்பிடுக.
12. ஒப்பாரிப் பாடல்கள் குறித்து விளக்குக.
13. நாட்டுப்புற மக்களின் உணவு பழக்க வழக்கங்கள் குறித்து விளக்குக.
14. நாட்டுப்புற மக்களின் அணிகலன்களின் முக்கியத்துவத்தைக் கூறுக.
15. வில்லுப்பாட்டின் இசைக் கருவிகள் பற்றி விளக்குக.
16. களியல் ஆட்டம் பற்றி கட்டுரை ஒன்று வரைக.

**முனைவர். மா. முத்துசாமி**
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
வ.உ.சி கல்லூரி
தூத்துக்குடி